

முடிவை மாற்றிய மிர்சா

பக்கம் 18

உதயன்

சுடர்: 29 கதிர்: 293 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 30, திங்கள் 15.09.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

பக்கங்கள்

யாழ். - 20/=

வன்னி - 20/=

தெளிவான வானிலை

காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று km/h

ஈரப்பதம்: 48%

காற்றமுத்தம்: 1008 hPa

வெளிச்சத் தெளிவு: மிக நன்று

சூரியோதயம்: 05:23

சூரியஸ்தமனம்: 18:04

# இந்தியாவின் விசாரணைக்கு இலங்கை முழு ஒத்துழைப்பு

## பாகிஸ்தான் உளவாளியான இலங்கைத் தமிழர் குறித்து விசாரிக்க

கொழும்பு, செப்ரெம்பர் 15

சென்னை உட்பட தமிழகத்தின் பல இடங்களில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துவதற்கு சாதகமாக உள்ள இடங்கள் தொடர்பில் பாகிஸ்தான் உளவு அமைப்புக்கு தகவல் வழங்கினார் என சந்தேகிக்கப்படும் இலங்கைத் தமிழர் அருண் செல்வராஜா தொடர்பில் இந்தியப் புலனாய்வுத் துறை முன்னெடுத்து வரும் விசாரணைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று இலங்கை பொலிஸார் நேற்று அறிவித்தனர்.

அத்துடன், இது சம்பந்தமாக மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதற்காக இந்திய புலனாய்வுத் துறையினர் இலங்கை வருவார்களாயின், அவர்களுக்குத் தேவையான அனைத்துவித ஒத்துழைப்பும் வழங்கப்படும் - என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண நேற்று 'உதயனி'டம் தெரிவித்தார்.

சென்னையில் பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்குள் சென்று உளவு பார்த்ததாக சந்தேகிக்கப்படும் இலங்கைத் தமிழரான பாகிஸ்தான் உளவாளி அருண் செல்வராஜாவை இந்திய தேசியப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் கடந்த புதன்கிழமை கைது செய்தனர்.

அருணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இருந்து பல்வேறு தகவல்கள் வெளியாகியுள்ளன. அத்துடன், உளவாளியாகச் செயற்பட்ட அவர் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறும் வகையில் இலங்கையில் விசாரணைகளை மேற்கொள் வதற்காக விசாரணைக் குழுவொன்றை கொழும்புக்கு அனுப்பிவைக்க இந்திய தேசிய புலனாய்வு முகவர் நிலையம் உள்துறை அமைச்சரிடம் அனுமதி கோரியுள்ளது.



இந்த நிலையில், சென்னையில் கைது செய்யப்பட்ட இலங்கைப் பிரஜை தொடர்பில் இந்திய புலனாய்வுத் துறை இலங்

22 ஆம் பக்கம் பார்க்க

## புலமைப்பரிசில் பெறுபேறுகள் மாத இறுதியில்

யாழ்ப்பாணம், செப் 15

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் இந்த மாத இறுதியில் வெளியாகுமென்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் 17 ஆம் திகதி இடம்பெற்ற இப்பரீட்சைக்கு சுமார் 3 லட்சம் மாணவர்கள் தோற்றியிருந்தனர். பரீட்சார்த்திகளின் வினாத்தாள்கள் திருத்தும் பணிகள் நிறைவுற்றுள்ளன. விரைவில் அவை வெளியிடப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே. புஸ்பகுமார தெரிவித்துள்ளார். (த-4)

## குடு பேபி கைது

யாழ்ப்பாணம், செப் 15

நீண்ட நாள்களாகப் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டுவருபவரெனக் கூறப்படும் பேபி என்றழைக்கப்படும் நபர் குடு போதைப்பொருளுடன் யாழ். ஐந்து சந்தியில் வைத்துக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். ஐந்து சந்தியைச் சேர்ந்த குறித்த நபர் தொடர்ந்து அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவர் என்றும், ஆனால் அவர் பொலிஸாரிடம் சிக்காமல் தனது விற்

22 ஆம் பக்கம் பார்க்க

## டெங்கு அபாயத்தால் மூடப்படுகிறது யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடம்

யாழ்ப்பாணம், செப் 15

யாழ்.பல்கலைக்கழகத்தில் டெங்கு தொற்றுவது சடுதியாக அதிகரித்துள்ளது. அதனால் கலைப்பீடத்தின் முதலாம் வருட, இறுதி வருடப் பிரிவுகள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாகப் பல்கலைக்கழகத் தரப்புத் தெரிவித்துள்ளது.

சில வாரங்களுக்கு முன்னரே 6 பேருக்கு டெங்கு தொற்றி அவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த நிலையில் டெங்குத் தொற்று மேலும் அதிகரித்துள்ளது. இதனால் டெங்கு ஏனைய மாணவர்களுக்கும் பரவுவதனைத் தடுக்கும் வகையில் மறு அறிவித்தல் வரை பல்கலைக்கழகத்தில் குறித்த இரண்டு வருடப் பிரிவுகளும் மூடப்பட்டுள்ளன. (த-4)

## ஓட்டோக்களில் மேலதிக கண்ணாடி அவதானமாக இருங்கள் பெண்களே



யாழ்ப்பாணம், செப் 15

பயணிகளின் அந்தரங்க உறுப்புகள், உள்ளாடைகளைப் பார்வையிடுவதற்காகச் சில ஓட்டோக்களில் மேலதிக கண்ணாடிகள் பொருத்தப்பட்டுள்ளன. அதனை அவதானித்துச் செயற்படுமாறு ஓட்டோக்களில் பயணிப்பவர்களுக்குப் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

22 ஆம் பக்கம் பார்க்க

## பருத்தித்துறைக் கடற்கரையில் ஆணின் சடலம் நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், செப்.15

பருத்தித்துறைக் கடற்கரையில் இருந்து உடல் உருக்குலைந்த நிலையில் 50 வயது மதிக்கத்தக்க ஆணொருவரின் சடலம் நேற்றுக் காலை பருத்தித்துறை பொலிஸாரால் மீட்கப்பட்டுப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.



சடலம் இன்னும் அடையாளம் காணப்படவில்லை என்றும் பொலிஸார் கூறினர். நேற்றுக் காலை 7.30 மணியளவில் தொழில் நிமித்தம்

22 ஆம் பக்கம் பார்க்க

## துப்பாக்கி ரவை வெடித்து 10 வயதுச் சிறுவன் காயம்

### கிளிநொச்சி பாரதிபுரத்தில்

கிளிநொச்சி, செப் 15

கிளிநொச்சி பாரதிபுரத்தில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் அகப்பட்டு 10 வயதுச் சிறுவன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

மேற்படி சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது:-

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் குப்பைக்குத் தீமூட்டப்பட்டபோது அதனுள் இருந்த துப்பாக்கி ரவை வெடித்ததில் பாரதிபுரத்தைச் சேர்ந்த இராஜ்குமார் - டினோசன் என்ற 10 வயதுச் சிறுவன் காலில் காய

22 ஆம் பக்கம் பார்க்க

## 366 தேர்தல் முறைப்பாடுகள்

கொழும்பு, செப். 15

மாகாண சபைத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் பதுளை, மொனறாகலை ஆகிய மாவட்டங்களில் இதுவரை 366 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதோடு வன்முறையுடன் கூடியதாக 20 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகக் கபே அமைப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கபே வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அரச சொத்துக்களைத் துஷ்பிரயோகம் செய்கின்றமை, அரச அதிகாரிகளைத் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்துகின்றமை, இடமாற்றங்கள் நியமனங்கள் மற்றும் சட்ட விரோத தேர்தல் பிரசாரங்கள் என 292 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. கைகலப்பு, அச்சுறுத்தல், சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தல், சட்ட விரோத தேர்தல் பிரசார நடவடிக்கைகள் என 74 முறைப்பாடுகளும் ஆக மொத்தத்தில் 366 முறைப் பாடுகள் பதிவாகியுள்ளன.



இவற்றில் அதிகமான முறைப்பாடுகள் அரச கட்சிகளாலும் அரச ஆதரவாளர்களாலுமே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன-என்றுள்ளது. (த-4)

## இலங்கை மீனவர்கள் 10 பேர் கைது

சென்னை, செப்.15

சென்னையிலிருந்து 12 மைல் கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இலங்கை மீனவர்கள் 10 பேர் 2 படகுகளுடன் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

தென்னிலங்கைப் பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் காற்றுத்திசை மாறி சென்னைக் கடற்பரப்புக்குள் சென்றவேளை கடலோரக் காவல் படையினர் மீனவர்களையும் படகுகளையும் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட மீனவர்கள் இன்று நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர். (த-14)

## யாழ்ப்பாணம் - கொழும்பு பஸ்ஸில் கஞ்சாப் பொதி

### மூவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், செப். 15

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்ற பஸ்ஸிலிருந்து நேற்றுமுன்தினம் மீட்கப்பட்ட கஞ்சா திட்டமிட்டுப் பார்சலாகக் குறித்த பஸ்ஸில் அனுப்பப்பட்டுள்ளது என்று ஆரம்ப விசாரணையில் தெரிய வந்துள்ளது. இதனையடுத்து அந்த பஸ்ஸின் சாரதி, நடத்துநர் மற்றும் பார்சலை வாங் கியவர் ஆகிய மூவரும் கைது செய்யப்பட்டு எதிர்வரும் திங் கட்கிழமை வரை விளக்க மறி யலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித் தனர்.

விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலையடுத்து கனகராயன்குளம் பகுதியில் வைத்து நள்ளிரவு 12 மணியளவில் விசேட அதிரடிப்படை

22 ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தான்தோன்றீஸ்வரர் தேர்ச் சில்லில் அகப்பட்டு ஒருவர் பரிதாபமாக சாவு

## நான்கு பேர் படுகாயம்

களுவாஞ்சிகுடி, செப். 15
மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற சிவன் ஆலயங்களில் ஒன்றான தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் தேரோட்ட உற்சவத்தின்போது தேர்ச்சில்லில் அகப்பட்டு நேற்று பிற்பகல் 5.30 மணியளவில் ஒருவர் உயிரிழந்தார்.
முனைக்காடு வாசியான எஸ். ஜீவானந்தம் (வயது 42) என்பவரே தேர்ச் சில்லில் அகப்பட்டு உயிரிழந்தவராவர்.
காயமடைந்த நால்வர் உடனடியாக மகிழடித்தீவு பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.
தேர் ஆலய உள் வீதியில் இழுத்து வரப்படும்போது அக்கினி மூலையில் வைத்து ஜீவானந்தம் தேரின் பின்புறச் சில்லுக்குள் அகப்பட்டு உயிரிழந்தார்.
மழை பெய்து கொண்டிருந்ததால் ஜீவானந்தமும் காயமடைந்த ஏனைய நால்வரும் வழுக்கி விழுந்து தேரின் சில்லுக்குள் அகப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகின்றது.
தான்தோன்றீஸ்வரர் ஆலய தேரோட்ட உற்சவ வரலாற்றில் தேர்ச் சில்லுக்குள் அகப்பட்டு ஒருவர் உயிரிழந்திருப்பது இதுவே முதன் முறையாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.
இந்தச் சம்பவம் குறித்து கொக்கட்டிச்சோலைப் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.
கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த தீர்த்தோற்சவம் இன்று திங்கட்கிழமை இடம்பெறவிருக்கிறது. (த-32)

# எமிரேட்ஸில் நீரில் மூழ்கி இலங்கையர் இருவர் சாவு

கொழும்பு, செப். 15
ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் (எமிரேட்ஸ்) உம் அல் குவைன் பிரதேசத்தில் நீரில் மூழ்கி இலங்கையர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.
வெவ்வேறு இடங்களில் நீந்திக் கொண்டிருந்தபோது அனர்த்தத்துக்கு முகங்கொடுத்த இருவரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.
23 வயதுடைய இளைஞர் இலங்கையர் ஒருவர் தனது நண்பர்களுடன் ஹோட்டல் ஒன்றிலுள்ள நீச்சல் தடாகத்தில், கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு நீந்தியுள்ளார். பின்னர் அவரது நண்பர்கள் தமது அறைக்குத் திரும்பியுள்ளனர்.
இதன்பின்னர் குறித்த இளைஞர் அடுத்தநாள் காலை நீச்சல் தடாகத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
குறித்த இளைஞர் இரவு அதிக நேரம் நீந்தியமை காரணமாக நீரில் மூழ்கியதை அடுத்து, காலை நீச்சல் தடாகத்தில் சடலமாக மிதந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
இதேவேளை, மற்றுமொரு 20 வயதுடைய இலங்கையர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை மாலை கடலில் நீந்தியபோது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.
குறித்த இளைஞர் நீரில் மூழ்கித் தத்தளித்து கொண்டிருந்த வேளை மீட்கப்பட்டுக் கவலைக்கிடமான நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது உயிரிழந்துள்ளார். (த)

## தென்னாசியாவின் சூதாட்ட மையமாகின்றது கொழும்பு

*இந்திய நாளிதழ் தகவல்*

இந்தியாவில் சூதாட்டத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் இதன் காரணமாக இந்தியர்கள் பலர் சூதாடுவதற்காகவே கொழும்புக்குச் செல்கின்றனர் என்றும் இந்திய செய்தித்தாள் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
இது குறித்து அந்த நாளிதழ் வெளியிட்டுள்ள செய்தியில், ஹைதராபாத் விடுதிகளில் சூதாடுவதற்கு எதிராகப் பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளனர். இதனால் பணவசதியுள்ளவர்கள் சூதாட்டத்துக்காக இலங்கை செல்கின்றனர். இதேபோன்று தெலுங்கான முதலமைச்சர், விடுதிகளில் சூதாட்டம் இடம்பெறுவதற்கு அனுமதிக்கவேண்டாம் என்றும், அப்படி சம்பவங்கள் நடைபெற்றால் அதற்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பொலிஸாருக்கு கடும் உத்தரவைப் பிறப்பித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.
இதனை தொடர்ந்து சூதாட்டம் இடம்பெற்ற விடுதிகள் பல தெலுங்கானாவில் மூடப்பட்டுள்ளன. இதனால் சூதாட்டத்தில் ஆர்வம் உள்ளவர்கள் வெளிமாநிலங்களுக்கு செல்லும் அதேவேளை பணவசதி படைத்தவர்கள் இலங்கை செல்கின்றனர் என்றும், இலங்கையில் உல்லாசப் பயணம், பொலிஸ் தொந்தரவுகள் இல்லாத சூழ்நிலை போன்றவற்றால் சூதாட்டப் பிரியர்களுக்கு இலங்கை மிகவும் விருப்பமான நாடாகக் காணப்படுகின்றது என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)



கிழக்கில் தேரோடும் கோயில் எனப் புகழ் பெற்ற மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலை ஸ்ரீ திருத் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வடம்பிடித்து தேர் இழுத்தனர். (த-32)

# நியூயோர்க்கில் முக்கிய தலைவர்களை எதிர்கொள்கின்றார் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு, செப். 15
இலங்கையில் போர்க்குற்ற விசாரணைகளுக்கு தொடர்ச்சியாக வலியுறுத்திவரும் கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் பிரதமர்களை நியூயோர்க்கில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரடியாக எதிர்கொள்ளவுள்ளார்.
ஐ.நாவின் பொதுச் சபைக் கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக நியூயோர்க் செல்லவுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அங்கு பொதுநலவாய தலைவர்களின் கூட்டத்துக்கும் தலைமை தாங்கவுள்ளார்.
இதன்போது மஹிந்தவைக் கடுமையாக விமர்சித்துவரும் கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் மற்றும் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் ஆகியோரை அவர் நேருக்குநேர் எதிர்கொள்வார்.
ஐ.நா. கூட்டத்தொடருக்கு வெளியே இடம்பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாட்டிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது. ஹார்பர் கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டை புறக்கணித்ததும், மாநாட்டில் கலந்து கொண்ட டேவிட் கமரூன் இலங்கையைக் கடுமையாக விமர்சித்ததும் குறிப்பிடத்தக்கது. (த)

# தஞ்சமடைந்த பாக். அகதிகளை நாடு கடத்துவதற்கு எதிராக மனு

கொழும்பு, செப் 15
இலங்கை அரசு தமது நாட்டில் தஞ்சம் கோரியுள்ள பாகிஸ்தான், ஆப்கான் மற்றும் ஈரானியர்களை மீண்டும் திருப்பி அனுப்ப ஆரம்பித்திருப்பதை தடுக்குமாறு கோரி உயர்நீதி மன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
முதலில் இலங்கையின் மேன்முறையீட்டு நீதிமன்றம் இவர்களை நாடு கடத்த அனுமதி வழங்கியிருந்தபோதிலும், அவர்களில் சிலரை இலங்கை அரசு விடுதலை செய்திருந்தது.
அதனை அகதிகளின் சட்டத்தரணி முன்னதாகப் பாராட்டியும் இருந்தார். ஆனால், தற்போது இலங்கை அரசு அந்த தஞ்சம் கோரிகளை மீண்டும் நாடு கடத்தத் தொடங்கியுள்ளது.
இதனையடுத்தே அகதிகளுக்கான சட்டத்தரணிகளால், அந்த நாடு கடத்தும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துமாறு கொழும்பு உயர்நீதி மன்றத்தில் மனுச் செய்யப்பட்டுள்ளது.
இந்த மனு செப்ரெம்பர் 29 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாக அகதிகளின் சார்பிலான சட்டத்தரணியான லக்ஷன் டயஸ் கூறியுள்ளார்.
மேலும், மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கு முடிவுக்கு வந்ததன் பின்னர் இலங்கை பாதுகாப்பு அமைச்சுக்கும், ஐ.நாவின் அகதிகளுக்கான அமைப்புக்கும் இடையே ஒரு உடன்பாடு ஏற்பட்டது.
அதன்படி, பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள குடிவரவுத் திணைக்களம் ஆள்களை தற்போதைக்கு நாடு கடத்தாது என்று உறுதி வழங்கப்பட்டது. ஆனால், அந்த வாக்குறுதி மீறப்பட்டு, அந்த உடன்பாடு ஏற்பட்டு சில தினங்களிலேயே குடிவரவு திணைக்களம் ஆள்களைச் சிறிது சிறிதாக நாடு கடத்தத் தொடங்கியுள்ளது என்று லக்ஷன் டயஸ் குறிப்பிட்டார்.
இது சர்வதேச நியமங்களை மீறும் ஒரு செயலாகும் என்றும் அவர் கவலை வெளியிட்டார்.
இதன் காரணமாக அகதிகளுக்கான ஐ.நா அமைப்பான யூ.என்.எச்.சி.ஆர் அவர்களை நாடு கடத்த வேண்டாம் என்று கோரும் தமது மூன்றாவது வலுவான கோரிக்கைக் கடிதத்தை வெளியிட்டுள்ளது என்றார்.
இந்த தஞ்சக் கோரிக்கையாளர்களை இங்கேயே தடுத்து வைப்பதற்கான முகாம் ஒன்றை ஏற்பாடு செய்வது தொடர்பில் அரசுக்கும், யூ.என்.எச்.சி. ஆருக்கும் இடையில் ஒரு இணக்கம் ஏற்பட்டால், சமூக அமைப்புக்களும் அதற்கு உதவ தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார். (த)

# தமிழக அகதி முகாம்களில் கெடுபிடியில் பொலிஸார்

சென்னை, செப். 15
தமிழகத்தில் 112 முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகளின் நிர்வாகிகள் ஓரிடத்தில் சந்திப்பதற்கு கியூ பிரிவு பொலிஸார் அனுமதி மறுத்துள்ளதாக அகதிகள் முகாமை சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.
புதுக்கோட்டை மாவட்டத்தில் தோப்புக்கொல்லை இலங்கை அகதிகள் முகாமில் சுமார் 1600 பேர், லெணாவிலக்கில் 1500 பேர் மற்றும் அழியாநிலையில் 800 பேர் என மொத்தம் 3900 பேர் உட்பட தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 112 முகாம்களில் 66ஆயிரத்து 491 பேர் வசித்து வருகின்றனர்.
தமிழத்தில் உள்ள முகாம் மக்களை ஒருங்கிணைத்து ஒரு அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் இங்குள்ள முகாம் மற்றும் இலங்கையில் உள்ள பிரச்சினை தொடர்பாக முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றி அதை மத்திய, மாநில அரசுகளின் கவனத்துக்கு கொண்டு செல்வதற்காக அனைத்து முகாம் மக்களின் சார்பில் புதுக்கோட்டையில் கடந்த திங்கட்கிழமை ஆலோசனைக் கூட்டம் நடத்த திட்டமிட்டு அதற்கான பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளனர்.
ஆனால், இதற்கு கியூ பிரிவு பொலிஸார் திடீரென அனுமதி மறுத்துள்ளதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.
இது குறித்து புதுக்கோட்டை மாவட்டம் தோப்புக்கொல்லை முகாமைச் சேர்ந்த விழா ஏற்பாட்டாளர்கள் கூறியது,
பல ஆண்டுகளாக தமிழகத்தில் சுதந்திரமின்றி முகாம்களில் தங்கியுள்ளோம். மத்திய, மாநில அரசுகள் நேரடியாகவும், தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் எங்களுக்கு உதவிகள் செய்து வருகின்றனர்.
அதில் சில தொண்டு நிறுவனங்கள் அவர்களுடைய பணிகளைச் சரிவர செய்வதில்லை.
இது ஒருபுறமிருக்க தற்போது எங்களை முகாம்களில் இருக்கவிடாமல் இங்கிருந்து இலங்கைக்கு அனுப்பும் நடவடிக்கையில் மறைமுகமாக ஈடுபட்டுவருகின்றனர்.
இதனால் விரக்தி அடைந்து வேறு நாடுகளுக்குச் செல்ல முயன்ற தோப்புக்கொல்லை முகாமைச் சேர்ந்த 11 பேரின் நிலைமை என்ன ஆனதென்றே தெரியவில்லை. இதே நிலை தமிழகத்தில் உள்ள அனைத்து முகாம்களிலும் உள்ளன.
இலங்கையில் நாங்கள் வாழ்ந்த பகுதியில் அந்நாட்டு அரசு இராணுவத்தை குவித்து வைத்துள்ளதால் நாங்கள் அங்கு சென்று எப்படி வாழ முடியும்.
இதேபோல அனைத்து முகாம்களிலும் உள்ள பிரச்சினைகள், இலங்கையில் தற்போதைய நிலைமைகள் குறித்து தமிழகத்தில் உள்ள அனைத்து முகாமைச் சேர்ந்த நிர்வாகிகள் ஓரிடத்தில் கூடிப் பேசத் திட்டமிட்டிருந்தோம்.
அத்தோடு, இலங்கையில் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். இரட்டைக்குடியுரிமை வழங்க வேண்டும். அகதிகள் மாணவர்களுக்கு உயர்கல்வி படிக்க மாநில அரசு சலுகை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட10 அம்சக் கோரிக்கைகளை பேசி அதை அரசுக்கு தெரிவிக்கவே இந்த ஏற்பாட்டில் ஈடுபட்டுள்ளோம்.
இதற்காக புதுக்கோட்டை பல்நோக்கு சமூக சேவை மன்றத்தில் நாளை(இன்று) திங்கட்கிழமை கூட்டத்தை நடத்த முன் பணமும் செலுத்திவிட்டோம். ஆனால், அன்றைய தினம் கூட்டம் நடத்தக் கியூ பிரிவு பொலிஸார் அனுமதி மறுத்து வருகின்றனர்.
தற்போது பல்நோக்கு சேவை மையத்தினரும் இங்கு நடத்தக்கூடாது என்று நாங்கள் செலுத்திய முன்பணத்தை வாங்கிக் கொள்ளுமாறு நிர்பந்தித்து வருகின்றனர்.
வேறு வழி இல்லாமல் அனுமதி கோரி சென்னையில் உள்ள இலங்கை அகதிகளின் ஆணையருக்கு மனு அனுப்பியுள்ளோம். விடுமுறை நாள்கள் என்பதால் ஆணையரின் அனுமதி கிடைப்பது சாத்தியமில்லாமல் உள்ளது.
வேறொரு திகதி கொடுத்தாலும் நடத்திக்கொள்கிறோம். முற்றிலும் மறுக்கப்பட்டால் அனைத்து முகாம்களில் இருந்தும் ஆணையரிடம் நேரில் முறையிடதிட்டமிட்டுள்ளோம்-என்றனர். (த)

# உதயன்

கிளாசிக்

விலை ரூபா 20/-

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 30 திங்கள் (15.09.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 293


# போர்க் குற்றச்சாட்டுகளை கைவிடுமாறு கோரிக்கை

## ஐ.நா. குழுவிடம் இலங்கை அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் விடுத்தனர்

கொழும்பு, செப்ரெம்பர் 15

**இலங்கை மீதான போர்க் குற்றச் சாட்டுகளைக் கைவிடுமாறு இலங்கையைச் சேர்ந்த அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் சிலர் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகத்தின் விசாரணைக் குழுவின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சன்ரா பெய்டசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

மார்கா நிறுவகத்தின் கலாநிதி கொட்பிறி குணதிலக, மனிதாபிமான முகவர்கள் அமைப்புகளின் கூட்டமைப்பின் ஜீவன் தியாகராஜா உட்பட்ட சிலரே இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளனர்.

குறிப்பிட்ட குழுவினரே போரின் இறுதித் தருணங்களில் பொதுமக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு விடுதலைப் புலிகளே காரணம் என சமீபத்தில் தேர்ட் நரேட்டிவ் என்ற ஆவணத்தை வெளியிட்டது குறிப் பிடத்தக்கது.

இக்குழுவினர் சன்ராவுடனான சந்திப்பின்போது - இலங்கை இராணுவம் கண்மூடித்தனமான ஆட்டிலறி தாக்குதல்களை மேற்கொண்டது. பொதுமக்களை பாதுகாப்பு வலயங்களுக்குள் செல்லுமாறு கேட்ட பின்னர் பொதுமக்கள் மீது தாக்குலை மேற்கொண்டது போன்ற குற்றச்சாட்டுகளை நீக்குமாறு கோரியுள்ளனர்.

சர்வதேச மனிதாபிமான

(22ஆம் பக்கம் பார்க்க)

## 4 வயதுச் சிறுமி கடத்தல்; சந்தேகநபர்கள் மறியலில்

கொழும்பு, செப் 15

நான்கு வயது 3 மாதங்களேயான பமாரா கேஷனி பண்டாரவின் கடத்தலுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் பிரதான சந்தேகநபரின் தாயான ரணசிங்ஹ ஆராச்சிலாகே குணவதி (வயது 55) மற்றும் பிரதான சந்தேகநபரின் சகோதரனான பிரேமசிறி ராஜபக்ஷ ஆகிய இருவரையும் எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு குருநாகல் மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இவ்விருவரையும் சனிக்கிழமை இரவு, மேலதிக நீதிவானின் வாசஸ்தலத்தில் முன்னிலைப்படுத்தியபோதே அவர் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, பிரதான சந்தேகநபரான கிறீஸ் என்றழைக்கப்படும் காமினியை குற்றப்புலனாய்வு பிரிவினர் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர். இவர், அதே பிரதேசத்தைச் சேர்ந்த இளம் பெண்ணொருவரை கடத்தினார் என்ற குற்றச் சாட்டில் ஏற்கனவே தண்டனை பெற்றவர் என்றும் பொலிஸார்

(22ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவின் காணாமற்போதல் குழுவை நாட்டுக்குள் அனுமதிக்க அரசு மறுப்பு

கொழும்பு, செப் 15

காணாமற் போனோர் தொடர்பாக இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் பணிகள் முடியும் வரை, சுயமின்றிக் காணாமற் போதல் தொடர்பான ஐக்கிய நாடுகளின் நடவடிக்கை குழு இலங்கைக்கு [?]ணம் செய்வதை அரசு ஏற்க மறுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 27ஆவது அமர்வு தற்போது நடைபெற்றுக் கொண்டிக்கும் நிலையில், அதில் தமது பயணம் குறித்த கோரிக்கையை ஐக்கிய நாடுகளின் சுயமின்றிக் காணாமற் போதல் தொடர்பான குழு சமர்ப்பித்துள்ளது.

எனினும் இதனை ஏற்க மறுத்துள்ள இலங்கை அரச தரப்பு, தமது ஆணைக் குழுவின் பணிகள் முடிவடைந்த பின்னரே குறித்த குழுவை நாட்டுக்குள் அனுமதிக்க முடியும் என்று தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் குறித்த ஐக்கிய நாடுகள் குழுவுடன்

(22ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறல் குற்றங்களே யாழ்ப்பாணத்தில் இப்போது அதிகம்

யாழ்ப்பாணம்.செப்.15

யாழ்.மாவட்டத்தில் அடிப்படை உரிமை மீறல்களை விட மனித உரிமை மீறல் குற்றங்களே அதிகம் இடம்பெற்று வருகின்றன என்று மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

மனித உரிமை டிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்தி செய்த குழுவினருக்கான பட்டச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.




(22ஆம் பக்கம் பார்க்க)

## விபத்தில் உயிர் தப்பினார் உபேக்ஷா எம்.பி

கொழும்பு, செப் 15

நாடாளுமன்ற உறுப்பினர் உபேக்ஷா சுவர்ணமாலி பயணித்த வாகனம் மீரிகம வியாங்கொடை பிரதேசத்தில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

போகொல்லாகம சந்தியில் வைத்து ஓட்டோ ஒன்றுடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை, உபேக்ஷா சுவர்ணமாலி பயணித்த ஜீப் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் உயிர் தப்பியதுடன் விபத்தில் காயமடைந்த ஓட்டோ சாரதி, வத்துபிட்டிவெல வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஜீப் வண்டியின் சாரதியை கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகப் பொலிஸார் மேலும் கூறினர்.

(த)

# சர்வதேச நிபுணர்கள் குழாமை 19இல் சந்திக்கிறது ஜனாதிபதி ஆணைக்குழு

### போர்க்குற்ற விசாரணை பற்றிய நகர்வு குறித்தும் ஆராய உத்தேசம்

கொழும்பு, செப். 15

காணாமற் போனோர் குறித்தும் மனித உரிமை மீறல்கள் சம்பந்த மாகவும் உள்ளக விசாரணையை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கும் அதற்கு ஆலோசனை வழங்கு வதற்கு நியமிக்கப்பட்டுள்ள சர்வதேச நிபுணர் குழாமுக்குமிடையிலான முத லாம் கட்ட சந்திப்பு எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இலங்கை மத்திய வங்கிக் கட்டடத் தொகுதியில் உள்ள டெஸ்மன் டி சில் வாவின் அலுவலகத்திலேயே இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது. உள்ளக விசாரணைக் குழுவின் அதிகாரியொருவர் மேற்படி தகவலை நேற்று 'உதய'னிடம் உறுதிப்படுத்தினார்.

ஆலோசனைப் பொறிமுறை, இரு தரப்புகளுக்குமிடையிலான கூட்டுப் பொறுப்பு, விடயதானதரிப்பு, எதிர்கால நிகழ்ச்சிநிரல் உட்பட முக்கிய பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டு முடிவுகள் எடுக்கப்படவுள்ளன.

இந்தச் சந்திப்பில் சர்வதேச நிபுணர்கள் ஐவரும் பங்கேற்காவிட்டாலும் குறைந்த பட்சம் மூவராவது கலந்து கொள்வார்

(22ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் பெரும் காட்டுத் தீ 10 ஏக்கர் காடுகள் எரிந்து நாசம்

வவுனியா, செப். 15

வவுனியா, ஈரப்பெரிய குளம் பிரதேசத்தில் உள்ள காட்டு பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக 10 ஏக்கர் வரையிலான காடுகள் எரிந்து அழிந்துள்ளதாக ஈரப்பெரிய குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, ஈரப்பெரிய

(22ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கையுடன் 23 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடுவார் சீன ஜனாதிபதி

கொழும்பு, செப்.15

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் இலங்கையுடன் 23 உடன்படிக்கைகளில் கைச்சாத்திடவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து மேலும் தெரியவருவ தாவது -

நாளை செவ்வாய்க்கிழமை இலங் கைக்கு உத்தியோக பூர்வ பயணமொன்றை மேற்கொள்ளவுள்ள சீனா ஜனாதிபதி ஜி ஜின்பிங், இலங்கையுடன் 23 உடன்படிக்கைகளில் கைச்சாத்திடவுள்ளார். இதில் பல உடன்படிக்கைகள் குறித்த தகவல்கள் இறுதிநேரத்தி லேயே கிடைத்துள்ளதால், இந்த உடன்படிக்கைகளில் மாற்றங்களைச் செய்யவோ அல்லது அவை குறித்த விடயங்களை பொதுமக்களுக்கு பகிரங்கப்படுத்த முடியாத நிலையிலும் வெளி விவகார அமைச்சக அதிகாரி கள் காணப்படுகின்றனர். சீனா ஜனாதிபதி அவரது இலங்கை

(22ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சிறுவர்கள் தொடர்பான செயலமர்வில் உரிய அலுவலர்கள் பங்கேற்கவில்லை

## பெற்றோர் தரப்பில் விசனம்

தென்மராட்சி, செப்.15

சிறுவர் தொடர்பான செயலமர்வுக்கு பிரதேச செயலகத்தில் பணிபுரியும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்துகொள்ளாதமை குறித்து பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் பிரதேச முன்பள்ளிகளின் முகாமைத்துவக் குருக்களை வலுப்படுத்தல் செயலமர்வு நேற்று சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் பி.ப. ஒரு மணி வரை நடத்தப்பட்டது.

இந்தச் செயலமர்வில் பெருமளவு பெற்றோர் கலந்து கொண்டனர். ஆனால் செயலமர்வுக்கு அழைக்கப்பட்ட பிரதேச செயலகத்தின் சிறுவர் நன்னடத்தை அலுவலர், சிறுவர் மேம்பாட்டு அபிவிருத்தி அலுவலர், சிறுவர் பாதுகாப்பு அலுவலக முன்பள்ளி உதவியாளர்கள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகளின் சனசமூக நிலைய அலுவலர்கள் ஆகியோர் பங்குபற்றவில்லை.

செயலமர்வுக்கு அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், முன்பள்ளிகளை நடத்துவோர் போன்றோர் வருகை தந்தபோதிலும் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் நலனில் அக்கறையுள்ள அலுவலர்கள் கலந்து கொள்ளாதமை குறித்து பெற்றோர் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது. (த-9)

# பாம்புக்கடிக்கு இலக்காவோர் தென்மராட்சியில் அதிகரிப்பு

## காணிகள், வயல்கள் துப்புரவு செய்யப்படுவதே காரணம்

தென்மராட்சி,செப்.15

குடியிருப்பு காணிகள், வயல்கள் ஆகியவை துப்புரவு செய்யப்படுவதால் குடியிருப்புகளுக்குள் பாம்புகள் படையெடுத்து மக்கள் பாம்புக்கடிக்கு இலக்காகும் சம்பவங்கள் கடந்த வாரம் அதிகரித்துள்ளன.

கடந்த வாரத்தில் 8 பேர் பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காலபோக நெற் செய்கைக்காக வயல்களில் அதற்கான ஆயத்தப் பணிகள் இடம்பெற்று வருவதாலும், டெங்கு வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருவதால் பற்றைக் காணிகள் துப்புரவு செய்யப் பட்டு வருவதாலும், வயல்களுக்கு போடுவதற்குச் சேகரிக்கப்பட்ட குப்பைகள் அப்புறப்படுத்தப்பட்டு வருவதாலும் பாம்புகள் குடியிருப்புகளை நோக்கிப் படையெடுக்கின்றன.

நேற்றுமுன்தினம் பாம்பினால் கடியுண்ட தாவளை, இயற்றாலையைச் சேர்ந்த கந்தசாமிதர்மசீலன்(வயது- 21), சாவகச்சேரி கிராம்பு விலைச் சேர்ந்த பாலச்சந்திரன் காண்டீபன் (வயது- 27), மீசாலை கிழக்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை நாகேந்திரன்(வயது- 60), கச்சாய் தெற்கைச் சேர்ந்த நாகேந்திரம் அகிலன் (வயது -17) ஆகியோர் பாம்புக்கடிக்கு இலக்காகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (த-9)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா பேரம்பலம்



புங்குடுதீவு, 04 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பேரம்பலம் 13.09.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பூபதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான் கந்தையா-செல்லம்மா, பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும், கனகலெட்சுமியின் பாசமிகு கணவரும், யோகேஸ்வரன், காலஞ்சென்ற கேதீஸ்வரி மற்றும் ஜீவா, நிமலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பஞ்சலிங்கத்தின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற குறிஞ்சிமாறன் மற்றும் ஜகதீஸ்வரன், சுடர்விழி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்புச் சகோதரனும், நவலெட்சுமி, சிவகுமார், ராசகுமார், கமலாதேவி, வீரகுமார், காலஞ்சென்ற நந்தகுமார், மோகனதாஸன், பத்மகுமார், காலஞ்சென்ற சிவகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற பவச்சிங்கத்தின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.09.2014) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புங்குடுதீவு-04,
077 528 9989

(52227)(6.4.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## சரவணமுத்து சுப்பிரமணியம்



அளவெட்டி வடக்கு, அரசொல்லையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சுப்பிரமணியம் கடந்த (12.09.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - மாரிமுத்து தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், சிதம்பரேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னத்தங்கம் மற்றும் ராசம்மா, கதிரவேலு, தெய்வானைப்பிள்ளை, சரஸ்வதி, சண்முகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகநந்தினி, சிவவதனி, சிவாஜினி, காலஞ்சென்ற அருந்ததி மற்றும் உதயகுமாரி, முகுந்தன், துளசி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீதரன், மகேந்திரராஜா, காசிப்பிள்ளை, சத்தியநாதன், பிரியதர்சினி, அருட்பிரகாசம் ஆகியோரின் பாசமிகு மாமனும், சுகன்யா, பிரமீனா, மதுசன், வினுசன், டிலானி, கிருஷிகா, கிருஷாயினி, திவிக்ஷன், ரஸ்வினிகா, ஜதுசனா, திவியானி, அபிஷணன், சைந்தவி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.09.2014) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உச்சு வீதி,
அளவெட்டி மத்தி.

(52268)(45.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

வங்களாவடியில்

# தையல் பயிற்சி நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம், செப்.15

வேலணை வங்களாவடியில் இன்று திங்கட்கிழமை தையல் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. பாரம்பரிய கைத் தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் தேசிய அருங்கலைப் பேரவை இதனைத் திறந்து வைக்கின்றது.

இதேசமயம் அல்லைப்பிட்டி வெண்புரவி வீதியும் இன்றையதினம் திறந்து வைக்கப்படவுள்ளதாகவும் வேலணை பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.சிவராசா தெரிவித்தார். (த-7)

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 11.09.1981



இறப்பு 03.09.2007

பிறப்பு 27.08.1979



இறப்பு 15.12.2007

சுப்பிரமணியம் இதயராஜ் சுப்பிரமணியம் கௌசிகன்

ஏழு ஆண்டுகள் ஆன போதிலும் ஆறவில்லை எம் துயரம்
இவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

68/2, இலந்தைக்குளம் வீதி,
அரியாலை.

குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## கந்தையாபிள்ளை செல்வரத்தினம்



அன்னை மடியில்
16.06.1940

ஆண்டவன் அடியில்
27.08.2013

திதி: ஸப்தமி (15.09.2014)

ஓராண்டு சென்றதென்ன – ஆயிரம் உறவுகள் இருந்ததென்ன.....
அப்பா உங்கள் நினைவுகள் மட்டும் அகலவில்லை எம்மைவிட்டு.....
சிந்தனை அனைத்திலும் எம் நிழலோடு ஜோதியாய் தொடர்கின்றீர்கள்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் என்றும் நீங்கள் எங்களுடன்
எம்மை வழிநடத்திய கலங்கரை விளக்கமே!
என்றும் நாம் மறவோம்.

உங்கள் ஆத்மாசாந்தியடைய எல்லாம்வல்ல
ஈழத்துச் சிதம்பர நடராஜாவைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சிதம்பராமூர்த்தி கேணியடி,
புதுறோட், காரைநகர்.

குடும்பத்தினர்.

(52261)(7.6.3)

# ஈராண்டு நினைவலைகள்

திருமதி

## குகானந்தவல்லி கனகலிங்கம்

(குகம் அக்கா)



மண்ணில் 18.04.1946

விண்ணில் 07.09.2012

திதி : ஸப்தமி (15.09.2014)

வருடங்கள் இரண்டு ஆனதே அம்மா
ஆனாலும் எங்கள் மூச்சு உள்ளவரை
நீங்கள் வாழ்வீர்கள் எங்களுடன்
மீதி இருக்கும் நினைவுகளை
மீட்டு மீட்டுப் பார்க்கின்றோம்
கனவில் உங்களைப் பார்ப்பதற்கு
கரம்கூப்பி வணங்குகின்றோம்
நீங்கள் இன்னொரு ஜென்மம்
எங்கள் அம்மாவாக இருக்க
வேண்டும் என்று!

குடும்பத்தினர்.

"குகம் வாசம்" விளையாட்டரங்க வீதி, கல்வியங்காடு.

(52228)(7.6.3)

## ஊர்காவற்றுறை - காரைநகர் இடையிலான கடற்பாதைப் புனரமைப்புப் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.15
ஊர்காவற்றுறை - காரைநகர் பகுதிகளுக்கான கடற்போக்குவரத்துச் சேவையில் உள்ள கடற்பாதையைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
மிகவும் பழமை வாய்ந்த இந்தப் பாதையில் பயணிகள் ஏறி இறங்கும் பகுதிகளும், நடுப்பகுதியும் தடுப்பிடாது உடைந்துள்ளதால் பொது மக்கள் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதுடன் வாகனங்களை எடுத்து வருவதிலும் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
நீண்ட நாள் கோரிக்கைக்குப் பின்னர் பாதையைப் புனரமைக்கத் தற்சமயம் வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளதாக ஊர்காவற்றுறை மக்கள் தெரிவித்தனர். (த-7)




இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் இளம் உள்ளங்களின் ஆன்மீக சிந்தனையை வளர்க்கும் பேரணி கடந்த 13ஆம் திகதி முத்துஐயன்கட்டில் இடம்பெற்றது. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான இளைஞர், யுவதிகள் மற்றும் மதகுருமார், பொலிஸார் ஆகியோர் கலந்துகொண்டனர். (த-500)

## திருடப்பட்ட 25 கைத்தொலைபேசியுடன் இருவர் ஏறாவூர் பொலிஸாரால் கைது



மட்டக்களப்பு, செப் 15
ஏறாவூர் பொலிஸ் பிரிவில் கைத்தொலைபேசி விற்பனை நிலையமொன்றிலிருந்து திருட்டுப்போன 25 கைத்தொலைபேசிகளையும் ஒரு கணனி என்பனவற்றைக் கைப்பற்றியதோடு சந்தேகத்தின் பேரில் இரு இளைஞர்களையும் நேற்றுமுன்தினம் ரவு சனிக்கிழமை கைது செய்திருப்பதாக ஏறாவூர் பொலிஸ் பொறுப்பதிகாரி தீப்தி விஜய விக்ரம தெரிவித்தார்.
ஏறாவூர் பொலிஸ் பிரிவில் ஏறாவூர் ஐந்தாம் குறிச்சி பஸார் பகுதியிலுள்ள கைத்தொலைபேசி விற்பனை நிலையமொன்றிலிருந்து கடந்த 8 ஆம் திகதி ஒரு இலட்சத்து 19 ஆயிரத்து 400 ரூபா பெறுமதியான கைத்தொலைபேசி திருடப்பட்டிருந்த முறைப்பாடு குறித்துத் தாம் விரைந்து நடவடிக்கை எடுத்திருந்ததாகவும் அவர் கூறினார்.
சந்தேக நபர்கள் நீதிவானிடம் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாகவும், குறிப்பிட்ட சந்தேக நபர்கள் ஏற்கனவே போதைப் பொருள் விவகாரத்தோடு சம்பந்தப்பட்டவர்கள் என்பது தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்திருப்பதாகவும் பொலிஸ் பொறுப்பதிகாரி குறிப்பிட்டார்.
இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் ஏறாவூர் பொலிஸ் பொறுப்பதிகாரி தீப்தி விஜய விக்ரமவின் வழிகாட்டலில் குற்றத் தடுப்புப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஹிரன் சென விரட்ன தலைமையிலான பொலிஸ் கான்ஸ்டபிள் ஆர். புருஷோத்தமன், எச்.எம்.எல். அபேசிங்ஹ, பொலிஸ் சார்ஜன்ட் எம். நஜிமுதீன், ஈ.எல். பதுார்தீன், கே.எம். றபீக், ஆர். எம். பண்டிதரெட்ன, எச்.பி;. ஜயந்த, ஜி.தர்மசேன ஆகியோரடங்கிய குழுவினர் விரைந்து நடவடிக்கை எடுத்திருந்தனர். (த-32)





### கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்

இருப்பகற்றல் மற்றும்
மலிவு விற்பனையை முன்னிட்டு
ஜெயசாயி இல் விற்பனை செய்யும் அனைத்து
பொருள்களும் குறித்த விலையில் இருந்து
அரைவாசி விலைக்குப் பெற்றுக் கொள்வதுடன்
13, 14, 15 ஆகிய தினங்களில் 3000/=
ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யும்
அனைத்து வாடிக்கையாளர்களும்
பரிசுப் பொதிகளைப்
பெற்றுக் கொள்ளலாம்.
114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 9393
(52206)(7.6.3)



### கிருஷ்ணா அடகு சேவை

பதிவு இல : J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2013ஆம் ஆண்டு 31.08.2013இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2014ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதி (15.10.2014) இற்கு முன்பு மீட்கவும் மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும்.
புதுப்பிக்கத் தவறின் 15.10.2014ஆம் திகதி விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

உரிமையாளர் : A.S.Surendran
இல.370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021 490 0311
இல.9, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5046
(C/16563)(7.6.3)

### விற்பனைக்குண்டு

TRADE FINANCE & INVESTMENTS PLC
Since 1978
A Finance company Licensed by the Monetary Board of the Central Bank of Srilanka Under the finance Business Act No. 42 of 2011

01. மோட்டார் சைக்கிள்
APACHE-180 NPBAI-XXXX
02. உழவு இயந்திரங்கள்
49-XXXX (135 MASSEY FERGUSON)
37-XXXX (240 MASSEY FERGUSON)
03. மோட்டார் கார்
WPHO-XXXX (TOYOTA HARRIER JEEP)
04. மோட்டார் லொறி
42-XXXX (ISUZU)

தொடர்புகளுக்கு : மேனகாந் - 077 364 4409
TRADE FINANCE AND INVESTMENTS PLC
74, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9997, 021 222 1898
(C/16204)(7.6.3)


## பேலியகொடைக்கு மனிங் சந்தை

கொழும்பு, செப் 15
மரக்கறிகள் மற்றும் பழவகைகளை விற்பனை செய்யும் கேந்திர நிலையமாக விளங்கும் கொழும்பு புறக்கோட்டையில் அமைந்துள்ள மனிங் சந்தை புறக்கோட்டையில் இருந்து பேலியகொடைக்கு மாற்றப்படவுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவிக்கிறது.
1977 ஆம் ஆண்டில் கொழும்பு மாநகர சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள 30 வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை இப்போது 2 ஆயிரத்தையும் கடந்துள்ளது. இவர்கள் அனைவருக்கும் வர்த்தக நிலையங்களை வழங்கக் கூடிய வசதிகள் கொண்டதாக இந்தச் சந்தைக் கட்டடத் தொகுதியை நிறுவுவதற்குத் திட்டமிட்டுள்ளதாகப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார்.
மேலும் மனிங் சந்தையில் மரக்கறி வகைகளுடன் வரும் லொறிகள் மற்றும் நுகர்வோரின் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்குப் போதிய இடவசதிகள் இல்லாததால் இந்த மாற்றம் ஏற்படுத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-22)

## ஹெரோயின் விற்க முயன்றதாக கைதானவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், செப். 15
ஹெரோயின் விற்க முயன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு கைதுசெய்யப்பட்ட நபரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.
கடந்த 12 ஆம் திகதி இரவு நாவாந்துறைப் பகுதியில் வைத்து விஷேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு யாழ். குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரிடம் இவர் ஒப்படைக்கப் பட்டார்.
குறித்த நபரை நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதியின் வாசஸ்தலத்தில் முன்னிலைப்படுத்தியபோது அவரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (த-106)


### காணி விற்பனைக்கு

நுணாவில் சந்திக்கு அருகில்
3 கடைகளுடன் கூடிய
$13\frac{3}{4}$ பரப்புக் காணி உடன்
விற்பனைக்குண்டு. (52240) (4.6.3)
தொடர்பு:077 457 4244/001 416 414 7892

### விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 318 8016 (52143) (7.6.3)

### ULTRA TECH வடபகுதியில்

ULTRA TECH சிமெந்து வடபகுதியில் பொறியியலாளரின் மற்றும் கட்டட ஒப்பந்ததாரர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஆதீத்தியா பிறிலா கம்பனியின் ULTRA TECH சிமெந்து தனது விற்பனைத் துறையை வடபகுதி நோக்கி நகர்த்தி உள்ளது. கல் அரிபவர்கள் மற்றும் சகல தேவைகளுக்கும் சிறந்த சிமெந்து என்று பொறியியலாளரின் சிபார்சு பெற்ற வெற்றிச் சின்னம் "ULTRA TECH சிமெந்து" சீக்கிரத்தில் காயும் தன்மையும் அதிகூடிய பசைத் தன்மையைக் கொண்ட சிமெந்து. வாடிக்கையாளர்களே ULTRA TECH சிமெந்தைப் பாவித்து நீங்கள் நேரத்தை மிச்சம் பிடித்து பணத்தையும் சேமித்து இலட்சாதிபதி ஆவதற்கு அரிய சந்தர்ப்பத்தை ULTRA TECH ஏற்படுத்தி உள்ளது. கூடிய கற்களைப் பெறலாம்.

உடனடியாக ஓடர்களைப் பதிவுசெய்யும் முகவரி : (52271) (7.6.3)
City Suppliers
129, Stanley Road, Jaffna. T.P.No : 021 221 9300

### A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான



Diploma in Information Technology DiTec
Diploma in Office Automation DOA
Diploma in Pc Applications DPCA
Adv. Dip. in Hardware & Networking ADHN
Dip. in Video Production & Multimedia DVPM
Dip.in Web Designing & Development DWD
Dip. in Computerized Accounting DCA
Tally, JAVA, AutoCAD
75% OFF
DMI COMPUTER EDUCATION
யாழில் முதற்தர ஆங்கில பயிற்சி மையத்தில் ...
Spoken English
Veta Fluency Diploma
... தரமானதுமான கணினிக் கல்விக்கு
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
பிரிவு iii - 15/ 09 /2014 9.30 am
பிரிவு iv - 17/ 09 /2014 9.30 am
☑அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
... அங்கீகாரம் பெற்ற (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
... இந்திய பாடநூல்கள்.
☑இலகு தவணைக்கட்டண வசதிகள். ...

DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113. கன்னாதிட்டி வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V. வீதி, Tel. : 021-226 2470
சாவகச்சேரி No.174, கண்டி வீதி, (HNB வங்கி அருகில்) Tel. : 021-227 0775
சுன்னாகம் No.130, K.K.S. வீதி, (NSB வங்கி அருகில்) Tel. : 021-224 1970

# சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் எல்லைக்குட்பட்ட காணிகளில் பயிர்கள் செய்தால் சட்ட நடவடிக்கை

முல்லைத்தீவு, செப்.15

ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலையத்துக்குட்பட்ட சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் எல்லைக்குட்பட்ட காணிகளில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டாலோ, அல்லது குடியமர்ந்தாலோ அவர்கள் மீது உடனடியாகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஒட்டுசுட்டான் கமநல பெரும்பாக உத்தியோகத்தர் வீ.அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

கற்சிலைமடு பெரியகுளம் மற்றும் வெடுக்கு நாறிக்குளம் ஆகிய குளங்களின் நீரேந்துப் பகுதிகளில் உள்ள காணிகளைத் துப்புரவு செய்து வயல் செய்வது குறித்தும், கிணறுகளை அமைத்து வீடுகளை அமைப்பது தொடர்பிலும் ஒட்டுசுட்டான் பெரும்பாக உத்தியோகத்தருக்குப் பங்காளர்கள் கொடுத்த தகவலையடுத்து உடன் சம்பவ இடத்துக்கு சென்ற பெரும்பாக உத்தியோகத்தர் தி.அமிர்தலிங்கம் அத்துமீறிக் குடியிருப்பவர்கள் வயல் நிலம் பண்படுத்தலில் ஈடுபட்டவர்களையும், குளத்தின் எல்லைப் பரப்புக்குள் அத்துமீறிய நில அபகரிப்பில் ஈடுபட்டுள்ளவர்களையும் உடனடியாக வெளியேறும்படி உத்தரவிட்டார்.

> “குளத்தின் எல்லைப் பரப்புக்குள் அத்துமீறிய நில அபகரிப்பில் ஈடுபட்டுள்ளவர்களையும் உடனடியாக வெளியேறும்படி உத்தரவிட்டார்.

அவர்களுக்கு இரு நாள்கள் அவகாசம் வழங்குவதாகவும், காணி செய்வதையோ வீடு கட்டுவதையோ நிறுத்தும்படியும்,வீடுகளைஅகற்றுமாறும் கூறியதுடன் அகற்றாவிடின் பொலிஸாரின் உதவியுடன் அவை அகற்றப்பட்டுச் சட்ட நடவடிக்கைக்கும் உட்படுத்தப்படும் எனவும் கூறினார்.

இந்த விடயம் முல்லைத்தீவு மாவட்ட கமநல உதவி ஆணையாளர் யூ.விஜயகுமாருக்கும் பெரும்பாக உத்தியோகத்தரினால் தெரியப்படுத்தப்பட்ட போது, அத்துமீறிய செயற்பாட்டை உடனடியாகப் பொலிஸாரின் உதவியோடு தடுத்து நிறுத்துமாறு அவர் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார். (த-500)

# வவுனியா சிதம்பரபுரம் பஸ் சீரின்மையால் பலரும் பாதிப்பு



வவுனியா, செப். 15

வவுனியா சிதம்பரபுரம் பகுதிக்கான பஸ் சேவை சீராக இல்லாமையினால் ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா நகரில் இருந்து கோவில்குளம், சமளங்குளம், கோமரசங்குளம் பகுதியூடாகச் சிதம்பரபுரம் ஊடாகச் செல்லும் பஸ் சேவை சீரினின்மையால் சமளங்குளம் பாடசாலை, முருகனூர் பாடசாலை, கோமரசங்குளம் பாடசாலை, சிறிநாகராஜா பாடசாலை ஆகியவற்றுக்குச் செல்லும் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் வைத்தியசாலைக்குச் செல்வோர், வவுனியா நகருக்கு நாளாந்தம் சென்று வரு[illegible] சமளங்குளம், சிதம்பரபுர[illegible] கோமரசங்குளம் மக்கள் உட்பட பலரும் பாதிக்கப்படுகின்றனர்

குறிப்பாக காலை நேர பஸ் சீரின்மையால் பலரும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டோர் பஸ்போக்குவரத்தைச் சீராக்கி உதவுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (த-402)

# வீட்டுத்திட்டம் பெற்ற ஊழியர்கள் உடன் அவற்றைக் கட்டவேண்டும்

## வவுனியா பிரதேச செயலர் பணிப்பு


வவுனியா, செப் .15

வவுனியா ஓமந்தை வேப்பங்குளம் அரச ஊழியர் வீட்டுத்திட்டப் பகுதியில் இதுவரை குடியேறாத அரச ஊழியர்கள் விரைவில் வீடுகளைக் கட்டிக் குடியேறுமாறு வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

2011ஆம் ஆண்டு முதல் காணியற்ற அரச ஊழியர்களுக்கு இங்கு காணிகள் வழங்கப்பட்டுச் சிலர் அங்கு வீடு கட்டிக் குடியேறியுள்ளனர். இவர்களின் நலன் கருதி அங்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன. வவுனியா மாவட்ட அரச அதிபரின் முயற்சியுடன் சில அபிவிருத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இதுவரை அங்கு அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட காணிகளில் வீடு கட்டாத அரச ஊழியர்களின் விவரங்கள் அந்தந்த அரச ஊழியர்கள் பணியாற்றும் திணைக்களங்களுக்கு விரைவில் அனுப்பப்படவுள்ளன.

வீடு கட்டுமாறு வழங்கப்பட்ட காணிகளில் மேற்கொள்ளப்பட்ட வீடு கட்டுவதற்கான வேலைகள் குறித்த விவரங்கள் திணைக்களங்களிடம் கோரப்பட்டுள்ளன.காணிகளில் வீடு கட்டாதோரின் காணிகள் பறிமுதல் செய்யப்படும்- என்றார். (த-402)



முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலயத்துக்கு ரி.எஸ்.ஈ.பி. திட்டத்தின் நிதியுதவியுடனான மாடிக் கட்டடம் கடந்த 12ஆம் திகதி முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது.(த-433)

# மரண அறிவித்தல்

## கிருஷ்ணர் கணபதிப்பிள்ளை



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் இல.120,குட்செட் வீதி, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் கணபதிப்பிள்ளை நேற்றுமுன்தினம் (13.09.2014) சனிக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் -மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், இராசேந்திரியின் அருமைக்கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், கோகிலன் (பிராந்திய முகாமையாளர் - யூனியன் அஷ்யூரன்ஸ்), கௌரி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - யூனியன் அஷ்யூரன்ஸ்), மஞ்சரி (UK), பிங்கலன் (UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நந்தசிறி, லோகினி, நகுலேஸ்வரன் (UK), ஜெயகௌரி (UK) ஆகியோரின் பாசமிகு மாமனும், அகீபன், நிதீபன், நிதுஷா, பிரவீன், சங்கீத்,அபினயா, கீர்த்திக், கிரன் ஆகியோரின் பாசமிகு பேரனும், அன்னம்மா, புனிதவதி, வள்ளியம்மை, காலஞ்சென்றவர்களான சிதம்பரம், கந்தையா, திலகவதி, இரத்தினசபாபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.09.2014) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் [illegible] இல.14B, ,மன்னார் வீதி, குருமன்காடு, வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் [illegible] நடைபெற்று, பிற்பகல் 3.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சுமிபாம் [illegible] இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

14 B, மன்னார், வீதி,
குருமன்காடு,
வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.
077 299 0321

(51290) (45.6.3)



எபோலா நோய் பாதிப்பால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 2 ஆயிரத்து 400ஆக அதிகரித்துள்ளது என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை நிலவரப்படி எபோலா நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 4,784 ஆக உள்ளது. இந்த நோய் பாதிப்பால் இறந்தவர்கள் எண்ணிக்கை 2,400 ஆக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# உக்ரைனை அழிப்பதற்கு திட்டமிடுகின்றார் புடின்

## குற்றஞ்சாட்டுகின்றார் அந்த நாட்டுப் பிரதமர்

கீவ், செப்.15

உக்ரைன் நாட்டை அழிக்கத் திட்டமிடுகின்றார் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் என்று குற்றசாட்டியுள்ளார் உக்ரைன் பிரதமர் அர்செனிவ் யாட்சென்யுக். உக்ரைன் தலைநகர் கீவில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உக்ரைனுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ள விரும்பவில்லை. மாறாக உக்ரைனை அவர் அழிக்கத் துடிக்கிறார். டொனெட்ஸ்க், லுகன்ஸ்க் நகரங்களை பிடிப்பது மட்டுமல்ல புடினின் நோக்கம். அவரது முக்கிய நோக்கமே உக்ரைன் முழுவதையும் பிடிப்பதுதான். தனி நாடாக இருக்கும் உக்ரைனை



அழிக்க வேண்டும் என்றுதான் அவர் விரும்புகிறார்.

கிழக்கு உக்ரைனில் அப்பாவிப் பொது மக்கள் கொல்லப் படுவதை தடுத்து நிறுத்துவதற்குதான் நான் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டேன்"- என்றுஅவர்தெரிவித்துள்ளார்.(ற)

# பிரித்தானிய பிரசையும் கொலை செய்யப்பட்டார்

## ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு கொடூரம்




நியூயோர்க், செப்.15

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பிடம் பணயக்கைதியாக வைக்கப் பட்டிருந்த பிரித்தானிய பிரசையான டேவிட் ஹெய்ன்ஸின் தலைதுண்டிக்கப்பட்டுகொலை செய்யப்பட்டுள்ளார்.

ஈராக் மற்றும் சிரியாவின் எல்லைப்பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் இஸ்லாமிய இராஜ்ஜியம் என பிரகடனப் படுத்தி ஆட்சி செய்து வரு கின்றனர். இந்தநிலையில் தீவிர வாதிகளால் கைப்பற்றப்பட்ட பகுதிகளை குர்திஷ் படையினர் மீட்க உதவும் வகையில் தீவிர வாதிகள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தி வருகிறது.

அமெரிக்க போர் விமானங்களின் தாக்குதல்களால் தீவிர வாதிகளின் பிடியில் இருந்த பல்வேறு நகரங்கள் மீட்கப் பட்டுள்ளன. அதனால் ஆத்திர மடைந்த தீவிரவாதிகள் அமெரிக்காவைச் சேர்ந்த பத்திரிக்கையாளர்களான ஸ்டீவன்ஸ்காட்லாப்மற்றும்ஜேம்ஸ் போலே ஆகியோர் பிணைக் கைதிகளாகப் பிடித்து அவர்களில் ஸ்காட்லாப்பை தலை துண்டித்து கொன்றனர். தங்கள் மீது தாக்குதல் தொடர்ந்தால் போலேயும் தலை துண்டித்து கொல்லப்படுவார் என்று தீவிர வாதிகள் மிரட்டியிருந்தனர்.

சில நாள்களில் போலேயும் தலை துண்டித்து கொல்லப் பட்டார். அப்போது தங்களிடம் பிணைக்கைதியாக உள்ள பிரித்தானிய நாட்டைச் சேர்ந்த டேவிட் ஹெய்ன்ஸ் அடுத்து தலை துண்டிக்கப்படுவார் எனத் தீவிரவாதிகள் தெரிவித்துள்ளனர். இந்தநிலையில் ஹெயின்ஸ் தலை துண்டித்து கொல்லப்பட்ட காட்சி காணொலியில் ஒளிபரப்பாகியுள்ளது. ஹெயின்சின் தலையை துண்டிக்கும் தீவிரவாதி அமெரிக்காவுடன் கூட்டுச் சேர்ந்தால் இது தான் நடக்கும் என்று எச்சரித்துள்ளார். (ற)

# ரயில் நிலைய தாக்குதல்: மூன்று பேருக்குத் தூக்கு

## சீன நீதிமன்றம் தீர்ப்பு

பீஜிங், செப்.15

சீனாவில் ரயில் நிலையத்தில் தாக்குதல் நடத்தப்பட்ட வழக்கில், 3 பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் குன்மிங் நகர ரயில் நிலையத்தில் நடந்த இந்தத் தாக்குதலில் 31 பேர் கொல்லப்பட்டனர். 141 பேர் படுகாயமடைந்தனர். தாக்குதலுக்கு உதவியதாகவும் சதித்திட்டத்தில் ஈடுபட்டதாகவும் பெண் உட்பட 4 பேரை பொலிஸார் கைது செய்திருந்தனர். இவர்கள் மீதான விசாரணை முடிவடைந்த நிலையில், 4 பேருக்கான தண்டனை விவரங்களை நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இதன்படி, குற்றம்சாட்டப்பட்ட பெண், கர்ப்பமாக இருப்பதால் அவருக்கு சாவுத் தண்டனைக்கு பதிலாக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மற்ற மூவருக்கும் சாவுத் தண்டனை விதிப்பதாக நீதிபதி அறிவித்துள்ளார். (ற)

# மலாலாவை சுட்டோர் பொலிஸாரால் கைது

## பாகிஸ்தான் இராணுவம் அறிவித்துள்ளது

இஸ்லாமாபாத், செப்.15

பெண்கல்விக்காக தொடர்ந்து குரல் எழுப்பி வரும் சிறுமி மலாலா மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பாகிஸ்தான் இராணுவம் அறிவித்துள்ளது.

பாகிஸ்தானின் உளவு அமைப்பு மற்றும் இராணுவம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் மலாலாவை சுட்ட 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இராணுவ செய்தித் தொடர்பாளர் அஸிம் பாஜ்வா தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள நபர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்றும், விரைவில் அவர்கள் பயங்ரவாத ஒழிப்பு நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படுவர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# காதலியைக் கொலை செய்த வழக்கிலிருந்து பிஸ்டோரியஸ் விடுவிப்பு

ஜொகன்னர்ஸ்பேர்க், செப்.15

காதலியை சுட்டுக் கொன்றார் என்று தொடரப்பட்ட வழக்கில், மாற்றுத்திறனாளி தடகள வீரர் ஆஸ்கர் பிஸ்டோரியஸ், கொலைக்குற்றவாளி அல்ல என்று தென்னாபிரிக்க நீதிமன்றம் அறிவித்துள்ளது. இருப்பினும், மரணத்தை விளைவிக்கும் குற்றத்தை அவர் புரிந்துள்ளார் என்று நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது.

பிரிட்டோரியா நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த விசாரணையின் முடிவில் நீதிபதி மசிபா இவ்வாறு தெரிவித்துள்ளார். தனது வீட்டில் உள்ள கழிவறையில் காதலி ரீவா ஸ்டீன்கெம்ப் தான் இருந்தார் என்பதை அறிந்து ஆஸ்கர் பிஸ்டோரியஸ் கதவு வழியாக துப்பாக்கியால் சுட்டார் என்பதை நிரூபிக்க போதுமான ஆதாரங்கள் இல்லை என்றும் நீதிபதி மசிபா குறிப்பிட்டார். உள்நோக்கத்துடன் தான் ரீவாவை, பிஸ்டோரியஸ் கொன்றார் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என நீதிபதி தெரிவித்தார்.

சந்தேகத்துக்கு இடமளிக்கும் நபர் தனது வீட்டிற்குள் புகுந்திருப்பதாக பிஸ்டோரியஸுக்கு தோன்றியிருந்தால், தனது பாதுகாவலரை தொலைபேசி மூலம் அழைத்திருக்கலாம் அல்லது உதவி கோரி குரல் எழுப்பியிருக்கலாம் என்றும் நீதிபதி தெரிவித்தார். இவற்றை விடுத்து பிஸ்டோரியஸ் தனது துப்பாக்கியை எடுத்து சுட்டது தவறு என்றும் நீதிபதி மசிபா குறிப்பிட்டார்.

தடகள வீரர் பிஸ்டோரியஸுக்கு விதிக்கப்படவுள்ள தண்டனை குறித்த வாதம் வரும் ஒக்ரோபர் 13ஆம் திகதி தொடங்குகிறது. ஆஸ்கரின் செயல் கொலைக்குற்றம் அல்ல என நீதிபதி அறிவித்துள்ள போதிலும், மரணத்தை விளைவிக்கும் செயலைப் புரிந்திருப்பதால் அவருக்கு 15 வருடம் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என கூறப்படுகிறது.

இது முழுக்க முழுக்க நீதிபதியின் விருப்பத்துக்கு உட்பட்டது என்றும் தெரிகிறது. இந்த தீர்ப்பு குறித்து பிஸ்டோரியஸின் உறவினர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். தீர்ப்பை வரவேற்பதாகவும் அவர்கள் கூறியிருக்கின்றனர். தீர்ப்பு குறித்து அதிர்ச்சி தெரிவித்துள்ள ரீவாவின் பெற்றோர், பிஸ்டோரியஸ் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன என்று கூறியுள்ளனர். பிஸ்டோரியஸை தனிப்பட்ட முறையில் சந்தித்துப்பேச முடிவு செய்துள்ளதாகவும் ரீவாவின் பெற்றோர் தெரிவித்தனர். முன்னதாக கடந்த ஆண்டு பெப்ரவரி 14 ஆம் திகதி காதலர் தினத்தன்று தனது வீட்டுக்கு வந்த காதலி ரீவாவை பிஸ்டோரியஸ் உள்நோக்கத்துடன் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார் என்று கூறப்படுகின்றது.

ஆனால், சந்தேகத்துக்கு இடம் அளிக்கும் வகையில் ஒருவர் தனது வீட்டுக்குள் புகுந்ததாகக் கருதி தான் துப்பாக்கியால் சுட்டேன் என்று ஆஸ்கர் பிரிஸ்டோரியஸ் தெரிவித்துள்ளார். (ற)



வெள்ளத்தால் பாதிக்கப் பட்டுள்ள ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் பல இடங்களில் நிலச் சரிவுகள் ஏற்படத் தொடங்கியுள்ளன. ராம்பன் மாவட்டத்திலுள்ள நஷ்ரி என்ற பகுதியில் பல இடங்களில் ஏற்பட்டுள்ள நிலச் சரிவால் வீதிகள் துண்டிக்கப்பட்டுள்ளன. (வ)

## இத்தாலி வீரர் தாய்நாடு செல்ல அனுமதி

இந்திய மீனவர்களை சுட்டுக் கொன்ற வழக்கில் குற்றவாளிகளான இத்தாலி கடற்படை வீரர்களில் ஒருவரான லத்தோர், உடல் நலக் குறைவுக்கு சிகிச்சை பெறுவதற்காக தாய்நாடு செல்ல உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. கேரள மீனவர்களைச் சுட்டுக் கொன்ற வழக்கில் கைது செய்யப்பட்ட இத்தாலி கடற்படை வீரர்கள் லத்தோர், ஜிரோன் ஆகியோர் டில்லி சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அதில், லத்தோர் என்பவர் மூளை நரம்பு சம்பந்தமான வாத நோயால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தநிலையில் மருத்துவ் சிகிச்சைக்காக 2 மாதங்கள் இத்தாலி செல்ல அனுமதிக்க வேண்டும் என்று அவரது சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், லத்தோர் சிகிச்சை பெற அவகாசம் கொடுப்பதாகவும், அவர் திரும்பி வருவதற்கு இந்தியாவுக்கான இத்தாலி தூதர் முழு பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் நிபந்தனை விதித்துள்ளது. (வ)

## ஜம்முவில் தொற்றுநோய் அபாயம்

ஸ்ரீநகர், செப்.15

ஜம்மு-காஷ்மீரில், தொற்றுநோய் பரவும் அபாயத்தை தடுக்க 300 மருத்துவப் பணியாளர்களை அனுப்பி வைக்க, மத்திய அரசுக்கு அம்மாநில அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தேவையான மருத்துவ உதவிகளையும், மருத்துவப் பணியாளர்களையும், அம்மாநில சுகாதாரத் துறை அனுப்பிவைத்துள்ளது. எனினும், வெள்ளப் பெருக்கில் சிக்கி ஏராளமான கால்நடைகள் உயிரிழந்ததாலும், அவற்றின் சடலங்கள் பள்ளத் தாக்குப் பகுதிகளில் ஒதுக்கியதாலும் தொற்றுநோய் பரவும் அபாயம் உருவாகியுள்ளது. இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய ஜம்மு-காஷ்மீர் சுகாதாரத்துறை இயக்குநர் சலீம் ரஹ்மான்,

"வெள்ளத்தால் பாதிக்கப்படாத பகுதிகளில் உள்ள மருத்துவர்களை, வெள்ள பாதிப்பு ஏற்பட்ட பகுதிக்கு அனுப்பும் பணி நடைபெற்று வருவதாகத் தெரிவித்தார். (ற)

# மஹாராஷ்டிர முதல்வராக வாய்ப்பொன்று தாருங்கள்

## வேண்டுகோள் விடுக்கின்றார் உத்தவ் தாக்கரே

புதுடில்லி, செப்.15

"மக்கள் எனக்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும். அவ்வாறு வாய்ப்பு கிடைத்தால் அவர்கள் வருந்தாமல் இருப்பதற்கு உறுதியளிக்கிறேன்' இவ்வாறு தெரிவித்துள்ளார் சிவசேனை கட்சித் தலைவர் உத்தவ் தாக்கரே . மகாராஷ்டிர மாநில சட்டப்பேரவைத் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"மக்கள் எனக்கு ஒரு வாய்ப்பளிக்க வேண்டுமென விரும்புகிறேன். அவ்வாறு வாய்ப்பு கிடைத்தால் அவர்கள் குறை சொல்வதற்கான வாய்ப்புகளே இருக்காது. என்னை நம்புவதா, வேண்டாமா என்பது மக்களின் முடிவு. மாநிலத்தின் முகமாக (முதல்வர்) யார் இருக்க வேண்டும் என்பதை அவர்கள் முடிவு செய்வார்கள். எந்த ஒரு பதவி மீதும் நான் பெரிதும் விருப்பம் கொண்டிருக்கவில்லை. அதேபோல் பொறுப்புகளை ஏற்க தயக்கம் காட்டப்போவதுமில்லை. மகாராஷ்டிரத்தின் முதல்வர் வேட்பாளராக சிவசேனையைச் சேர்ந்தவரே நிறுத்தப்படுவார். எனது தலைமைப் பண்புகள் குறித்து அடிக்கடி கேள்விகள் எழுப்பப்படுகின்றன. நான் பால் தாக்கரேவின் மகன். பொறுப்புகளை ஏற்பதிலிருந்து விலகிச் செல்ல மாட்டேன்.



பா.ஜ.கவுடனான தொகுதிப் பங்கீட்டைப் பொறுத்தவரையில் எங்களது தரப்பில் எந்த ஒரு பிரச்சினையும் இல்லை. தொகுதிப் பங்கீட்டிற்கான பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

நாங்கள் போட்டியிடாத தொகுதிகள் பா.ஜ.கவுக்கு ஒதுக்கப்படும். ஒவ்வொரு கட்சியும் தனது அடித்தளத்தை விரிவுபடுத்திக்கொள்ள விரும்புகிறது. கள நிலவரத்தின் அடிப்படையிலேயே முடிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எங்களுடையது 25 ஆண்டுகால கூட்டணியாகும். இருப்பினும், அவரவர் தனது எல்லைக்குள்ளாக இருப்பதே நல்லது.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால், கர்நாடகம் ஆக்கிரமித்துள்ள மகாராஷ்டிர பகுதிகளை மீண்டும் மாநிலத்துக்கு கொண்டு வருவோம். மகாராஷ்டிரத்தில் வாழும் கர்நாடக மாநிலத்தவர்களிடம் மராத்தி மொழி திணிக்கப்படவில்லை. உயர் நீதிமன்றத் தீர்ப்பு வரும் வரையில், கர்நாடகத்தில் மராத்தி பேசும் மக்கள் வசிக்கும் பகுதியை யூனியன் பிரதேசமாக அறிவிக்க வேண்டுகிறோம்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## வியட்நாம் சென்றார் பிரணாப்

புதுடில்லி, செப்.15

இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி 4 நாள் சுற்றுப்பயணமாக வியட்நாமுக்குப் பயணமாகியுள்ளார். அதற்காக, நேற்றுப் பிற்பகல் டில்லியில் இருந்து தனி விமானம் மூலம் புறப்பட்டுச் சென்ற பிரணாப் முகர்ஜியை துணை குடியரசுத்தலைவர் ஹமீத் அன்சாரி, பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் ராஜ்நாத் சிங், சுஷ்மா சுவராஜ் ஆகியோர் வழியனுப்பி வைத்தனர். (ற)

## ஹிந்தியில் பேச வேண்டும் மோடி

பிரதமர் நரேந்திர மோடி நியூயோர்க்கில் நடக்கவுள்ள ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் கலந்து கொண்டு ஹிந்தியில் உரையாற்ற வேண்டும் என்று உள் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கேட்டுக் கொண்டார். இது குறித்து அவர் கூறும் போது: அமெரிகாவில் ஹிந்தியில் பேசிய முதல் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தரன். நான் ஒரு முறை அமைச்சராக இருந்த போது ஐ.நாவில் ஹிந்தியில் உரையாற்றினேன் என்று தெரிவித்துள்ளார். (ற)

# இந்தியாவுடனான அமெரிக்க நல்லுறவில் முன்னேற்றம்

## அந்த நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் பெருமிதம்

நியூயோர்க், செப்.15

நரேந்திர மோடி இந்திய பிரதமராகப் பதவியேற்று நூறு நாள்கள் நிறைவுற்றுள்ள நிலையில், இந்தியா - அமெரிக்கா இடையேயான நல்லுறவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று அமெரிக்க நாடாளுமன்ற அவைக் குழுவின் இணைத் தலைவர் மார்க் வார்னர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில்;

"இந்த நூறு நாள்களில் இரு நாடுகளின் தலைமையும் இணைந்து செயற்படுவதால் நல்லுறவில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளதைக் காண மகிழ்ச்சியாக இருக்கிறது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி இந்த மாத இறுதியில் மேற்கொள்ள இருக்கும் அமெரிக்கப் பயணத்துக்கு அடித்தளமிடும் வகையில், புதிய எழுச்சியுடனும் உத்வேகத்துடனும் நாம் செயற்பட வேண்டும். வெறும் பேச்சோடு நின்றுவிடாமல், ஆக்கபூர்வமாகச் செயல்படுவோம் என்பதை அமெரிக்கா காண்பிக்க வேண்டும். இரு நாடுகளிடையேயான நல்லுறவை உறுதிப்படுத்த முன்னதாக நான் தெரிவித்த பல்வேறு முக்கிய ஆலோசனைகளை செயற்படுத்துவதில் நல்ல முன்னேற்றம் உள்ளது."- என்று தெரிவித்துள்ளார்.

"புதிய அரசின் நூறு நாள்கள்" என்கிற செயல் திட்டத்தை, மார்க் வோர்னர் கடந்த மே மாதம் வெளியிட்டார். அமெரிக்கா, இந்தியா இடையே நல்லுறவை மேம்[illegible]த்த இதில் பல்வேறு ஆலோ[illegible]னைகள் தெரிவிக்கப்பட்டிருந்தன. இரு நாடுகளிடையே பேச்சு நடத்தும்போது, பாதுகாப்புத் துறை சார்ந்த தொழில்நுட்பம் தொடர்பாகப் பேச்சு நடத்த முக்கிய நபரை நியமிக்க வேண்டும் என்ற ஆலோசனையும் அதில் உட்படும்.

இந்நிலையில், மோடி பயணத்தின்போது, அமெரிக்கப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பத்துறை சார்பில் பேச்சு நடத்தும்என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

அதேவேளை, இந்த மாத இறுதியில் பிரதமர் மோடி அமெரிக்கப் பயணம் மேற்கொள்ளவிருக்கிறார். செப்ரெம்பர் 29, 30 ஆகிய இரு நாள்களும் அவர் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுடன் பேச்சு நடத்தவிருக்கிறார். (ற)

## சிறுமி கடத்தல்: பிரதான நபர் கைது



கொழும்பு.செப்.15
குருநாகலில் நாலரை வயதுச் சிறுமியைக் கடத்திய பிரதான சந்தேக நபர் கைது செய் யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்ச கருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

குருநாகல், கனேவத்தை, அம்ப கொலவெவ பிரதேசத்தில் கடந்த 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை கடத்தப்பட்ட தாமரா கேஷனி பண்டார என்ற சிறுமி கடந்த வெள்ளிக்கிழமை மீட்கப்பட் டார்.

வெல்லவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டீகம என்ற பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.45 மணியளவில் குறித்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த)

# பாங்கொக் மாநாட்டை புறக்கணிக்கும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள்

## இலங்கை அரச சார்பற்ற அமைப்புகளுக்குத் தடையின் எதிரொலி

கொழும்பு,செப்.15
ஆஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் பாங்கொக்கில் திங்கட்கிழமை நடைபெறவுள்ள ஆசிய மனித உரிமை மாநாட்டில் கலந்து கொள்வதற்கு இலங்கை இராணுவத்தின் வேண்டுகோளின் பேரில் இலங்கை அரச சார்பற்ற அமைப்புகள் இரண்டுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஆத்திரமடைந்த சர்வதேச மனித உரிமை அமைப்புகள் அந்த மாநாட்டிலிருந்து விலகப் போவதாக எச்சரித்துள்ளன.

சிட்னி பல்கலைக்கழகமே இவ்வாறு இலங்கை அரசசார்பற்ற அமைப்புக ளுக்கு இடமளிக்க மறுத்துள்ளது.

> பிரிட்டனைச் சேர்ந்த இலங்கையின் சமாதா னத்துக்கும் நீதிக்குமான பரப்புரை அமைப்பு மாநாட்டில் கலந்து கொள்ளவேண்டா மென ஏனைய அமைப்பு களைக் கோரியுள்ளது.


குறிப்பிட்ட மாநாட்டில் கலந்து கொள்கின்ற இலங்கை பாதுகாப்புப் படை பிரதிநிதிகள் குழு இலங்கையிலிருந்து எந்த அரசசார்பற்ற அமைப்புகளுக்கும் அழைப்பு விடுக்க வேண்டாம் என மாநாட்டு ஏற்பாட்டாளர்களைக் கேட்டுக் கொண்டதாக கார்டியன் ஆஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

எனினும், இரண்டு அரசசார்பற்ற அமைப்புகளுக்கு அழைப்பு விட தீர்மானித்த ஏற்பாட்டாளர்கள் பின்னர் அதனையும் இரத்துச் செய்துள்ளனர்.

குறிப்பிட்ட மாநாட்டில் இலங்கை இராணுவத்தினர் பலர் உரைகளை நிகழ்த்தவுள்ளதாகவும் கார்டியன் ஆஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

இதேவேளை-பிரிட்டனைச் சேர்ந்த இலங்கையின் சமாதானத்துக்கும் நீதிக்குமான பரப்புரை அமைப்பு மாநாட்டில் கலந்து கொள்ளவேண்டாமென ஏனைய அமைப்புகளைக் கோரியுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையும் இரண்டு இலங்கை அரசசார்பற்ற அமைப்புகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டதைக் கண்டித்துள்ளது. (த)



ஊவா மாகாண சபைக்கான தேர்தல் பரப்புரை சூடு பிடித்திருக்கின்ற நிலையில், ஐக்கிய தேசியக்கட்சியின் முதலமைச்சர் வேட்பாளர் ஹரின் பெர்னாண்டோவை ஆதரித்து ஹப்புத்தளை.பேருவிலா தோட்டத்தில் நேற்றுப் பரப்புரைக் கூட்டமொன்று நடைபெற்றது. ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ருவான் விஜயவர்தன, மங்கள சமரவீர, மேல் மாகாண சபை உறுப்பினர் மனோ கணேசன், மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சி.வை.பி. ராம் உள்ளிட்டோரும் பங்கேற்றனர். (த)

## குழந்தைகளை விற்கும் யுவதி சிக்கினார்

கொழும்பு, செப்.15
கணவன் இல்லாது பிறக்கும் குழந்தைகளை விற்பனை செய்து வருவதாகக் கூறப்படும் 24 வயதான யுவதியொருவரைக் கைது செய்துள்ளதாகச் சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

சிலாபம் பங்கதெனிய பிரதேசத் தைச் சேர்ந்த யுவதியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த யுவதி அண்மையில் இரண்டு குழந்தைகளை விற்பனை செய்துள்ளதாகவும் அதிலொன்று பிறந்து 7 நாள்களேயான சிசு என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், கைது செய்யப்பட்ட அந்த யுவதி, தான் குழந்தைகளை விற்பனை செய்பவர் இல்லை என்றும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (த)

## ஹொரணையில் ஒருவர் சுட்டுக்கொலை



கொழும்பு.செப்.15
களுத்துறை மாவட்டத்தின் ஹொரணைப்பகுதியில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 35 வயதான நபர் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் ஓட்டோவில் சென்று கொண்டிருந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அடையாளம் தெரியாத இருவரால் இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ளப்பட்டுள்ளது என்றும்- இந்தச் சம்பவம் குறித்த விசாரணைகளை ஹொரணைப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (த)

# புகலிடம் கோருவோரை கைதுசெய்து நாடு கடத்துவதை உடனே நிறுத்துக

## இலங்கை அரசை வலியுறுத்துகிறது ஐ.நா. அமைப்பு

கொழும்பு.செப்.15
இலங்கையில் புகலிடம் கோருபவர்களை அரசு கைது செய்து தடுத்துவைப்பது மற்றும் நாடு கடத்துவது குறித்து அகதிகளுக்கான ஐ.நா. அமைப்பான யு.என்.எச்.சி.ஆர். கவலை வெளியிட்டுள்ளது.

அத்துடன் இலங்கை அரசு இவ்வாறான நடவடிக்கைகளைக் கைவிடவேண்டும் என்றும் அது கோரியுள்ளது.

இலங்கை அதிகாரிகள் கடந்த செப்ரெம்பர் முதல் புகலிடக் கோரிக்கையாளர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

இந்த நடவடிக்கைகளில் பாகிஸ்தான், ஆப்கான் நாடுகளைச் சேர்ந்த 328 பேரைக் கைதுசெய்துள்ள அதிகாரிகள் இவர்களில் 183 பேரை நாடு கடத்தியும் உள்ளனர்.

இன்னும் 102 பேர் இலங்கை சிறைகளில் தடுப்பில் உள்ளனர்.

நாம் இந்த தஞ்சக்கோரிக்கையாளர்கள் விடயம் குறித்து இலங்கை அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினோம்.

இதன் போது கைதுசெய்யப்பட்ட வர்களை விடுதலை செய்வோம் என்று அந்த அதிகாரிகள் உறுதிமொழி வழங்கினர் எனவும் அகதிகளுக்கான ஐ.நா. அமைப்பின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையில் தஞ்சம் கோருபவர்களைக் கைது செய்வது, நாடுகடத்துவது போன்ற நடவடிக்கைகளை இலங்கை நிறுத்தவேண்டும் என்றும் யு.என்.எச்.சி.ஆர். கேட்டுக்கொண்டுள்ளது. (த)

## விபத்தில் தாய், மகன் சாவு சிசு உட்பட மூவர் படுகாயம்



கொழும்பு, செப்.15
ரன்தெனியவில் இடம்பெற்ற வாகன விபத்தில் தாய் மற்றும் மகன் உயிரிழந்ததுடன், பிறந்து இரண்டு நாள்களான சிசு உட்பட மூவர் படுகாயமடைந்த நிலையில் சிரிகல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

எல்ல- வெல்லவாய பாதையில், ஓட்டோ ஒன்றுடன் வான் ஒன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மோதியதாலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தின் மூலம் பாதிக்கப்பட்டோர் ஹாலி-எலயை வசிப்பிடமாகக் கொண்டவர்கள்.

குறித்த வானின் சாரதியை கைது செய்துள்ளதுடன், அவரை வெல்லவாய நீதிமன்ற நீதிவானிடம் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த)

# ஊவாத் தேர்தலுக்குப் பின்னர் முஸ்லிம்களுக்கு தீர்வு யோசனை

## முன்வைக்கிறது மு.கா.

கொழும்பு.செப்.15
தமிழர்களின் பிரச்சினைகளுக்கான அரசியல் தீர்வு முயற்சியில் முஸ்லிம்களும் உள்ளடக்கப்படுவார்கள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ள நிலையில், முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தீர்வு யோசனை ஒன்றை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஊவா மாகாணசபைத் தேர்தலின் பின்னர் வெளியிடவுள்ளது.

'வடக்கு - கிழக்கு தமிழ் மொழி பேசும் மக்களின் தாயகம்' என்ற கோட்பாட்டை ஏனைய முஸ்லிம் கட்சிகள் ஏற்கும் பட்சத்தில் இந்தத்தீர்வு யோசனை தொடர்பில் அந்தக்கட்சிகளுடன் பேசுவதற்கும் முஸ்லிம் காங்கிரஸ் தயாராக இருப்பதாக மு.கா. உயர்பீடம் தெரிவித்துள்ளது.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசியல் தீர்வை விரைவாகப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அண்மையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேசியது.

அதனைத் தொடர்ந்து இந்தத் தீர்வு முயற்சியில் முஸ்லிம்களும் உள்வாங்கப்படுவார்கள் என கூட்டமைப்பு அறிவித்தது. கூட்டமைப்பின் இந்த நிலைப்பாடை வரவேற்றுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஊவா தேர்தல் முடிந்ததும் இது தொடர்பில் கூட்டமைப் புடன் பேச்சு நடத்தப்படும் எனத் தெரிவித்தது.

மேற்படி விடயம் தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் இப்போதே கூடி ஆலோசிக்கத் தொடங்கிவிட்டதாகக் கட்சியின் உயர்பீடம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு கலந்தாலோசிக்கப்பட்டதன் அடிப்படையில் முஸ்லிம்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தீர்வு யோசனை ஒன்றை ஊவா மாகாண சபைத் தேர்தல் முடிந்ததும் வெளியிடுவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவுக்கு முஸ்லிம் காங்கிரஸால் வழங்கப்பட்ட தீர்வு யோசனைகள், கட்சி மாநாடுகளில் இதுவரை நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், கரையோர மாவட்டக் கோரிக்கை மற்றும் இப்போது முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தீர்வு யோசனை முழுமையானதாக வெளியிடப்பட வுள்ளது.

தமிழர்களின் தீர்வு முயற்சியைக் குழப்பாது தமிழ் -முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை சமமாக -நியாயமாகத் தீர்த்துக்கொள்ளும் வகையில் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக மு.கா. உயர்மட்டம் மேலும் தெரிவித்துள்ளது. (த)



## நச்சின்னு கடி

தாத்தா ஐம்பத்தைந்து வயதில் மரணமடைந்தார். எனக்கு அறுபத்தைந்து வயது. இன்னும் உயிருடன் இருக்கிறேன்.
இரண்டுமே வருத்தப்பட வேண்டிய விடயம்தான்.

நேற்றைய விருந்தில், உனது கணவர் குடிச்சிருப்பதை எப்படிக் கண்டுபிடித்தாய்?
தேசிய கீதத்திற்கே கைதட்டினாரே

டேய் மாது எனக்கு வாழ்க்கையில் ஒரு பிடிப்பு இல்லை. தற்கொலை செய்யலாம் என்று தோன்றுது
அட அசடு அதுக்காக தற்கொலை செய்யாதே. கல்யாணம் செய். அதுவே போதும்





# சினேகா, ஜெனிலியா

நடிகைகள் சினேகா மற்றும் ஜெனிலியா கர்ப்பமாக இருப்பதாகவும் விரைவில் தாயாகப் போகிறார்கள் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. ஷங்கரால் போய்ஸ் படத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஜெனிலியா, தமிழ், தெலுங்கில் முன்னணி நடிகையாகத் திகழ்ந்தார்.

பின்னர் ஹிந்தி நடிகர் ரிதேஷ் தேஷ்முக்கை காதலித்து மணந்தார். 2012 இல் திருமணம் நடந்தது. ஜெனிலியா தற்போது கர்ப்பமாக உள்ளார். இதனை அவரது கணவர் ரிதேஷ் தேஷ்முக் அறிவித்துள்ளார். கர்ப்பமாக இருப்பதால் பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பதை ஜெனிலியா தவிர்த்து வருகிறார். படங்களிலும் நடிப்பதில்லை. மருத்துவர்கள் ஆலோசனைப்படி வீட்டிலேயே ஓய்வெடுத்து வருகிறார்.

இதுபோல் சினேகாவும் கர்ப்பமாக இருப்பதாக கூறப்படுகிறது. சினேகாவுக்கும் நடிகர் பிரசன்னாவுக்கும் 2012 இல் திருமணம் நடந்தது. ஆனால் சினேகாவின் கர்ப்பம் குறித்து இதுவரை சினேகாவோ, பிரசன்னாவோ எதுவும் தெரிவிக்கவில்லை.

# அழகு













# ரிலாக்ஸா வாசியுங்க

ஓர் ஊரில் அரசன் ஒருவன் இருந்தார். அதிகாலையில் எழுந்தவுடன் சூரிய உதயத்தைப் பார்ப்பது அவனது வழக்கம்.

வழக்கம் போல் அன்றும் ஜன்னலைத் திறந்த அரசருக்கு ஏமாற்றம்! சூரிய உதயத்துக்குப் பதில் அவர் கண்களில் ஒரு பிச்சைக்காரன்தான் தோன்றினான். போயும் போயும் இவன் முகத்தில் தான் விழிப்பதா என்று கடும் வெறுப்புடன் திரும்பினார் அரசர். திரும்பிய வேகத்தில் சுவற்றில் அவரது தலை அடிபட்டு இரத்தம் கொட்டியது. வலியோ பொறுக்க முடியவில்லை. அத்துடன் கோபம் வேறு பொங்கியது.

பிச்சைக்காரனை இழுத்து வருமாறு கட்டளையிட்டார். காவலர்கள் அவனை இழுத்துக் கொண்டு வந்து மன்னர் முன்னே நிறுத்தினர். அரச சபை கூடியது. தனது காயத்துக்குக் காரணமாக இருந்த அந்தப் பிச்சைக்காரனை தூக்கிலிடுமாறு தண்டனையும் கொடுத்தார்.

பிச்சைக்காரன் கலங்கவில்லை; கலகலவெனச் சிரிக்கத் தொடங்கினான். சபையில் இருந்தவர்கள் திகைப்புடன் விழித்தனர். அரசனுக்கோ, கோபம் கட்டுக்கடங்காமல் போய் விட்டது. பைத்தியக்காரனே! எதற்குச் சிரிக்கிறாய் என்று ஆத்திரத்துடன் கேட்டார்.

அரசே...! என் முகத்தில் விழித்ததால் உங்கள் தலையில் சிறு காயம் மட்டும் தான் ஏற்பட்டது. ஆனால், உங்கள் முகத்தில் நான் விழித்ததால், என் தலையே போகப் போகிறதே. அதை நினைத்தேன் சிரித்தேன் என்றான்.

மன்னன்தலை தானாகவே கவிழ்ந்து விட்டது. தவறை உணர்ந்து தண்டனையை ரத்து செய்து பிச்சைக்காரனை விடுவித்தான்.









# நாய் கவனம்

காலுறைகளை வயிற்றில் சுமந்த நாயைப் பற்றிய சுவாரஸ்யமான சம்பவமொன்று போட்லாந்து நாட்டில் பதிவாகியுள்ளது. குறித்த நாயின் வயிற்றிலிருந்த 44 காலுறைகள் சிகிச்சையின் மூலம் அகற்றப்பட்டுள்ளன. 64 கிலோ கிராம் நிறைகொண்ட க்ரேட் டேன் இனத்தை சேர்ந்த மூன்று வயதுடைய நாயின் வயிற்றிலிருந்தே இவ்வாறு காலுறைகள் அகற்றப்பட்டுள்ளன.

இந்த நாயானது, காலுறைகளைக் கடிக்கும் பழக்கத்தை கொண்டிருந்த போதும், அவற்றை விழுங்கி விடும் என்பது தொடர்பாக நாயின் உரிமையாளர்கள் அறிந்திருக்கவில்லை. அண்மையில் உடல் நலம் பாதிக்கப்பட்ட மேற்படி நாயை, அதன் உரிமையாளர்கள் விலங்குகளுக்கான அவசர சிகிச்சை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இதன்போது மேற்கொள்ளப்பட்ட கதிர்வீச்சு பரிசோதனையின் போது, நாயின் வயிற்றில் பருத்திப் பொருள்கள் இருப்பது தெரியவந்துள்ளது. இதனையடுத்து, உடனடியாக மேற்கொள்ளப்பட்ட இரண்டரை மணித்தியால சிகிச்சையின் பின்னரே மேற்படி 44 காலுறைகளும் நாயின் வயிற்றிலிருந்து அகற்றப்பட்டுள்ளன.

கிடைப்பதைக் கடித்து உண்பது நாய்களது பிறவிக் குணம் என்பதால், அது தொடர்பில் உரிமை யாளர்களே கவனத்துடன் செயற்பட வேண்டும் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

# குடும்ப வன்முறையால் சிக்கித்தவிக்கும் பெண்கள்



சுகி பாலா, இணுவில்.

பெண்கள் நாட்டின் கண்கள் என்பது வெறும் பொய் மொழியாகவே சமூகத்தவர்களால் வெளியில் கூறப் பட்ட வண்ணம் உள்ளன. ஆனால் பெண்களுக்கு சமூகம் கொடுக்கும் மதிப்பு என்ன என்பதை நினைத்துப் பார்ப்போமா னால் சமூகத்தில் வேதனையின் பிறப்பிடமாக இன்று பெண்கள் வாழ்ந்து கொண்டி ருக்கிறார்கள் இது தான் பெண்களின் இன்றைய நிலை. அன்று தொட்டு இன்று வரை பெண்களை மென்மையானவர்களாகவும், எதையும் தாங்கிக்கொள்ளும் சுபாவம் படைத்தவர்களாகவும் இலக்கியங்களிலும் சரி, யதார்த்தத்திலும் சரி கூறப்பட்டு வந்தாலும் இது ஒரு வகையில் பெண்களை புகழ்வது போலக் கூறப்பட்டாலும் பெண்களை அடக்கி ஆளுவதே உள்ளார்ந்த நோக்கமாகும். அவர்களை புகழ்ந்து விட்டு ஒரு தலையாட்டிப் பொம்மையாக்கி தமக்கு அடிமையாக மாற்றும் தந்திர யுக்தியாகும். பெண்களைப் போற்றுகின்ற சமூகம் ஒருபுறம் இருந்தாலும் அவளைத் தூற்றும் சமூகமும் இருக்கத்தான் செய்கின்றன.

பெண்கள் இன்று எவ்வளவு தான் உயர்ந்து சாதனைகளைப்படைத்து உயர் பதவிகளில் வகித்தாலும் இன்னும் ஆண் வர்க்கத்துக்கு அடிமைப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். அப் பெண்ணானவள் குடும்பம் என்ற வகையில் ஓர் ஆணுக்கு அதாவது தன் கணவனுக்குக் கட்டுப்பட்டவளாகவே இருக்க வேண்டியுள்ளது. இது பெண்களுக்கு சமூகம் போட்ட வேலி என்று கூறப்பட்டாலும் பெண்களும் இதற்குக் காரணமாக உள்ளனர்.

தனது குடும்பம், குடும்ப கௌரவம் என தனக்கு தானே ஒரு வரையறையை வைத்துக் கொண்டு அதில் இருந்து மீள முடியாதவளாக குடும்பப் பெண்ணாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பெண்ணுக்கான மதிப்பு இங்கு பெருமையாகப் பேசப்பட்டாலும் அவளுக்கான தனிப் பட்ட உரிமைகள், சுதந்திரங்கள் இந்தக் குடும்ப வரையறைக்குள் பூட்டப்பட்டுள்ளன.

குடும்பம் என்ற போக்கில் பெண் அடக்கப்பட்டுள்ளதால் தனக்கு நடக்கும் வன்முறைகளையும் வெளியில் சொல்ல முடியாமல் உளத்தாக்கங்களுக்கு உள்ளாகி நாளாந்தம் செத்துப்பிழைத்துக் கொண்டிருக்கிறாள்.

யாழ்ப்பாணத்திலும் இவ்வாறான குடும்ப வன்முறைச் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இந்த வன்முறைகள் பெண்களின் முட்டாள் தனத்தில் நடைபெறுகின்றனவா அல்லது ஆணாதிக்கத்தால் நிகழ்த்தப்படுகிறதா? என்பதை பாதிக்கப்படும் பெண்கள் தான் விடைகாண வேண்டும்.

குடும்பத்தில் பெண்களுக்கு வன்முறைகள் அதிகமாக கணவனாலேயே நிகழ்த்தப்படுகின்றன. அதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். தந்தையாலோ அல்லது சகோதரனாலோ பெண்களுக்கு வன்முறைகள் ஏற்படுத்தப்படுவது எமது சமூகத்தில் மிகக் குறைவு காரணம் அதற்குத் தடையாகக் கேள்வி கேட்கும் ஸ்தானத்தில் இருக்கும் தாய் எனும் பெண் இருப்பாள். ஆனால் திருமணத்தின் பின்னால் பெண்ணுக்கு நிகழ்த்தப்படும் வன்முறைகளை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. ஏனென்றால் அந்த ஆண் பாதிக்கப்படும் பெண்ணின் கணவன். அவனுக்கான அதிகாரத்துடன் அவன் வன்முறையை ஏற்படுத்தும் போது பாதிக்கப்படும் பெண் பணிந்து போக வேண் டியுள்ளது. தனக்கு ஏற்படும் வன்முறையை வெளியில் சொல்ல முற்பட்டாலோ அல்லது கத்தி ஆரவாரப்பட்டாலோ அவள் மீதான தாக்குதல்கள் சரமாரியானதாக இருக்கும்.

தொடர்ந்து மன முறிவுகள் ஏற்பட்டு பிரிந்து வாழ வேண்டிய நிலைக்கும் அவள் தள்ளப்படுவாள். குடும்ப வன்முறை என்பது, வெறும் உடல் ரீதியாக அடித்து துன்புறுத்துவது மட்டு மல்ல, அவளுடைய தேவைகள் மறுக்கப்படுவதும் வன்முறைதான்..!!

ஆணை விட அதிகம் படித்தாலும், சீதனம் கொஞ்சம் குறைந்தாலும், அங்கு வன்முறை தலை விரிக்கிறது..!! பெண் வன்முறைகள், பெண்களுக்கு எதிரான தாக்குதல்கள் பெண்ணைச் சார்ந்தவர்களாலும், சாராதவர்களாலும் ஏற்படுகின்றன.

இதில் பெண்ணைச் சார்ந்தவர்கள் எனும் வகையில் அப்பெண்ணின் கணவனாலும் அவளுக்கெதிரான வன்முறைகள் அதிகரிக்கப்பட் டுள்ளன.

கண்டவுடன் கண்கெட்டுத்தனமாகக் காதல் கொள்ளும் காமுகர்கள் மத்தியில் உண்மைக் காதலை அறியாமல் அவர்களின் வசை மொழிகளுக்கு மயங்கி காதல் திருமணம் செய்து தமது உற்றார் உறவினர்களை வெறுத்து ஒதுக்கி வீட்டை விட்டு ஓடிப்போய் திருமணம் செய்கின்றார்கள் பெண்கள்.

ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள் என்பது பழமொழி. அதனால் தான் என்னவோ திருமணம் முடித்து சில காலம் அன்பாக இருப்பார்கள் பின்பு ஒருவரையொருவர் எதிர்த்து கருத்து முரண்பாடுகளைத் திணித்துக் கொள்வார்கள். அதன் மாற்று வடிவமாக குடும்ப விரிசல் தலைவிரித்தாடும்.

இந்த வீட்டு வன்முறைகளால் பாதிக்கப்படுவது அதிகமாக வீட்டை விட்டு ஓடிப்போய் திருமணம் செய்தவர்களே. அதற்காக காதலையும், காதலர்களையும் நான் குறை கூறவில்லை. காதலித்து நல்லா வாழ்ந்தவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். ஆனால் சிலர் காதலித்து திருமணம் செய்தவர்களே குடும்ப வன்முறையால் பாதிக்கப்படுகின்றனர். உதாரணமாக காதலிக்கும் போது உயிரையே கொடுப்பேன் எனக் கூறும் காதலர்கள் திருமணமான பின்பு சண்டைகள், சச்சரவுகள், சந்தேகங்கள், பொருளாதார நெருக்கடி எனப் பல இடர்களால் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர். நமது கலாசாரத்தின் மிகப்பெரிய கொடுமை, அப்பாவிடம் அடி வாங்காமல் வளரும் பெண், குடிகாரக் கணவனிடம் அடி வாங்கி அழுவது வேதனையான உண்மை...!!

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறைய, கணவர்கள் அடிப்பதில் தவறு ஒன்றுமில்லை என்ற பெண்களின் அழுகிய சிந்தனைகள் மாற வேண்டும்...!!

வீட்டை விட்டு உறவுகளை விட்டு ஓடித் திருமணம் செய்யும் பெண்கள் உறவுகளால் தனித்துவிடப்பட்டு ஓரங்கட்டப்பட்டு தனிமைப்படுத்தப்படும் போது, கேள்வி கேட்க எவருமின்றி அவள் கணவனால் உடல், உள ரீதியாக துன்புறுத்தப்படுகின்றாள். இங்கு அவள் தனக்கு நிகழ்த்தப்படும் கொடுமைகளைத் தாங்கித்தான் ஆக வேண்டும்.

ஆனால் இன்னும் எத்தனை காலங்கள் பெண்கள் இவ்வாறான வன்முறைகளைச் சகித்துக் கொள்வது?

பெண்கள் தமக்கு நிகழ்த்தப்படும் வன்முறைகளை முடிந்தவரை தனது உறவினரிடமோ அல்லது நண்பர்களிடமோ பகிர்ந்து கொள்ள வேண்டும். இவளுக்கு நான் அடித்தால் அங்கு போய் சொல்லிவிடுவாள் தனது மரி யாதை போய்விடும் எனும் பயத்திலேயே சில ஆண்கள் தவிர்க்க வாய்ப்புக்கள் ஏற்படலாம்.

மாறாக ஒன்றுமே நடக்காதது போல் மூடி மறைப்பதால் இன்னும் வன்முறைகளால் அவர்களால் பாதிக்கப்பட வேண்டி நேரிடும். எனவே பெண்கள்தான் தங்கள் மனங்களில் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். குடும்பக்கௌரவம் தனியாக பெண்களுக்கு மட்டும் இல்லையே. இதை ஆண்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.



## பெண்ணியம் பேசுவதற்கு மட்டும் அல்ல

பெண்களை பூக்களாய்
வளர்க்காதீர்கள்
இது நந்தவன
தோட்டமல்ல
மனித மிருகங்களின்
காடு
புடைவை கட்ட மட்டும்
கற்றுத்தராதீர்கள்
கண்களால்
துகிலுரிக்கும்
துரியோதனர்களின்
கண்களைக் கட்டவும்
கற்றுத்தாருங்கள்
அடுப்பறைக் கூண்டிலிருந்து
பறக்க நினைக்கும்
சிறகுகள் பொசுக்கப்படலாம்
எத்தனை முறை
தீயிலிட்டாலும்
உயிர் பெற்று வரும்
பீனிக்ஸ் பறவையாய் இரு
ஒரு பெண்ணாய் மட்டுமே
உன்னைத் தோற்கடிக்க
நினைப்பவர்கள்
வென்றுவிடக்கூடாது

## பாரதி கண்ட பெண்கள்

அடுப்படியில் அடங்கிவிட
அடிமைகள் இல்லை நாங்கள்
பொங்கியெழும் துணிவு கொண்ட
புதுமைப் பெண்கள்

வீட்டினிலே நாங்கள் என்றும்
மென்மை மங்கைகள்
விருப்புடனே சேவை செய்யும்
அன்பின் நெஞ்சங்கள்

அடக்கிடுவோம் வீரர் நாங்கள்
அகந்தைகளை நாளும்
அநியாயம் ஒழித்திடுவோம்
அனைவருமாய் கூடி



தவறு செய்தால் திருத்திக் கொண்டு
மேலே செல்லுவோம்
தவறிக் கூட தவறாய் நாங்கள்
தண்டிக்க மாட்டோம்

அடிக்க வரும் காளையரை
அன்பால் திருத்துவோம்
அதையும் மீறி அடிக்க வந்தால்
அடித்து நொருக்குவோம்

வீசும் வலை விழுவதில்லை
எங்கள் தேசத்தில் – தூய
விழுதுகளால் நிரம்பிடட்டும்
எங்கள் வாழ்க்கை

எளிமை தன்னை என்றும்
எங்கள் வாழ்வில் கொள்ளுவோம்
ஏய்க்க வரும் கயவர் தம்மை
எதிர்த்து நின்று கோசம் போடுவோம்

சுட்டெரிக்கும் சுடர்கள் நாங்கள்
வீர மங்கையர் – எம்மை
இழிவு படுத்தும் மூடர் தம்மை
கொளுத்தி அழிப்போம்

தடுமாற்றம் கண்டிடாமல்
நேராய் செல்லுவோம்
அன்பு கொண்டு வீட்டுடனே
நாட்டை ஆளுவோம்

# தினசரிகளைப் படிப்பதற்கும் மக்களுக்கு ராணுவம் தடை

## சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, செப்.15

பூநகரியில் சில தினசரிகளை மக்கள் பார்ப்பதற்கும் இராணுவம் தடைவிதித்துள்ளதுடன் வர்த்தகர்களையும் மிரட்டி வருகின்றது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

கடந்த 11ஆம் திகதி முழங்காவில் கிருஷ்ணநகர் கிராமத்தில் கோழிக்குஞ்சுகள் உற்பத்தி நிலையத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் தெரிவித்தார்.



உற்பத்தி நிலையத்துக்கு அடிக்கல் நடுகையில்

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வட மாகாண சபை தோற்றுவிக்கப்பட்ட பின்னர் இவ்வாறான கூட்டத்தில் பேசுவதையிட்டு மனம் மகிழ்வடைகின்றேன். ஏனெனில் கிராம அபிவிருத்தி என்பது எமது ஒவ்வொரு மக்களின் அபிவிருத்தியைக் குறிக்கோளாகக் கொண்டது.

கிராமங்கள் அபிவிருத்தியடைகின்றபோது மாவட்டம் நாடு எல்லாம் அபிவிருத்தியடைகின்றது. போர் முடிந்து 5 வருடங்கள் நிறைவடைந்துவிட்டன.

எவ்வளவோ அபிவிருத்திப் பணிகள் செய்யவேண்டிய நிலையில் அரசைப் பொறுத்தவரையில் தாங்கள் வீதிகள் அமைக்கின்றோம். மின்சாரம் வழங்குகின்றோம். பாடசாலைகள் அமைக்கின்றோம் என்று சொன்னாலும் கூட ஒரு போரில் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான பெண்கள் தமது கணவன்மாரை இழந்து குடும்பத் தலைவிகளாகக் குடும்பங்களின் சுமைகளை முன்னெடுத்துச் செல்லமுடியாத நிலையில் உள்ளனர். அந்தப் பெண்களுக்கான சிறப்பான திட்டங்களைத் தீட்டி கௌரவமாக வாழவைக்கவேண்டிய அரசு அவ்வாறு செய்யாதது மட்டுமல்ல செய்யக் கூடியவர்களான மாகாண அரசை செய்யவிடாமல் தடைசெய்வதுடன், மாகாண அரசின் நிர்வாகத்தைக் குழப்பி தனது ஆளுநரூடாகவும் தனது புலனாய்வுத்துறை ஊடாகவும் இராணுவத்தினர் ஊடாகவும் இதனைச் செய்து வருகின்றது.

இந்தக் கூட்டத்துக்கு எவரும் செல்லக் கூடாது என்று இராணுவம் தடைவிதித்ததாக நான் இங்கு வந்தபோது அறிந்தேன். அது மாத்திரமல்ல அரசால் அங்கீகரிக்கப்பட்ட தினசரிப் பத்திரிகைகளைக் கூட விற்கக்கூடாதென சொல்லக்கூடிய நிலையில் தான் இங்கு இராணுவம் உள்ளது.

பூநகரிக்குச் சென்றால் சில தினசரிப் பத்திரிகைகளை வாங்கமுடியாது. கடைக்காரர்கள் மிரட்டப்பட்டுள்ளார்கள். பத்திரிகைகள் கூட விற்கக்கூடாது என்று சொல்லக் கூடியளவுக்கு பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி இலங்கை வருபவர்கள் எல்லோரிடமும் ஜனநாயகம் பற்றி பேசுகின்றார். ஆனால் நாங்கள் எவ்வாறான அடக்குமுறைக்குள் உட்பட்டிருக்கின்றோம் என்பது எல்லோருக்கும் தெரியும். எல்லாவற்றையும் முறியடித்துத்தான் எமது மக்கள் கூடியிருப்பது மகிழ்வளிக்கின்றது. யுத்தம் முடிந்தாலும் கூட இன்னொரு யுத்த பூமியென்று சொல்லக்கூடிய அடக்கு முறைகளுக்கு மத்தியில் பெருமளவு பெண்கள் கூடியிருப்பது பாராட்டுக்குரியது-என்றார். (த-18)

# 58 விவசாயிகளுக்கு காப்புறுதிச் சபையால் நட்ட ஈடு வழங்கல்

முல்லைத்தீவு, செப்.15

வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் 2013- 2014 ஆண்டுகளில் செய்கை பண்ணப்பட்ட பெரும் போகத்தில் நட்டமடைந்த விவசாயிகளுக்கு காப்புறுதிச் சபையால் நட்ட ஈடு வழங்கப்பட்டது.

ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலையத்தில் நடைபெற்ற நட்ட ஈட்டுக் காசோலை வழங்கும் விழாவில் 58 விவசாயிகளுக்கு 15 ஆயிரம் முதல் 75 ஆயிரம் ரூபா வரையிலான காசோலை மூலம் 16 லட்சத்து 90 ஆயிரத்து 948 ரூபா வழங்கப்பட்டது. மன்னார் மாவட்ட காப்புறுதிச் சபையின் உதவிப் பணிப்பாளர் பி.றிஸ்மி தலைமையில் இடம்பெற்ற நிகழ்விலேயே இந்தத் தொகை வழங்கப்பட்டது.

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 14 விவசாயிகளுக்கு 3லட்சத்து 29ஆயிரத்து 191 ரூபாவும் புதுக்குடியிருப்புப் பிரிவில் 06 பேருக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், குமிழமுனைப் பிரிவில் 19 பேருக்கு 5 லட்சத்து 44 ஆயிரத்து 359 ரூபாவும், துணுக்காய் பிரிவில் ஒரு விவசாயிக்கு 15 ஆயிரத்து 998 ரூபாவும், பாண்டியன்குளம் பிரிவில் 6 பேருக்கு 1 லட்சத்து 70 ஆயிரத்து 450 ரூபாவும், முள்ளியவளை பிரிவில் 06 பேருக்கு 1 லட்சத்து 10 ஆயிரத்து 500 ரூபாவும், மாங்குளம் பிரிவில் 06 பேருக்கு 1 லட்சத்து 70 ஆயிரத்து 450 ரூபாவும் மொத்தமாக 16 லட்சத்து 90 ஆயிரத்து 948 ரூபா காப்புறுதிச் சபையால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் முல்லை மாவட்ட அரச அதிபர் நா.வேத நாயகன், ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் ரி.லோகிதாஸன், காப்புறுதிச்சபை தலைவர் ஏ.தக நாயக்கா மற்றும் பொதுமுகாமையாளர் பண்டு வீரசிங்க, கமநலசேவை உதவி ஆணையாளர் ஆர்.விஜயகுமார், மன்னார் மாவட்ட காப்புறுதிச் சபை உதவிப் பணிப்பாளர் பி.எம்.பி. றிம்சி மற்றும் பெரும்பாக உத்தியோகத்தர், மக்கள், வங்கி முகாமையாளர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-500)

# ஆமை இறைச்சி வைத்திருந்தவர் வவுனியாவில் கைதானார்

வவுனியாவில் ஆமை இறைச்சியுடன் ஒருவர் பொலிஸா ரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னாரிலிருந்து நேற்று முன்தினம் கடலாமை இறைச்சிப் பையுடன் வந்தவர் வவுனியா பஸ் நிலையத்தை வந்தடைந்து பொது மலசலகூடத்துக்குச் சென்ற சமயம் சந்தேகத்துடன் பின் தொடர்ந்த பொலிஸார் அவர் வைத்திருந்த பையை சோதனை செய்தனர். இதன் போது ஆமை இறைச்சி அதில் இருந்தமையால் குறித்த நபரைக் கைது செய்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் விசாரணை செய்து வருகின்றனர். (த-402)

# காலபோக ெநற் செய்கைக்கான விதை நெல் விவசாயிகளுக்கு

முல்லைத்தீவு, செப்.15

முல்லைத்தீவு மாவட்டத்துக்குக் காலபோக நெற்செய்கைக்கான விதை நெல்லை தருவித்து வழங்க உள்ளதாக முல்லை மாவட்ட உதவி ஆணையாளர் யூ.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

2014 - 2015 காலபோக நெற்செய்கைக்கான விதை நெல்லை அம்பாந்தோட்டை, பொலனறுவை போன்ற மாவட்டங்களிலிருந்து தேவையான அளவு பெற்று விவசாயிகளுக்கு வழங்க உள்ளதாகவும், ஏற்கனவே விதை நெல்லுக்கான பணத்தை விவசாயிகள் முற்பணமாகச் செலுத்தியுள்ளனர் எனவும் தெரிவித்த



அவர், நெல் மானியமாகக் கொடுக்கப்படமாட்டாது. நிர்ணயிக்கப்பட்ட விலைக்கே வழங்கப்படும் எனவும் கூறினார்.

2013- 2014 இல் இடம் பெற்ற கடும் வறட்சி காரணமாக விதை நெல்லுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-500)

# படைமுகாமிலிருந்து வரும் கழிவு நீரினால் துர்நாற்றம்

முல்லைத்தீவு, செப்.15

முல்லைத்தீவு பிரதான வீதியில் தபாற்கந்தோருக்கு அண்மையாக உள்ள பாலத்தின் ஊடாக இராணுவ முகாமிலிருந்து வரும் கழிவு நீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுவதுடன் டெங்கு நுளம்பு பெருகவும் வாய்ப்பு ஏற்படுகின்றது எனக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

சுகாதாரத்துக்குப் பங்கம் ஏற்படும் வகையில் இந்தக் கழிவு நீர் தேங்கி நிற்பதனைச் சுகாதாரப் பகுதியினர் நேரில் பார்வையிட்டு அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு மக்கள் கோரியுள்ளனர்.

அதேபோன்று முல்லைத்தீவு பிரதான வீதியில் முள்ளியவளை சந்தி அம்மன் ஆலயத்துக்கு அண்மையில் உள்ள பாலத்தில் சந்தை மற்றும் வர்த்தக நிலையங்களில் உள்ள கழிவு நீர் தேங்கி துர்நாற்றம் வீசுவதோடு நுளம்பு பெருகும் சந்தர்ப்பமும் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (த-500)

# பொருத்தமற்ற காலநிலையால் வன்னி விவசாயிகள் அவலத்தில்

## முல்லைத்தீவு அரச அதிபர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, செப்.15

2012 ஆம் ஆண்டு வெள்ளம், 2013 ஆம் ஆண்டு வறட்சி, மீண்டும் 2014 ஆண்டில் வறட்சி என எமது மாவட்டத்துக்குப் பொருத்தமான காலநிலை அமையாததால் பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டு விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர் என வவுனியா, முல்லைத்தீவு மாவட்டத்தில் 2013- 2014 பெரும் போகத்தில் நட்டமடைந்த விவசாயிகளுக்கான நட்டஈட்டு காசோலை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேத நாயகன் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

விவசாயிகள் நட்டமடைந்து வரும் இவ்வேளையிலே நட்டத்தை ஈடு செய்வதற்கு விவசாயத்துக்கான காப்புறுதி செய்வதே சிறந்த வழியாகும். பயிர்ச்செய்கைக்கான நீர் விநியோகக் கூட்டங்களிலே அதனைத்தான் வலியுறுத்தி வருகிறோம். முன்னைய காலங்களில் காப்புறுதிப் பணம் வழங்குவதில் தாமதங்கள் ஏற்பட்டன. ஆனால் தற்போது அது காலதாமதமின்றி உடன் வழங்கப்படுகிறது.

எமது மாவட்டத்தில் 6 ஆயிரத்து 856 ஏக்கர் அழிவு ஏற்பட்டபோதிலும் மிகக் குறைந்த விவசாயிகளே காப்புறுதியைச் செய்துள்ளனர். அதில் ஈடுபட்டவர்களுக்குத்தான் இந்தக் காப்புறுதி வழங்கப்படுகிறது. அதே போன்று அனைவரும் காப்புறுதிசெய்வதன் மூலம் எமக் கெதிரான காலநிலை ஏற்படும் போது அனைவரும் காப்புறுதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த நட்டஈடு எமது மாவட்டத்திலேயே வைத்து வழங்கப்படுவதால் காப்புறுதிச் சபை தலைவருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். அது மட்டுமல்ல இனிவரும் காலங்களிலே கூடுதலான விவசாயிகள் இந்தக் காப்புறுதிகளைச் செய்யவேண்டும். ஏனெனில் இப்போதுள்ள காலநிலை எமக்கேற்றாற்போல அமைவதாகத் தெரியவில்லை.

ஐந்து ஆறு வருடங்களுக்கு முன்பிருந்த காலநிலையும் தற்போதுள்ள காலநிலையும் சற்று வித்தியாசமாக காணப்படுகிறது. காப்புறுதி செய்வதன் மூலமே காப்புறுதிப் பணத்தின் மூலம் ஓரளவு நட்டத்தை ஈடு செய்ய முடியும். எமது மாவட்டத்திலே 70 வீதமானவர்கள் விவசாயிகளாகஇருக்கின்றார்கள்.

எனவே இந்தக் காப்புறுதிச் செயற்பாட்டிலே அனைத்து விவசாயிகளும் இணைந்து காப்புறுதிகளைப் பெற்று கொள்ள வேண்டும்-என்றார். (த-500)

# குடிதண்ணீர்ப் பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை

முல்லைத்தீவு, செப்.15

முல்லை மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் குடிதண்ணீர்ப் பிரச்சினை தீர்ந்தபாடாக இல்லை. இதனால் சகல இடங்களுக்கும் நீர் விநியோகம் செய்யப்பட வேண்டிய கட்டாய தேவை ஏற்பட்டுள்ளது.



குறிப்பிட்டுக் கூறமுடியாத அளவுக்கு அனைத்து இடங்களிலும் உள்ள கிணறுகள் வற்றியதால் பெரும் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சில இடங்களுக்கு பிரதேச செயலகத்தாலும், சில இடங்களுக்கு இராணுவத்தினராலும் குடிதண்ணீர் பவுசர் மூலம் வழங்கப்படுகிறது.

ஆனால் வழங்கப்படும் நீரைப் போதியளவு சேகரித்து வைக்க அதற்கேற்ற கொள்கலன்கள் இல்லாமை பெருங்குறையாக உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மக்கள் குடி தண்ணீர் இன்றி, குளிப்பின்றி அவலப்படும் நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

எனவே சகல இடங்களுக்குமான நீர் விநியோகத்தை மேற்கொள்ள ஆவன செய்ய வேண்டும் என்று அவர்கள் கோரியுள்ளனர். (த-500)

# பேரப்பிள்ளையின் மீது தாத்தா துஷ்பிரயோகம்

யாழ்ப்பாணம், செப். 15

பேரப்பிள்ளையான 8 வயதுச் சிறுமியைத் தாத்தா பாலியல் துஷ்பிரயோகம் செய்த சம்பவம் ஒன்று யாழ். நாவலர் வீதிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

யாழ். நாவலர் வீதியில் உள்ள வீட்டில் வைத்தே பேரப்பிள்ளையைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார்.

68 வயதுடைய இவர் கடந்த ஒகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி முதல் ஒரு மாதம் வரை வீட்டில் வைத்துப் பேரப்பிள்ளையைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதுடன் பேரப்பிள்ளைக்கு இனிப்பு வகைகளையும் வாங்கி கொடுத்துள்ளார் என்று கூறப்படுகிறது.


8 வயதுச் சிறுமி இந்தச் சம்பவம் தொடர்பாகப் பெற்றோருக்குத் தெரியப்படுத்திய நிலையில், நேற்றுச் சனிக்கிழமை யாழ்.சிறுவர் பெண்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து உடனடியாகத் தாத்தா யாழ்.சிறுவர் பெண்கள் பிரிவு பொலிஸ் அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்புப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளார்.

இவரை சிறுவர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கையை யாழ். சிறுவர் பெண்கள் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (த-106)



கொழும்பு றோயல் கல்லூரி இரசாயனவியல் மன்றத்தினால் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆங்கில மொழிமூல விஞ்ஞானம் பயிலும் மாணவர்களுக்கான இரசாயனவியல் கருத்தரங்கு கடந்த 2 தினங் களாக யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கில் கொழும்பு றோயல் கல்லூரியின் ஆசிரியர் வ.செல்வரஞ்சன் கருத்துரை வழங்கினார். (த-14)

# டெங்கு ஒழிப்புச் செயற்பாட்டில் கந்தப்பசேகரம் வீதி புறக்கணிப்பு



மோசமான நிலையில் வீதி

யாழ்ப்பாணம்.செப்.15

யாழ். மாநகராட்சி மன்றத்தின் தேசிய டெங்கு ஒழிப்புச் செயற்பாட்டில் யாழ். நகரில் உள்ள கந்தப்பசேகரம் வீதி புறக்கணிக்கப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இந்த வீதியில் உள்ள வடிகால்கள் துப்புரவு செய்யப்படாமையால் துர்நாற்றம் வீசுவதோடு நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

வீதியின் குறுக்கே சேதப்பட்ட மதகின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படாத நிலையில் வீதியூடாகப் பயணிக்கும் மக்கள் சிரமப்படுவதோடு போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மதகின் வடிகால் சேதப்பட்டுள்ளதால் கழிவு நீர் வடிந்து ஓடுவது தடைப்பட்டுக் காணப்படுகின்றது.

இந்த வீதி சில மாதங்களாகச் சுத்திகரிக்கப்படாமையால் சாக்கடை வீதியாக மாறிக் காணப்படுகின்றது.

யாழ்.மாநகராட்சி மன்றத்தின் தேசிய டெங்கு ஒழிப்புவார நடவடிக்கையின் போது இந்த வீதியும் கவனிக்கப்பட வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-17)

# குருநகரில் இறங்குதுறையை அமைப்பது குறித்து ஆராய்வு

## கொழும்புக் குழுவினர் மேற்கொண்டனர்

யாழ்ப்பாணம்.செப்.15

குருநகர் கடற்கரைப் பகுதியில் இறங்குதுறையை அமைப்பதற்கான ஆய்வுகளைக் கொழும்பில் இருந்து வருகை தந்த ஆய்வுக் குழுவினர் நேற்று மேற்கொண்டனர்.

வெளிநாட்டில் இருந்து கிடைக்கப்பெற்ற நிதியுதவியில் இலங்கை அரசினால் அமைக்கப்படவுள்ள இந்த இறங்குதுறையின் முதற்கட்டப் பணிகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் இதற்கான கள ஆய்வுகள் நேற்று மேற்கொள்ளப்பட்டுள் ளன.

துறைமுகத்தில் ஐஸ் தொழிற்சாலை, எரிபொருள் நிலையம் ஆகியவற்றை அமைப்பதற்கான ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அப்பகுதி மீனவர்களுடனும் கலந்துரையாடி மீனவர்களின் தேவைகளையும் இந்தக் குழுவினர் கேட்டறிந்தனர்.

2010 ஆம் ஆண்டிலிருந்து மீனவர்களால் துறைமுகம் அமைப்பதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையில் துறைமுகம் அமைத்து தரப்படும்என கடற்றொழில் அமைச்சால் உறுதி மொழி வழங்கப்பட்டிருந்தது.

தற்போது வெளிநாட்டில் இருந்து இதற்கான நிதியுதவி கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் இதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (த-14)

# மயக்க மருந்து கலந்த குளிர்பானம் கொடுத்து யுவதி மீது துஷ்பிரயோகம்

## கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப். 15

குளிர்பானத்துக்குள் மயக்க மருந்தைப் போட்டு யுவதியை மயக்கிப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த இளைஞருக்கு எதிராகக் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் தனியார் விற்பனை நிறுவனம் ஒன்றின் முகாமையாளரே 22 வயதுடைய யுவதியை இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த குறித்த யுவதி குறித்த நிறுவனத்தில் கடமையாற்றி வந்துள்ளார்.

இவரைக் கோண்டாவில் பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து கடந்த ஜூலை மாதம் 10 ஆம் திகதி குறித்த முகாமையாளர் இவ்வாறு பாலியல் துஷ்பிர யோகம் செய்துள்ளார்.

பின்னர் அவர் யுவதியைத் திருமணம் முடிப்பதாகக் கூறி வந்ததாகவும், பின்னர் அவர் திருமணத்துக்கு மறுத்ததால் குறித்த யுவதி நேற்று சனிக்கிழமை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார் என்று கூறப்பட்டுள்ளது.

(த-106)

# நெடுந்தீவு—குறிகாட்டுவான் சேவைக்கு புதிய அரச படகு சாத்தியமேயில்லை

யாழ்ப்பாணம்.செப்.15

நெடுந்தீவு-குறிகாட்டுவான் படகுச் சேவைக்கான புதிய அரச படகொன்றை வழங்குவது தற்போதைக்குச் சாத்தியமில்லை. இவ்வாறு நெடுந்தீவுக்குக் கடந்த வியாழக்கிழமை வருகை தந்த அதிகாரிகள் குழு உறுதியாகத் தெரிவித்துள்ளது.

நெடுந்தீவு துறைமுகத்தை ஆழமாக்குவது தொடர்பாக ஆராய நேற்றுமுன்தினம் அதிகாரிகள் குழு நெடுந்தீவுக்கு வருகை தந்திருந்தது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் எஸ்.பி.அருளப்பு ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற அதிகாரிகளுக்கு இடையிலான கலந்துரையாடலில் நெல்சிப் திட்டத்தின் கீழ் நெடுந்தீவுக்கு வழங்கப்பட்டிருந்த புதிய படகுக்கான நிதி துறைமுகத்தை ஆழப்படுத்துவதற்காக மாற்றப்பட்டுள்ளதாகவும் விரைவில் துறைமுகத்தை ஆழப்படுத்தி வட தாரகையைச் சேவைக்கு விடவுள்ளதாகவும் தற்போது புதிய படகு ஒன்றைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது எனவும் தெரிவித்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அதிகாரி ஒருவர் துறைமுகம் ஆழப்படுத்தப்பட்ட பின்னர் புதிய படகு பற்றி ஆலோசிக்கப்படும்எனவும் குறிப்பிட்டார்.

> “நெல்சிப் திட்டத்தின் கீழ் நெடுந்தீவுக்கு வழங்கப்பட்டிருந்த புதிய படகுக்கான நிதி துறைமுகத்தை ஆழப்படுத்துவதற்காக மாற்றப்பட்டுள்ள தாகவும் விரைவில் துறைமுகத்தை ஆழப்படுத்தி வட தாரகையைச் சேவைக்கு விடவுள்ளதாகவும் தற்போது புதிய படகு ஒன்றைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது எனவும் தெரிவிப்பு.

புதிய படகின் தேவையும் துறைமுகத்தை ஆழப்படுத்தும் நடவடிக்கையும் மிகவும் முக்கியமானவை என்பதால் இரண்டு திட்டங்களையும் ஒரே தடவையில் நடைமுறைப்படுத்தக் கூடியதான நடவடிக்கை தேவை என நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் அ.வெ.அரியநாயகம் வலியுறுத்திய போதும், இரண்டையும் ஒரே சமயத்தில் மேற்கொள்ள முடியாது எனக் கூறி அதிகாரிகள் மறுத்து விட்டனர்.

துறைமுகத்தை ஆழப்படுத்த பிரதேச சபைக்கு நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலதிக நிதி அவ்வப்போது வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அது தொடர்பான திட்டத்தை உடன் சமர்ப்பிக்குமாறும் வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திட்டங்கள் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தப்படும் எனக் குறிப்பிட்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அதிகாரி, துறைமுகம் 7 அடி ஆழத்துக்கு தோண்டப்படும் எனவும் தெரிவித்தார்.

துறைமுகத்தை ஆழப்படுத்தும் நடவடிக்கைகள் விரைவில் இடம்பெறும் எனவும் கூறப்பட்டது.

இந்த நிகழ்வில் உலக வங்கி அதிகாரிகள், மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நீர் விநியோகச் சேவைக்கென அமைக்கப்பட்டு கடும் காற்றுக் காரணமாக சரிந்து விழுந்து போன தண்ணீர்த் தாங்கியையும் அதிகாரிகள் பார்வையிட்ட னர். (த-7)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எப்படி அமையப் போகின்றன ஆணைக்குழுக்களின் முடிவுகள்?

ஐ.நா.மனித உரிமைகள் சபை ஆணையாளர் பணிமனை, தனக்கு வழங்கப்பட்டுள்ள ஆணைக்கமைவாக இலங்கை தொடர்பான சர்வதேச விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.

விசாரணைகள் தொடர்வதற்கு இலங்கை வரவிருக் கும் ஆணையாளர் பணிமனை நிபுணர்களுக்கு சகல விதத்திலும் ஆதரவும், அனுசரணையும் வழங்கும் படி இலங்கை அரசை ஐ.நா.செயலாளர் நாயகம் பான்கிமூன் முதற்கொண்டு, இப்போது புதிய ஆணையாளராக பொறுப்பேற்றுள்ள இளவரசர் சையிட் அல்-ஹூசேன் வரையில் இலங்கை அரசை பலமுறையும் கேட்டு வந்திருக்கிறார்கள். விசாரணைக்கான தீர்மானத்தை நிறைவேற்றுவதில் முனைப்பாக இருந்துள்ள நாடுகளும் கூட இந்த வேண்டுகோளை மீண்டும் மீண்டும் முன்வைத்துள்ளன. உள் நாட்டிலும் சில எதிர்க்கட்சிகளும் போரினாலும் அதன் பின்விளைவுகளினாலும் சொல்லொணாத் துயரங்களுக்குட்பட்டு நீதியோ நிவாரணமோ கிடைக்காமல் நிர்க்கதியில் தவிக்கும் வடக்கு, கிழக்கு மக்களின் பிரதிநிதிகளும் அதே வேண்டுகோளை பலமுறையும் முன்வைத்துள்ளார்கள்.

போதாக் குறைக்கு வடக்கு மாகாண மக்களின் பெரும் எடுப்பிலான ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்டுள்ள வடக்கு மாகாண சபையிலும் மனித உரிமை சபையின் விசாரணைக் குழுவினரை விசாரணைகளை முன்னெடுக்க நாட்டுக்குள் அனுமதிக்க வேண்டுமெனக் கூறி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்தத் தீர்மானத்தின் ஆழம் அல்லது தாற்பரியம் பற்றி கொஞ்சமும் கருத்தில் கொள்ளாமல் அரசு தரப்பினர் மாகாண சபையையும் அதன் செயற்பாடுகளையும் விமர்சித்தும் அச்சுறுத்தும் தொனியில் பேசியும் வருகிறார்கள். அது மட்டுமல்ல அரசு ஏற்கனவே மனித உரிமைகள் சபையின் விசாரணையாளர்களை நாட்டுக்குள் அனுமதிப்பதில்லையென்று நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிக் கொண்டுள்ளது. நாடாளுமன்றில் அரசு தீர்மானத்துக்கு எதிர்த் தரப்பில் போதிய ஆதரவு இல்லாத நிலை யிலும் தனது பெரும்பான்மை பலத்தின் மூலம் அதனை நிறைவேற்றிக்கொண்டு நாட்டு மக்களின் முடிவு என்பதாக ஒரு தோற்றத்தை கற்பித்துக் கொண்டிருக்கும் நிலையில் வடக்கு மாகாண சபை அதற்கு மாறான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பது கவலையை மட்டுமல்ல அரசுக்கு தரும சங்கடத்தையும் ஏற்படுத்தியிருப்பது ஆச்சரியமன்று.

போரின் போதும், அதற்கு முன்னும் பின்னும் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித உரிமைகள் மீறல் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக நம்பகரமான சர்வதேச விசாரணையொன்றை நடத்தும்படி மனித உரிமைகள் சபையும் முக்கிய உறுப்பு நாடுகளும் பல காலமாக வற்புறுத்தி வந்த போதெல்லாம் இலங்கை இராணுவத்தினர் ஒரு போதும் இம்மாதிரி குற்றங்களை இழைக்கவில்லை என்று அடித்துக் கூறி வந்தது அரசு.

இந்த நிலைமையில் ஐ.நா.மனித உரிமைகள் சபை இரண்டாவது தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி அதன் அடிப்படையில் போர்க் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணைக்கு ஏற்பாடு செய்து அதுவும் நடைமுறைக்கு வந்த நிலையில் காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணைக் குழுவின் விசாரணை பரப்பை விரிவுபடுத்தி அதற்கு ஆலோசனை கூறுவதற்கென சர்வதேச நிபுணர்களையும் நியமித்துக் கொண்டது அரசு. இந்தச் செயற்பாடுகளில் அரசின் நிலைப்பாட்டில் நிச்சயமற்ற தன்மைகள் வெளிப்படுவதைக் காண்கின்றோம்.

இப்பொழுது தன்து விசாரணைக் குழுவின் இடைக் கால அறிக்கையொன்றை மனித உரிமைகள் சபையில் இப்போதைய கூட்டத் தொடரில் தாக்கல் செய்யவும் எத்தனிப்பதாகத் தெரிகின்றது. அவ்வாறு செய்வதன் மூலம் மனித உரிமைகள் சபையின் செயற்பாடுகளை அல்லது விசாரணைகளில் தனக்குச் சார்பான ஒரு நிலைப்பாட்டை உருவாக்கிவிடலாம் என்று அரசு கருதுவதாக கொள்ளலாம். அவ்வாறான ஒரு நோக்கம் அரசுக்கு இருப்பதாயின் அது அமைத்துள்ள விசாரணைக் குழு உண்மை நிலையைக் கண்டறிந்து பரிந்துரைகளை வழங்குவதற்கு நியமிக்கப்பட்டதா அல்லது அரசு இதுவரை காலம் விடாப்படியாக கைக்கொண்டு வந்த நிலைப்பாட்டுக்கு சப்பைகட்டு கட்டுவதற்காக நியமிக்கப்பட்டதா என்ற சந்தேகம் எழுவது நியாயம்.

ஆணைக்குழுவின் விசாரணை முடிவுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதாக இருக்க வேண்டுமே யன்றி குற்றக் கூண்டில் நிற்க வேண்டியவர்களைக் காப்பாற்றுவதாக இருக்க முடியாது. எதுவானாலும் ஐ.நா. சர்வதேச விசாரணைகள் அரசின் ஒத்து ழைப்பு இன்றியே தொடர்ந்து நடைபெற்று முடிவுகள் அறிவிக்கப்படவிருப்பது உறுதி. இவ்வாறான இரண்டு குழுக்களினதும் முடிவுகள் எப்படியிருக்கும் என்பதை காத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# மோடியின் அணுகுமுறை இலங்கையிலும் வேண்டும்

சேரலாதன்

கடுமையான வெள்ளப் பெருக்கு மற்றும் மண் சரிவு காரணமாக மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட காஷ்மீரில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மெச்சத்தகும் வகையில் மேற்கொண்டதற்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைப் பல்வேறு தரப்பினரும் பாராட்டியுள்ளனர்.



கடந்த 100 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு காஷ்மீர் மாநிலம் பெரும் வெள்ள இடரை எதிர்கொண்டது. இதனால் அந்த மாநிலம் முழுவதும் வெள்ளக்காடாக மாறியது. வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்து கொண்டதால் மக்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டனர். நூற்றுக்கணக்கானவர்கள் இறந்துள்ளனர். பலரைக் காணவில்லை. வெள்ளத்தின் தாக்கம் தொடர்ந்ததால் அங்குள்ள மக்கள் உணவு மற்றும் குடிதண்ணீர் கிடைக்காமல் பெரும் அவதிக்குள்ளானார்கள்.

ஆனால் மாநில அரசால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவித உதவிகளையும் வழங்க முடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டுவிட்டது. மாநில முதல்வர் உமர் அப்துல்லாவின் அலுவலகம் மற்றும் இருப்பிடம் ஆகியனவற்றின் மின்சாரம் துண்டிக்கப்பட்டுவிட்டன. மேலும் அவர் வெளியே வரமுடியாத நிலையிலும் இருந்தார். அதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளவும் அவரால் முடியவில்லை.

இந்த நிலையில் பிரதமர் நரேந்திர மோடி காஷ்மீர் மக்களின் மீட்புக்கான அதிரடி நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டார். முதலில் உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கை காஷ்மீருக்கு அனுப்பி வைத்து அங்குள்ள நிலைமைகளை ஆராயச் செய்வித்தார். பின்னர் தாமே நேரில் சென்று வெள்ள நிலைமைகளை ஆராய்ந்தார். இதையடுத்து நிவாரணப் பணிகள் முடுக்கிவிடப்பட்டன. வெள்ளத்தில் சிக்குண்டவர்கள் இராணுவம் மற்றும் அவசர உதவிக் குழுவினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

வெள்ளத்தில் சிக்குண்டு கிடந்த மக்களின் போக்குவரத்துக்கென தற்காலிக பாலங்கள் அமைக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்கென தற்காலிக தங்குமிடங்கள் பல அமைக்கப்பட்டன. இவற்றுக்கெல்லாம் மேலாக மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள், குடிதண்ணீர், மருந்து வகைகள் என்பன உடனடியாகவே விநியோகம் செய்யப்பட்டன. இவற்றின் விநியோகம் சீராக மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை நேரில் கண்காணிக்கும் பொருட்டு உயர் அதிகாரிகளை காஷ்மீருக்கு அனுப்பி வைத்த பிரதமர் மோடி தாமும் இவற்றைக் கண்காணித்துக் கொண்டார்.

காஷ்மீர் மாநிலத்தில் வாழும் மக்களில் பெரும்பாலானவர்கள் முஸ்லிம் இனத்தவர்களே ஆவார்கள். அதிலும் காங்கிரஸ் கட்சியினரின் ஆட்சியே இங்கு இடம்பெறுகின்றது. இந்த நிலையில் பிரதமர் மோடியின் உடனடி மனிதாபிமான நடவடிக்கைகளை காங்கிரஸ் கட்சியின் உயர் மட்டத் தலைவர்கள் உட்படப் பலரும் பாராட்டியுள்ளனர். காஷ்மீர் மக்களின் மனங்களிலும் பிரதமர் மோடி இடம்பிடித்துக் கொண்டார்.

ஆனால் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இடம்பெற்ற உள்நாட்டுப் போரால் மோசமாகப் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்கள் போர் ஓய்ந்து ஐந்து ஆண்டுகள் கடந்த பின்னரும் தமது அவலங்களுக்கு இன்னமும் தீர்வு காண முடியாத நிலையிலேயே காணப்படுகின்றனர். அரசில் உள்ளவர்களின் இனத் துவேசம் காரணமாகவே இந்த நிலை காணப்படுகின்றது. போரில் கொல்லப்பட்டவர்கள் மற்றும் காணாமற் போனோர் விடயத்தை ஆளும் தரப்பினர் ஒரு பொருட்டாக மதிப்பதாகத் தெரியவில்லை. தமிழர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் அவர்களுக்கு உவப்பாகவே மாறியுள்ளன. இவை தொடர்பாக என்னதான் ஆதாரங்கள் வெளியிடப்பட்டாலும் அவற்றை அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

அண்மையில் வவுனியாவில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக பாதுகாப்புச் செயலர் கோத்தபாய தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளார். இன்று இலங்கையில் அரசியல் குழப்பங்களை ஏற்படுத்துமென்பது அவரது கருத்தாகும். தமிழரசுக் கட்சியின் தீர்மானங்களைக் கையில் ஏந்தியவாறு பெரும்பான்மையின மக்கள் மத்தியில் பீதியைக் கிளப்பும் செயற்பாடுகள் இனிமேல் ஆரம்பிக்கப் போகின்றன.

காஷ்மீர் மக்கள் எந்த இனத்தவர் எனவும் எந்தக் கட்சியை ஆதரிப்பவர்கள் எனவும் பார்த்து வெள்ள இடர் அவர்களைப் பாதிக்கவில்லை. அதைப் போன்றுதான் இந்திய மத்திய அரசும் உதவிகளை வழங்கும்போது இவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கவில்லை.



அவர்களும் இந்திய மக்கள் என்று நோக்கப்பட்டனர். பிரதமர் மோடி முஸ்லிம்களுக்கு எதிரானவர் என்றதொரு கருத்து நீண்டகாலமாகவே நிலவி வந்தது. கடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் அதைத் தவறென எடுத்துக் காட்டிவிட்டன. பெருவாரியான முஸ்லிம் மக்கள் அவரை ஆதரித்தமை மோடியின் ஆளுமைக்கு ஒரு வெற்றியெனவே கூறலாம். இந்த நிலையில் காங்கிரஸ் கட்சியின் ஆளுகைக்குட்பட்ட முஸ்லிம் மக்களைப் பெருவாரியாகக் கொண்ட காஷ்மீரின் துயரத்தைத் துடைப்பதில் மோடி காட்டிய அக்கறை அனைவரது மனங்களையும் தொட்டு விட்டது. ஆனால் எமது நாட்டிலோ இதற்கு எதிர்மாறானதொரு நிலை நீடிப்பதுதான் கவலையை ஏற்படுத் துகின்றது.

தமிழர்கள் இந்த நாட்டில் வாழுகின்ற பெரும்பான்மையின மக்களைப் போல சகல உரிமைகளையும் அனுபவிப்பதற்குத் தகுதியுடையவர்கள். சுதந்திரமடைந்த நாளிலிருந்து தமிழர்கள் மீதான துவேசங்கள் ஆரம்பித்துவிட்டன. முதலில் அவர்களுக்குச் சொந்தமான நிலங்களில் கை வைத்த ஆட்சியாளர்கள் பின்னர் மொழியையும் விட்டு வைக்கவில்லை. இதன் காரணமாகவே அகிம்சை வழியிலான போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுப் பின்னர் ஆயுதப் போராட்டமாக மாறியது. ஆனால் போராட்டங்களை ஒடுக்குவதில் காட்டிய அக்கறையை தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் காட்டவில்லை.

இப்போதும் கூட தமிழர்களின் உரிமைகளைப் பெறுவதற்காக அகிம்சைப் போராட்டங்களை ஆரம்பிக்கவுள்ளதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் அதற்கான காரணங்களை ஆராய்ந்து தீர்வுகளைக் காண்பதை விடுத்து அதனை எவ்வாறு ஒடுக்குவது என்பதிலேயே அரசு கவனம் செலுத்தி வருகின்றமை தெளிவாகத் தெரிகின்றது. இது மேலும் மேலும் பிரச்சினைகளுக்கே வழிவகுக்கப் போகின்றது.

எனவே இனியாவது காஷ்மீரில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் அல்லலுற்ற மக்களுக்கு இந்தியப் பிரதமர் மோடி எவ்வாறு துரிதமாகவும், பாரபட்சமின்றியும் செயற்பட்டு நிவாரணத்தை வழங்கினாரோ அதை முன்னுதாரணமாகக் கொண்டு இலங்கையின் அரசியல் தலைமைகளும் செயற்படுமாயின் இந்த நாடு சமாதான பூமியாக மாறிவிடும் இல்லையேல் மேலும் மேலும் மரணங்களின் ஓலம் கேட்கும் பூமியாகவே மாறிவிடும்.

# கொள்ளை போகிறது கடல் வளம் சுரண்டப்படுகின்றன உள்ளூர் உற்பத்திகள்

## இந்த நிலைமையை நாம் மாற்ற வேண்டும்

*இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 15 ஆவது தேசிய மாநாட்டில் தலைவர் மாவை சேனாதிராசா ஆற்றிய தலைமையுரையின் தொடர்ச்சி பிரசுரமாகின்றது.*

வடக்குக்கிழக்கு மாநிலத்தில் தமிழ் முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான பாரம்பரியமானதும், பாரதீனப்பட்டு வருபவையுமான நிலங்களும் சொத்துக்களும் பகற்கொள்ளை போல இராணுவத்தாலும் பௌத்த தீவிர சக்திகளினாலும் ஆக்கிரமிக்கப்படுகின்றன.

அந்த நிலங்களுக்குச் சொந்தமான இரண்டரை லட்சம் குடியிருப்பாளர்கள் 25 ஆண்டுகளாக அகதி முகாம்களிலும் இந்தியாவிலும் தஞ்சமடைந்துள்ளனர். இப்பொழுது இந்திய அரசுத் தகவலின்படி கூட ஒரு லட்சத்து 21 ஆயிரம் மக்கள் அகதிகளாக உள்ளனர். அதைவிட நிலமற்றவர்கள் தொழிலற்று வாழ்வாதாரமற்றவர் தொகையும் பெருகி வருகிறது. அகதிமுகாம்களிலும் நண்பர்கள் வீடுகளிலும் ஒரு இலட்சம் பேர் வரையில் உள்நாட்டில் அகதிகளாக உள்ளனர். அந்த நிலங்களில் இராணுவமும் அரசும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொள்ளை இலாபம் சம்பாதிக்கின்றது. அதேவேளை இந்நாட்டில் பாதுகாப்பில்லை என்ற மனவேகத்தில் வேறுநாடுகளுக்குத் தப்பி ஓடுகின்றனர். இதனை அரசு சார்பானவர்களே ஊக்கப்படுத்துகின்றனர். அண்மைக் காலங்களில் தென் இலங்கையில் அம்பாந்தோட்டைக் கடலோரங்களிலிருந்து கடத்தல்காரர்கள் இம்முயற்சிகளில் ஈடுபட்டமை வெளிப்பட்டிருக்கிறது.

கிழக்கில் திருகோணமலையில் சம்பூர் பிரதேச மக்கள் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக மீளக்குடியேற மறுக்கப்பட்டுள்ளனர். இந்திய நாடு சம்பூரில் மின் நிலையம் நிறுவ 500 ஏக்கர் நிலம் எடுத்துகொண்டது. சம்பூர் மக்கள் ஏனைய பிரதேசத்தில் மீளக்குடியேற்றப்படுவர் என்ற புரிந்துணர்வுடன் இருந்த பொழுதிலும் இந்திய அரசும் அந்த மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை. இந்த நிலைதான் வன்னியிலும் மட்டக்களப்பிலும் அம்பாறையிலும் ஏற்பட்டுவருகிறது. அண்மையில் பாரதப்பிரதமர், வெளியுறவுத் துறை அமைச்சர் ஆகியோருடன் இவ்வகதிகள் பற்றிப் பேசியிருக்கிறோம். இந்தியாவில் தமிழ் நாட்டில் அகதிகளாக 115 முகாம்களிலும் வாடகை வீடுகளிலும் உள்ள இலங்கைத் தமிழ் மக்கள் மீண்டும் அவர்கள் விருப்பத்தினை அறிந்து அவரவர் சொந்த நிலத்தில் மீளக்குடியமர்த் தப்படவேண்டும்.

அவர்கள் தங்கள் சொந்த நிலங்களிலேயே மீளக்குடியேற்றப்படுவதையும் அவர்களின் பாதுகாப்பையும், வாழ்வாதாரத்தையும் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் வற்புறுத்தியிருக்கிறோம். ராஜபக்ஷ அரசுக்கு இதுவும் ஒரு வெறுப்பையும் நெருக்கடியையும் ஏற்படுத்துவதாகும். 2003ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்திலே என்னுடைய பெயரில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா குழாத்தினர் எமக்கு இடைக்காலத் தீர்ப்பொன்றை வெளியிட்டனர். அத்தீர்ப்பு முழுமையாக மதிக்கப்படவில்லை. இப்பொழுது நில உரிமையாளர்களால் யாழ் ஆயர் உட்பட 2176 வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. நீதி இன்னும் கிடைக்கவில்லை. 2176 அகதி மக்களின் அடிப்படை உரிமைக்காக நில ஆக்கிரமிப்புக்கெதிராக ஜனநாயக அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கெதிராக உயர்நீதிமன்றத்திலே நடைபெறும் வழக்குகளில் கனகஈஸ்வரன், சுமந்திரன் முதலான வழக்கறிஞர் குழாம்கள் ஊதியமின்றி பல ஆண்டுகளாக வாதாடி வருகின்றன. அவர்களுக்கும் மனித உரிமைகளுக்காக வாதாடும் ஏனைய வழக்கறிஞர்களுக்கும் இச் சந்தர்ப்பத்தில் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

இத்தகைய நிலைமைகளில் சைப்பிரஸ் - துருக்கி தொடர்பில் லிஸிடோவின் சர்வதேச வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கள் பரிசீலிக்கப்பட வேண்டும். அவை உதவியாக இருக்கும். போர் முடிந்ததிலிருந்து ஐந்து ஆண்டு காலத் திலும் அபிவிருத்தி என்ற போர்வையில் பெரு முதலாளித்துவத்தின் இறக்குமதி, தென்னிலங்கை உற்பத்திப் பொருள்களின் இறக்குமதிச் சந்தைகள் திறக்கப்படுகின்றன. இதனால் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாண வர்த்தகம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. சிறுவியாபாரிகள் பாதிக்கப்படுகின்றனர். சந்தைகளில் சொந்த உற்பத்திகளை விளைச்சல் உற்பத்தி செலவைக் கூட கட்டமுடியாதளவுக்கு வீழ்ச்சியடைந்து வருகிறது. வங்கிகள் ஏராளமாகத் திறக்கப்பட்டுள்ளன. பெற்ற கடனை கட்ட முடியாத நிலையும் புதிய கடன்களை விவசாயிகள், தொழில்துறையினர் பெறமுடியாத நிலையும் காணப்படுகின்றது. ஒரு காலத்தில் வேளாண் விளைச்சல் மற்றும் மீன் முதலியனவற்றை 300க்கும் குறையாத லொறிகள் கொழும்புக்கும் தென்பகுதிக்கும் தினமும் கொண்டு சென்றன. இவ் விடயத்திலும் மாற்று நடவடிக்கைகள் தேவை.



ஐ.நா., யுனிசெப்ப் நிறுவன அறிக்கைகள் குழந்தைகளும் கர்ப்பிணித் தாய்மார்களும் ஊட்டச் சத்தற்றவர்களாக கடந்த 20 ஆண்டுகளாகவே வடக்குக்கிழக்கு மாநிலங்களில் உள்ளனர் என்று கூறுகின்றது. அதற்கும் மேலாக போரின் காரணமாக 80ஆயிரம் வாழ்விழந்த இளம் பெண்கள் வாழ்வாதார மற்றும் வாழ்க்கைத் துணையற்றும் எதிர்கால மற்றவர்களாய் ஏங்கியிருக்கிறார்கள். இந்த வாழ்வற்ற முழு மனித குல வளர்ச்சியற்ற விடயங்களில் மனிதாபிமான அடிப்படையிலான திட்டமிடல் அவசியமாகும். வாழ்விழந்தவர்களுக்கு மறுவாழ்வு ஊக்குவிக்கப்பட்டு உதவிகள் வழங்க வேண்டும்.

வடக்குக் கிழக்குக் பகுதிகளின் மூலப்பொருள்கள் இல்மனைட் முதல் சுண்ணாம்புக்கல் மணல் முதலானவைகள் அரசும் அடியாட்களினாலும் கொள்ளையிடப்பட்டும் பெரும் இலாபங்களை சுரண்டுவதாகவுமே பெரும் வர்த்தகம் நடைபெறுகிறது. இதன் இலாபங்களில் அவ்வப் பிரதேசங்களும் அவ்வப்பகுதி மக்கள் உழைப்பாளிகளுக்கும் கிடைக்க வேண்டும். குறிப்பாக வடபகுதியில் மீன்வளம் பொருளாதார ரீதியில் பெரும் வருமானத்தை ஈட்டக்கூடியதொன்றா கும். அதன் உற்பத்திகள் திட்டமிடப்படாமல், சந்தைப்படுத்தாமல் அரசும் அரசின் அடியாட்களும் இயக்கங்களும் கொள்ளையடித்து வருகின்றன. முறையாக அத் தொழில் உற் பத்தியும் பயன்படுமானால் அதன் வருமானம் அப்பிரதேசங்களுக்கும் அத்தொழில் ஈடுபடு வோருக்கும் பங்குகள் இலாபங்கள் செல்லமுடி யும். உயிரைப் பணயம் வைத்து சீவப்படும் கள் பெருமளவில் நிலத்தில் · தினமும் ஊற்றப் படு கிறது. அக்கள்ளிலிருந்து மதுபானம் தயாரிக்க வேண்டுமென்பதில்லை. அவ்வாறு மதுபானம் தயாரித்தாலும் அரிய மருத்துவ பானமாக்கி மக்கள் பாவனைக்கும் ஏற்றுமதிக்கும் உரிமையாக்கப்படமுடியும். அதைக் கையாள்வதற்கு உள்ள கூட்டுறவுத்துறையும் சீர்குலைக்கப்படுகிறது.

கள்ளைப் பதநீராகவும், ஒரு ஆரோக்கியமான பானமாகவும் மக்கள் பருகலாம். ஆனால் தெற்கிலிருந்து செயற்கையான கள் இறக்குமதி செய்து விற்பனை செய்யப்படுகிறது. சாராயம், வைன் போன்றன விற்பனைக்கு தாராளமாக அனுமதிக்கப்படுகின்றன. பெரு வருமானம் அரசாலும் முதலாளிகளாலும்; முகவர்களாலும் ஈட்டப்படுகிறது. எம்மக்கள் இளம் சமுதாயம் இதனால் சீரழிகிறது. எமது உள்ளூர் உற்பத்திகளும் வருமானமும் சுரண்டப்படுகின்றன. கொள்ளையிடப்படுகின்றன. இத்துறை வடக்கு மாகாணசபையிடம் கூட்டுறவுத்துறையிடம் கொடுக்கப்படவேண்டும். அந்தச் சமூக மக்கள் நலன்களுக்கு அந்த இலாபம் பங்கிடப்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையிலுள்ள உள்ளூராட்சி சபைகளின் வரவு-செலவுத்திட்டத்தை சில சபைகளில் தோற்கடிக்கச் சில உறுப்பினர்கள் அதுவும் மத்திய ஆளும் கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் தோற்கடிக்க எடுத்த முயற்சிகளை நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது.

அதே நேரத்தில் ஜனநாயக விழுமியங்களை மதியாமலும் ஊழலில் ஈடுபட்டார்கள் என்று சுமத்தப்பட்ட குற்றங்களில் சம்பந்தப்பட்ட சில சபைகளின் தலைவர்களையும் நாம் ஏற்க முடியாது. ஊழல் பேர்வழிகளுடன் நாம் எந்த வகையிலும் சமரசம் செய்யமுடியாது. தவறிழைத்தவர்கள் பொதுநலன்களுக்கு விரோதமாகச் செயல்படும் உறுப்பினர்களுக்கெதிராக நடவடிக்கை எடுத்தால் அதற்கெதிராக நீதிமன்றங்களை நாடி எமது நடவடிக்கைகளை முடக்கும் கைங்கரியங்களிலும் ஈடுபட்டுள்ளார்கள்.

இதனால் நாம் துன்பம் அடைந்திருக்கின்றோம். பல சபைகள் சிறப்புடன் செயற்படுகின்றன. அவ்வேளையில் மக்களின் நம்பிக்கையைப் பெறவேண்டி சில நடவடிக்கைகளை முன்னெடுப்பதிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

(தொடரும்)

# இடதுசாரியான கிராமவாசியின் மனதை மாற்றிய பிரேமதாஸ

**இப்படியும் நடந்தது**

லங்காதீப பத்திரிகையிலிருந்து தொகுப்பு சரா.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸ நகரத்தில் பிறந்தவராக இருந்தாலும் ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் பின்தங்கிய கிராமப் புறங்களுக்குச் சென்று அங்குள்ள வனப்பை ரசிப்பது அவருக்கு ஆத்ம திருப்தியை வழங்கியது. ஒருநாள் அவர் ருவான்வெல பிரதேசத்தில் தனது மோட்டார் காரில் பயணித்துக் கொண்டிருந்தார். அவர் 1956ஆம் ஆண்டு அரசியலில் இறங்கியிருந்தாலும் அப்போது ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகக் கூட பதவி வகிக்கவில்லை. ஆனால் கட்சிக்குள் செல்வாக்கு மிக்க ஒருவராகக் காணப்பட்டார்.

கிராமத்தின் மத்தியில் அவரது கார் பயணித்துக் கொண்டிருந்தது. சற்றுத் தொலைவில் குடிசையொன்று தீப்பற்றிக் கொண்டிருப்பதை அவர் கண்ணுற்றார். நான்கைந்து கிராமவாசிகள் அந்தக் குடிசைக்குச் சற்றுத் தொலைவிலிருந்த கிணற்றிலிருந்து வாளிகளில் தண்ணீர் எடுத்துவந்து தீப்பற்றி எரியும் குடிசையின் கூரைக்கு விசிறிக் கொண்டிருந்தனர். உடனே காரிலிருந்து இறங்கிய பிரேமதாஸ குடிசையை நோக்கி ஓடினார். தாமும் அங்கிருந்த வாளியொன்றை எடுத்துக் கொண்டார். கிணற்றை நோக்கி ஓடி தண்ணீரை எடுத்துவந்து குடிசையின் கூரைக்கு விசிறி தீயை அணைப்பதற்கு அந்தக் கிராம வாசிகளுக்குத் தாமும் உதவினார். இதனிடையே, கட்டுடல் கொண்ட இன்னொருவர் பக்கத்தில் இருந்த வீடொன்றின் தீப்பற்றிக் கொண்டிராத கூரைக்குத் தண்ணீரை விசிறிக் கொண்டிருந்தான். பிரேமதாஸாவுக்கு அவனது அந்தச் செயலை ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை.

அந்த மனிதனைப் பற்றி சற்றுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் பிரேமதாஸாவிடம் எழுந்தது. பற்றியெரிந்த தீ அணைக்கப்பட்டு அங்கு அமைதி நிலவியது. பிரேமதாஸ அந்த மனிதரிடம் பேச்சுக் கொடுத்தார். பக்கத்து வீடு தீப்பற்றிக் கொண்டிருக்கையில் தீப்பற்றியிராத கூரைக்கு தண்ணீர் விசிறியது பற்றி அந்த மனிதனிடம் கேட்டார்.

"அது என் இஸ்டம் நீர் ஏன் கேட்கிறீர்" என்றான் அந்த மனிதன். அதுதான் ஏன் என்று எனக்குப் புரியவில்லை என்றார் பிரேமதாஸ.

அவர்கள் யூ.என்.பீக்காரர்கள். ஓர் இடதுசாரிக் காரனான எனக்கும் அவர்களுக்கும் ஒத்து வராது என்றான் அந்த மனிதன். "எங்கே வேலை பார்க்கிறீர்கள்" பிரேமதாஸ கேட்டார். துறை முகத்தில் எனப் பதில் வந்தது அந்த மனிதனிடம் இருந்து. அப்போதுதான் அந்த மனிதனின் மனதை பிரேமதாஸாவினால் புரிந்துகொள்ள முடிந்திருந்தது.

உங்களது நாடாளுமன்ற உறுப்பினர் இருப்பதோ கொழும்பில், இந்த மனிதர்கள் இருப்பதோ பக்கத்து வீட்டில், ஆபத்துக்கு உதவுபவர்கள் அவர்களே. அப்படியிருக்கும் போது அர்த்தமில்லாத பகையை வளர்த்துக் கொள்ளாது மனிதாபிமானத்தோடு இரு வீட்டாரும் நட்புடன் இருப்பதுதானே நல்லது என்று எடுத்துரைத்தார் பிரேமதாஸ. மேலும் தன்னை இன்னாரென்பதையும் வெளிக்காட்டினார்.

வெள்ளை அரைக் கைச்சட்டையுடனும் வெள்ளைச் சாரத்துடனும் காணப்பட்ட பிரேமதாஸாவை அந்த மனிதன் வியப்புடன் பார்த்தவாறு நின்றிருந்தான்.

வழமையான புன்சிரிப்புடன் நான் பிரேமதாஸ. ஆர்.பிரேமதாஸ என்றவாறு அந்த மனிதனுக்கு வணக்கம் கூறினார் பிரேமதாஸ. அட கடவுளே! இது பிரேமதாஸ ஐயாவா? என்று அதிசயித்தான் அந்த மனிதன். "ஆம்.யூ. என்.பியின் ஆர்.பிரேமதாஸ என்பவர் நானேதான்" என்றார் பிரேமதாஸ உற்சாகமாக ஏழைக் கிராம வாசியொருவரின் தீப்பிடித்திருந்த குடிசையின் தீயை அணைப்பதற்குச் சென்றிருந்த சந்தர்ப்பமொன்றில் பிரேமதாஸாவுடன் தர்க்கம் புரிந்து நின்ற இடதுசாரிக் கருத்துக்களை சுமந்து கொண்டிருந்த அந்தக் கிராம வாசியை பிற்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் (யூ.என்.பி.) இணைத்துக் கொள்வதற்கு ஆர்.பிரேமதாஸ உதவினார்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**:மனதில் இனம் புரியாத பயம் வந்து போகும். முன்பின் தெரியாதவர்களிடம் குடும்ப அந்தரங்க விடயங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம். மற்றவர்களுக்கு நியாயம் பேசப் போய் நீங்கள் சிக்கிக் கொள்ளா தீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர் களைப் பற்றிக் குறைகூற வேண்டாம்.



**இடபம்**: திட்டமிட்டவை தாமதமாகும். மறைமுக விமர்சனங்களும், தாழ்வு மனப்பான்மையும் வந்து நீங்கும். உறவினர், நண்பர்கள் உதவி கேட்டுத் தொந்தரவு தருவார்கள். வியாபாரத்தில் மற்றவர்களை நம்பாமல் நீங்களே முடிவெடுக்கப் பாருங்கள்.



**மிதுனம்**: ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிடைக்கும். பெற்றோரின் ஆதரவு பெருகும். மற்றவர்களுக்காக சில செலவுகளைச் செய்து பெருமைப்படுவீர்கள். வியாபாரத்தில் புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் அதிகாரிகள் உதவுவார்கள்.



**கடகம்**: கோபத்தைக் கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உத்யோகத்தில் சக ஊழியர்கள் மத்தியில் உங்கள் கருத்துக்கு ஆதரவு அதிகரிக்கும்.



**சிங்கம்**: இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். வியாபாரத்தில் புதிய பொருள்களைக் கொள்முதல் செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் இருந்த பிரச்சினைகள் கட்டுப்பாட்டுக்குள் வரும். தடைகள் உடைபடும் நாள்.



**கன்னி**: சிக்கலான காரியங்களைச் செய்யாதீர்கள். அடுத்தவர்களைக் குறை கூறிக் கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளப் பாருங்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லையே என ஆதங்கப்படுவீர்கள்.



**துலாம்**: கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் நன்மை உண்டு. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும்.



**விருச்சிகம்**:அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். வெளியூர்ப் பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களின் புதிய திட்டங்களை ஆதரிப்பார்கள். மாறுபட்ட அணுகுமுறையால் சாதிக்கும் நாள்.



**தனுசு**: புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை அறிந்து கொள்வீர்கள். நட்புவழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நினைத்தது நிறைவேறும்.



**மகரம்**: பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். விருந்தினர் வருகை அதிகரிக்கும். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். உத்யோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார்கள்.



**கும்பம்**: குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். உங்களால் மற்றவர்கள் ஆதாயமடைவார்கள். உறவினர்கள் எதிர்பார்ப்புகளுடன் பேசுவார்கள். உத்தியோகத்தில் உயர திகாரிகள் உங்களை கலந்தாலோசித்து சில முக்கிய முடிவுகளை எடுப்பார்கள்.



**மீனம்**: கடந்த சில தினங்களாக குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல், குழப்பம் விலகும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தில் நெளிவு, சுழிவுகளைக் கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் தேங்கிக் கிடந்த பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

## நாளை

**ஆவணி-31 செவ்வாய்க்கிழமை | 16.09.2014**

திதி: அட்டமி பி.இ.12.21 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம் பி.இ.02.58 வரை

சுபநேரம்:10.33-12.03 வரை
இராகுகாலம்: 03.03-04.33 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## இந்து மதம் மனித ஆன்மாவுக்கு ஒரு கடமை

"மதம் பெண்களுக்கு பிரம்மசரியம் உயர்வென்று கூறும் அதேவேளையில் ஆண்களுக்கும் அதையே விதிக்கிறது. இது நீங்கள் நன்றாகநினைவில்கொள்ள வேண்டிய ஒன்று. மேலும், உங்கள் கேள்வியே உங்கள் மனக் குழப்பத்தைக் காட்டுகிறது. இந்து மதம் மனித ஆன்மாவுக்கு ஒரு கடமையை, ஒரேயொரு கடமையையே குறிப்பிடுகிறது; நிலையற்ற உலகில் நிலையானதைத்தேடிஅடைவதே அது, அதனை அடைவதற்கெனக் குறிப்பிட்ட ஒரு வழியை யாராலும் காட்ட முடியாது. திருமணம் திருமணமின்மை, நன்மை தீமை, அறிவு அறியாமை எதுவாயினும் சரி, நம்மை லட்சியத்துக்கு இட்டுச் சென்றால் மட்டுமே அது பயனுள்ளதாகக் கருதப்படும். இதில்தான் இந்து மதமும் புத்த மதமும் பெரிதும் வேறுபடுகின்றன. வெளித் தோற்றங்களிலுள்ள நிலையாமையை உணர்த்த வழி காட்டுவதே புத்த மதத்தின் கொள்கை, அதாவது பொதுப்படையாகக் கூறினால் அதனை ஒரே வழியில் தான் அடைய முடியும் என்கிறது புத்த மதம். மகாபாரதத்தில் கூறப்படும் பாலயோகியின் கதையைச் சற்று ஞாபகப் படுத்திக் கொள்ளுங்கள்; அவன் தனது எண்ண ஆற்றலால் ஒரு காகத்தையும் கொக்கையும் கோபத்துடன் எரித்து, பெருமிதம் கொண்டு திரிந்தான். ஒருநாள்அவன்நகருக்குள் செல்ல நேர்ந்தது. அங்கே, நோய்வாய்ப்பட்ட தன் கணவனுக்குப் பணிவிடை செய்யும் ஒரு பத்தினியையும் தர்ம வியாதன் என்னும் கசாப்புக் கடைக்காரனையும் கண்டான். அவ்விருவரும் சாமானிய நெறியான கற்புடைமையையும் கடமையையும் காத்து உள்ளொளி பெற்றனர்என்பதைஉணர்ந்தான். இதை எண்ணிப் பாருங்கள்."

# சுவாசக் காற்றைப் பேச்சாக மாற்றக் கூடிய கருவியைக் கண்டு பிடித்தான் பாகிப்பட் சிறுவன்



சுவாசத்தைக் கொண்டு பேச்சாற்றலைக் கொடுக்கும் கருவியைக் கண்டுபிடித்ததற்காக இந்தியாவின் பானிப்பட்டைச் சேர்ந்த 16 வயதான அர்ஷ்ஷா தில்பாகி கூகுள் உலகளாவிய அறிவி யல் கண்காட்சியின் இறுதிப் போட்டிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

டால்க் என்று பெயரிடப்பட்டுள்ள இந்தக் கருவியால் மனிதனின் சுவாசத்தை மூர்ஸ் கோடாக மாற்றி அதை சென்சார் மூலம் பேச்சாக மாற்ற முடியும். டிஏவி சர்வதேச பாடசாலையைச் சேர்ந்த தில்பாகியின் இந்தக் கருவியானது முற்றிலும் பேச்சாற்றல் இல்லாதவர்களையும் பேச வைக்கும். மூச்சுக் காற்றைக் குரலாக மாற்றிய 16 வயது சிறுவனின் கண்டுபிடிப்பு உலகின் வேகமான மற்றும் விலைகுறைவான ஆக்மென்டிவ் மற்றும் ஓல்டெர்நேட்டிவ் தொடர்பு சாதனம் (ஏஏசி). இன்று அனைவராலும் வாங்க முடியாத விலையான 4.26 லட்சம் ரூபாயாக உள்ளது. தற்போது இதை ஸ்டீபன் ஹொக்கிங் பயன்படுத்தி வருகிறார்.

தற்போதும் சந்தைகளில் கிடைக்கும் ஏஏசி சாதனங்கள் விலை அதிகம் என்பதுடன் குறைவான வேகத்திலும் செயற்படுகின்றன. ஆனால் இந்த ஏஏசி சாதனம் வேகமான செயல்திறனுடன் ரூ.5000 விலையில் கிடைக்கும் என்று இதைவடிவமைத்த தில்பாகி தெரிவித்தார். மேலும் டால்க் கருவி மனிதனின் சுவாசத்தை மைக்ரோபோன் மூலம் சிக்னல்களாக மாற்றுகிறது. மூர்ஸ் எஞ்ஜின் எனப்படும் இந்த சமிக்ஞைகள் புள்ளி மற்றும் கோடுகளாக மாற்றப்பட்டு அதன்பின் பேச்சாக மாற்றப்படுகின்றது. இந்தக் குரல் ஆங்கிலத்தில் 9 விதமாக பாலினம் மற்றும் வயதிற்கேற்றவாறு ஒலிக்கும். எதிர்காலத்தில் டால்க் கருவி தானாக கணிக்கும் தொழில்நுட்பத்தை இணைத்துக் கூடுதல் வசதிகளையும் மேம்படுத்த வேண்டும் என்று தில்பாகி விருப்பம் தெரிவித்துள்ளார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | 3 | 7 | | | 8 | 4 | |
| | 9 | | | | 8 | | 6 | |
| | 6 | 5 | | | 4 | | | 2 |
| 9 | 7 | 1 | | | 2 | | | 6 |
| | 2 | | | | | | 9 | |
| 4 | | | 5 | | | 2 | 1 | 8 |
| 3 | | | 6 | | | 1 | 8 | |
| | 4 | | 9 | | | | 7 | |
| | 8 | 7 | | | 5 | 9 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | 7 | 2 | 1 | 4 | 8 | 5 | 3 |
| 2 | 5 | 3 | 8 | 9 | 7 | 1 | 4 | 6 |
| 8 | 4 | 1 | 3 | 5 | 6 | 9 | 2 | 7 |
| 3 | 8 | 2 | 1 | 4 | 5 | 6 | 7 | 9 |
| 7 | 9 | 5 | 6 | 2 | 3 | 4 | 1 | 8 |
| 4 | 1 | 6 | 7 | 8 | 9 | 5 | 3 | 2 |
| 6 | 2 | 4 | 9 | 3 | 1 | 7 | 8 | 5 |
| 1 | 3 | 9 | 5 | 7 | 8 | 2 | 6 | 4 |
| 5 | 7 | 8 | 4 | 6 | 2 | 3 | 9 | 1 |

# காலிறுதியில் அராலி சரஸ்வதி



யாழ்ப்பாணம்,செப்.15

அநுராதபுரம் சுவர்ணபாலிக பெண்கள் வித்தியாலய அணி, மட்டக்களப்பு சிசிலிய வித்தியாலய அணிகளை வீழ்த்தி காலிறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றது அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி.

நேற்று ஞாயிற்றுக்கிழமை வியங்கொடை சியனா தேசிய கல்வியியற் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் 17 வயதுப்பிரிவு பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியின் முதலாவது ஆட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து அநுராதபுரம் சுவர்ணபாலிக பெண்கள் வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி 34:7 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து மட்டக்களப்பு சிசிலிய வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி 26:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இன்று திங்கட்கிழமை இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் களுத்துறை பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியுடன் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி மோதவுள்ளது. (ரி- 23)

# இன்றைய ஆட்டம்



கரணவாய்,செப்.15

திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டித்தொடர் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகிறது. இதில் இன்று திங்கட்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு :-

பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் அல்வாய் கலைமகள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் பாரதி விளையாட்டுக் கழகமும், பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் வலிகாமம் றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ரி- 108)

★ ★ ★

கரணவாய்,செப்.15

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான தடகளப் போட்டியில் உயரம் பாய்தல், கோலூன்றிப் பாய்தல் ஆகியவை இன்று பிற்பகல் 4.30 மணிக்கு தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

ஆண், பெண் இருபாலாருக்கும் இடையில் நடைபெறும் இப்போட்டிகளில் பங்குபற்றவிரும்புவோர் குறித்த நேரத்துக்கு வருகை தந்து போட்டிகளில் பங்குபற்றுமாறு யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி எம்.ஆர்.மோகனதாஸ் அறிவித்துள்ளார். (ரி- 108)



தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட், கரம் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் இடம் பெற்றது. தேசியக் கொடியை கல்வி அமைச்சின் விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் அபயரெத்தினவும், வட மாகாணக் கொடியை கல்விப்பணிப்பாளர் சத்தியபாலனும் ஏற்றிவைப்பதையும், போட்டிகளில் கலந்து கொள்ளவந்த போட்டியாளர்களையும் படங்களில் காணலாம். (ரி- 23)

# காலிறுதி ஆட்டத்தில் யாழ். லீக் அணி



யாழ்ப்பாணம்,செப்.15

ஜெனற்றின் அபார உதையின் மூலம் மன்னார் உதைபந்தாட்ட லீக் அணியை வீழ்த்தி காலிறுதியாட்டத்திற்கு முன்னேறியது யாழ்.உதைபந்தாட்ட லீக் அணி.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து யாழ். உதைபந்தாட்ட லீக் அணி மோதிக் கொண்டது.

சமபலத்துடன் இரண்டு அணிகளும் களம் இறங்க ஆட்டம் விறுவிறுப்பாக இடம்பெற்றது. இரண்டு அணியினரும் தமது அணிக்கான கோல்களைப் பெற கடும் முனைப்புடன் விளையாட ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. இரண்டு அணியினரும் கோல் அடிப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்ட போதும் இரண்டு அணியினராலும் தமது அணிக்கான கோலினை பெற முடியவில்லை இரண்டு அணியினரும் கோல்களைப் பெறாத நிலையில் முதற்பாதி ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானபோது யாழ்.உதைபந்தாட்ட லீக் அணி தனது ஆட்டத்தில் சில மாற்றங்களை மேற்கொண்டு எதிர் அணியின் கோல்ப் பரப்பினை முற்றுகையிட்டு விளையாடினர். ஆட்டம் முடிவதற்கு 5 நிமிடங்கள் இருக்கையில் யாழ். உதைபந்தாட்ட லீக் அணியினருக்கு நேர் உதை ஒன்று கிடைத்தது. அதனை ஜெனற் மிகவும் அற்புதமான முறையில் அடித்து தனது அணிக்கான கோலினை பெற்று தனது அணியின் வெற்றியை உறுதி செய்தார். பதிலுக்கு மன்னார் உதைபந்தாட்ட லீக் அணியினர் தமது அணிக்கான கோல்களை அடிப்பதற்காக முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் அவை கைகூடவில்லை. ஆட்ட நேர முடிவில் யாழ். உதைபந்தாட்ட லீக் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (ரி- 23)

# அடுத்த சுற்றுக்கு பறந்தன கழுகுகள்

[கர]ணவாய்,செப்.15

தண்டனை உதை கைகொடுக்க 1:0 என்ற கோல் கணக்கில் கரவெட்டி செஞ்சுடர் விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்து அடுத்த சுற்றுக்கு முன்னேறியது வல்வை கழுகுகள் விளையாட்டுக்கழகம். மற்றொரு ஆட்டத்தில் அண்ணாசிலையடி இளைஞர் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 11 பேர் பங்குபற்றும் உதைபந்துச் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கரவெட்டி செஞ்சுடர் விளையாட்டுக்கழகமும், வல்லை கழுகுகள் விளையாட்டுக் கழகமும் மோதின.

மிகவும் பரபரப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் இடைவேளை வரை இரு அணியினரும் கோல் போடுவதற்கு கடும் முயற்சி செய்தன. ஆனால் கோல் எதுவும் போடப்படாத நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது. இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி விறுவிறுப்பாக இடம்பெற்றுக்கொண்டிருந்தபோதும் கோல் போடுவதற்கு இரு அணியினரும் மேற்கொண்ட கடும் பிரயத்தனங்கள் வீணாகின. இந்தச் சூழ்நிலையில் செஞ்சுடர் அணி வீரர் கோல் பிரதேசத்தில் வைத்து பந்தினை கையால் தடுத்த காரணத்தால் எதிரணிக்கு தண்டனை உதை வழங்கப்பட்டது. சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திய ஜினோசன் அதனைக் கோலாக மாற்ற 1:0 என்ற கோல் அடிப்படையில் கழுகுகள் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது.

அடுத்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக்கழகமும், உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகமும் மோதின. உதைபந்தாட்ட விதிகளை அனுசரித்து பணிவுடன் விளையாடிய இரு அணியினரையும் பார்வையாளர்களும் போட்டி ஏற்பாட்டாளர்களும் பாராட்டினர். இந்த ஆட்டமும் விறுவிறுப்பாக இடம் பெற்ற போதும் அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக்கழகம் இடைவேளைக்குப் பின்னர் 2 கோல்களைப் பெற்று 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அவ்வணி சார்பாக ரதீஸ்குமார் 2 கோல்களையும் போட்டார். (ரி- 108)

# பிரதேச செயலகங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட தடகளப் போட்டி முடிவுகள்

கரணவாய்,செப்.15

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்டமட்டத் தடகளப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்று மாகாணமட்டப் போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட வீர, வீராங்கனைகளின் பெயர்களும் பிரதேச செயலகங்களும் வருமாறு:

**5000 மீற்றர் ஆண்**
பி.தயாகரன் (கோப்பாய்), எஸ்.சுவர்ணன் (சாவகச்சேரி), எஸ்.நிரோசன் (சாவகச்சேரி)

**5000 மீற்றர் பெண்**
ஆர்.அஜித்தா (சண்டிலிப்பாய்), எம்.விதுசனா (சண்டிலிப்பாய்), வி.பவிதா (தெல்லிப்பழை)

**10,000 மீற்றர் ஆண்**
எஸ்.சுவர்ணன் (சாவகச்சேரி), எஸ்.நிரோசன் (சாவகச்சேரி), வி.யசோதரன் (நல்லூர்)

**800 மீற்றர் ஆண்**
ஏ.அனோகன் (யாழ்ப்பாணம்), எஸ்.தார்மீகன் (கரவெட்டி), பி.நிரோஜன் (யாழ்ப்பாணம்)

**800 மீற்றர் பெண்**
ஜே.ஜெனார்த்தனி (சண்டிலிப்பாய்), எம்.மேரி அனிஸ்ரா (வேலணை), யு.விதுசனா (சண்டிலிப்பாய்)

**100 மீற்றர் ஆண்**
சி.மடோனில்விஸ் (யாழ்ப்பாணம்), ஜி.ரசிகரன் (பருத்தித்துறை), பி.மதுகன் (கரவெட்டி).

**100 மீற்றர் பெண்**
எம்.கமலினி (சங்கானை), எம்.மேரிஎரோமி (வேலணை), ஜே.அனித்தா (தெல்லிப்பழை)

**200 மீற்றர் ஆண்**
ஜே.அபிரன் (யாழ்ப்பாணம்), ஆ.சதீஸ் (நல்லூர்), வி.சிவதர்சன் (வேலணை)

**200 மீற்றர் பெண்**
எம்.கமலினி (சங்கானை), ஏ.மேரிஎரோமி (வேலணை), ஏ.அனற் (சண்டிலிப்பாய்)

**400 மீற்றர் ஆண்**
ஆர்.சதீஸன் (நல்லூர்), வி.சிவதர்ஸன் (வேலணை), ஜே.அபிமன் (யாழ்ப்பாணம்)

**400 மீற்றர் பெண்**
ஏ.அனற் (சண்டிலிப்பாய்), ஏ.மேரிஎரோமி (வேலணை), எம்.மெற்றில்டா (வேலணை)

**நீளம் பாய்தல் ஆண்**
வி.யஸ்மினன் (உடுவில்), ஜி.ரசிகரன் (பருத்தித்துறை), ஜே.அனுஜன் (நல்லூர்).

**நீளம் பாய்தல் பெண்**
எஸ்.ஆரணி (கரவெட்டி), எம்.கமலினி (சங்கானை), எம்.மெற்றில்டா (வேலணை)

**முப்பாய்ச்சல் ஆண்**
வி.ஜஸ்மினன் (உடுவில்), எம்.முரளிதரன் (சாவகச்சேரி, ஜி.ரசிகரன் (பருத்தித்துறை)

**முப்பாய்ச்சல் பெண்**
பி.தர்சிகா (பருத்தித்துறை), எம்.மெற்றில்டா (வேலணை), எஸ்.அபிசாயினி (கரவெட்டி)

**ஈட்டி எறிதல் ஆண்**
டபிள்யு.சி.எல்.லிவிங்ரா (யாழ்ப்பாணம்), எஸ்.செந்தூரன் (நல்லூர்), எம்.சஞ்சீவன் (யாழ்ப்பாணம்)

**ஈட்டி எறிதல் பெண்**
ஜே.அனித்தா (தெல்லிப்பழை), எஸ்.சசிகலா (நல்லூர்), ஆர்.சுஜீபா (வேலணை)

**குண்டுபோடுதல் ஆண்**
வி.ஹரிகரன் (பருத்தித் துறை), ஆர்.ரதீஸ்வரன் (தெல்லிப்பழை), ஏ.கிருஷ்ணமூர்த்தி (யாழ்ப்பாணம்)

**குண்டுபோடுதல் பெண்**
ஆர்.சுஜீபா (வேலணை), எஸ்.சசிகலா (நல்லூர்), எம்.அபிசாயினி (கரவெட்டி)



**தட்டெறிதல் ஆண்**
ஏ.கிருஸ்ணமூர்த்தி (யாழ்ப்பாணம்), வி.ஹரிகரன் (பருத்தித்துறை), எஸ்.தேவகுமரன் (நல்லூர்)

**தட்டெறிதல் பெண்**
ஆர்.சுஜீபா (வேலணை), ரி.மதுசி (கரவெட்டி), ஆர்.ர[illegible]ந்தினி (சண்டிலிப்பாய்). (ரி-1[illegible]8)



# உமர் அக்மல் அதிரடியில் வென்றது லயன்ஸ்

சம்பியன் லீக் தகுதிச்சுற்று ஆட்டமொன்றில் உமர் அக்மலின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் பாகிஸ்தானின் லாகூர் லயன்ஸ் அணி, இந்தியாவின் மும்பை இந்தியன்ஸ் அணியை ஆறு இலக்குகளால் வெற்றி கொண்டுள்ளது.

ஆறாவது சம்பியன் லீக் தொடரின் தகுதியாட்டங்கள் நேற்று முன்தினம்ஆரம்பமாகின. அன்றையதினம் நடந்த இரண்டாவது தகுதியாட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி, லாகூர் லயன்ஸ் அணியை சந்தித்தது. நாணய சுழற்சியில் வென்ற லயன்ஸ் அணித்தலைவர் மொகமட் ஹபீஸ் களத்தடுப்பை தெரிவு செய்தார். நடப்பு சம்பியன் அந்தஸ்துடன் களமிறங்கிய மும்பை அணி தொடக்கத்திலேயே ஆட்டம் கண்டது. தொடர்ந்து வந்த வீரர்களும் பெரியளவில் சோபிக்காத நிலையில் மும்பை அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 135 ஓட்டங்களை மட்டும் எடுத்தது. துடுப்பாட்டத்தில் அடிற்யாரெயர் 38 ஓட்டங்களையும், மைக்கல் ஹஸி 28 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் அய்சாஸ் சீமா, வகாப் ரியாஷ் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

சுலப இலக்கை விரட்டிய லயன்ஸ் அணி 18.4 ஓவர்களில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்துவெற்றி இலக்கை அடைந்தது. அகமட் செஷாட் 34 ஓட்டங்களையும், நசிர் ஜாம்ஷெட் 26 ஓட்டங்களையும், மொகமட் ஹபீஸ் 18 ஓட்டங்களையும் விளாசி வலுவான அடித்தளம் அமைத்தனர். இறுதி நேரத்தில் அதிரடியாக ஆடிய உமர் அக்மல் ஆட்டமிழக்காமல் 38 ஓட்டங்களைப் பெற்று வெற்றியை உறுதி செய்தார். பந்து வீச்சில் மும்பையின் பிரக்யன் ஓஜா 2 இலக்குகளை வீழ்த்தினார். ஆட்டநாயகனாக லயன்ஸ் அணியின் உமர் அக்மல் தெரிவானார். (ரி)

# டோனியிடம் பாடம் கற்கும் மக்கலம்



இந்திய அணித்தலைவர் டோனியிடம் இருந்து பாடம் கற்று வருவதாகத் தெரிவித்துள்ளார் நியூஸிலாந்து அணித்தலைவர் மக்கலம்.

ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் விளையாடி வந்த மக்கலம் இந்த ஆண்டு டோனி அணித்தலைவராக விளையாடும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் விளையாடினார். நேற்று முன்தினம் ஆரம்பமான சம்பியன் லீக் தொடருக்காக மக்கலம் சென்னையில் பயிற்சி பெற்று வருகிறார்.

இந்த நிலையிலேயே இந்திய அணித்தலைவர் டோனியிடம் இருந்து தான் பாடம் கற்று வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில், எங்கள் அணியில் தான் அதிகமான சர்வதேச அணித்தலைவர்கள் உள்ளனர். சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் விளையாடி வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. ஒருநாள் ஆட்டங்களின் அணித்தலைவர் பதவியில் டோனி மிக சிறப்பாக செயல்படுகிறார். இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் ஒருநாள் தொடரை இந்திய அணி வென்றது சிறப்பானது. இது தவிர அணித்தலைவர் பதவிக்கு உரிய திறமையான வீரர்கள[illegible] ரெய்னா, அஸ்வின் ஆகியோர் அணியில் உள்ளனர். இலக்குக்காப்பாளராக பணியாற்றுபவர் அணித்தலைவராக செயற்படுவது சவாலானது. நான் இது தொடர்பாக டோனியிடம் தான் பாடம் கற்று வருகிறேன் என்று கூறியுள்ளார். (ரி)

# முடிவை மாற்றிய மிர்சா



ஆசிய விளையாட்டு தொடரில் ரென்னிஸ் ஆட்டங்களில் பங்கேற்பதற்கு மறுப்புத் தெரிவித்திருந்த இந்திய நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சா தனது முடிவை மாற்றி தொடரில் பங்கேற்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தென்கொரியாவில் உள்ள இன்ச்சியானில் ஆசிய விளையாட்டு எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பிக்கிறது. இந்த தொடரில் இருந்து சானியா, சோம்தேவ் உள்ளிட்ட இந்திய நட்சத்திரங்கள் விலகுவதாக அறிவித்திருந்தனர்.

இந்நிலையில் தனது முடிவை மாற்றியுள்ள சானியா குறித்த தொடரில் பங்கேற்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்: ஆசியவிளையாட்டில் பங்கேற்கமாட்டேன் என மகிழ்ச்சி இல்லாமல் தான் தெரிவித்தேன். தற்போது இந்த முடிவை மாற்றி விளையாட எண்ணியுள்ளேன். இதில் கலந்து கொள்வதன் மூலம் சீனா வில் நடைபெறவுள்ள உகன் தொடரில் பங்கேற்க முடியாது. அத்துடன் தரவரிசைப் புள்ளிகளை இழக்க நேரிடும். இருப்பினும், பீஜிங், டோக்கியோ தொடரில் சிறப்பாக செயற்பட்டு இழந்த புள்ளிகளை பெற்று விடலாம். அமெரிக்க ஓபனில் பட்டம் வென்றதால், ஆசிய விளையாட்டில் நெருக்கடி ஏற்படவில்லை. இதில் உறுதியாக பதக்கம் வெல்வேன் என நம்புகிறேன் என்று அவர் கூறினார். (ரி)

> ஆசிய விளையாட்டில் பங்கேற்கமாட்டேன் என மகிழ்ச்சி இல்லாமல் தான் தெரிவித்தேன். தற்போது இந்த முடிவை மாற்றி விளையாட எண் ணியுள்ளேன்.

# ஏமாற்றும் புஜாரா




இங்கிலாந்து அணிக்கெதிரான தொடரில் சொதப்பிய இந்திய வீரர் புஜாரா தற்போது இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் கவுண்டி தொடரிலும் ஏமாற்றி வருகிறார்.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடிய புஜாரா 5 ஆட்டங்களில் ஒரு அரைச்சதம் உட்பட 222 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டார். தொடர்ந்து இங்கிலாந்தில் நடக்கும் கவுண்டி தொடரில் விளை[illegible] டெர்பிஷயர் அணியில் ஒப்பந்தம் செய்யப்பட்டார். கா[illegible]ப் நகரில் நடைபெற்ற முதல் தர ஆட்டத்தில் டெர்பிஷயர் அணிக்காக 4வது வீரராக களமிறங்கிய புஜாரா, 26பந்துகளில் ஒரு பவுண்டரி உட்பட 7 ஓட்டங்களை மட்டும் எடுத்து ஆட்டமிழந்தார். பின்னர், 261 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு இரண்டாவது இன்னிங்ஸை ஆரம் பித்த டெர்பிஷயர் அணிக்கு மீண்டும் 4வது வீரராக களமிறங்கிய புஜாரா 6 பந்துகளைச் சந்தித்து ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்தார். அத்துடன் டெர்பிஷயர் அணி 154 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து ஆட்டத்தில் தோல்வி யுற்றமையும் குறிப்பிடத்தக்கது. (ரி)

# முதன்மைச் சுற்றைப் பிரகாசப்படுத்தியது நோர்தன்



லாகூர் லயன்ஸ் அணியை 72 ஓட்டங்களால் தோற்கடித்து, முதன்மைச் சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை பிரகாசப்படுத்திக் கொண்டது நோர்தன் டிஸ்ரிக்ஸ்.

ஏற்கனவே சவுதேர்ன் எக்ஸ்பிரஸ் அணியுடன் வெற்றியைப் பதிவு செய்திருந்த நோர்தன் அணி நேற்றைய ஆட்டத்தில் லாகூர் லயன்ஸ்ஸுடன் மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற லயன்ஸ் அணி நோர்தன் அணியைத் துடுப்பெடுத்தாடப் பணித்தது. டானியல் பிளைன், வட்லிங் ஆகியோரின் அதிரடி ஆட்டம் கை கொடுக்க நோர்தன் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 170 ஓட்டங்களைக் குவித்தது. தமக்கிடையே 90 ஓட்டங்களை பகிர்ந்து கொண்ட பிளைன், வட்லிங் முறையே 30, 37 பந்துகளை எதிர்கொண்டு தலா 53 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் லயன்ஸ் அணியின் அய்சாஸ் சீமா 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

171 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய லாகூர் லயன்ஸ் அணியின் துடுப்பாட்ட வீரர்கள் நீண்ட நேரம் களத்தில் தாக்குப்பிடிக்கவில்லை. சாட் நஸிம் மாத்திரம் 40 பந்துகளில் 58 ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள மற்றைய வீரர்கள் அனைவரும் ஒற்றை இலக்கத்துடன் ஆட்டமிழந்தனர். இறுதியில் லாகூர் அணி 18 ஓவர்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 98 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது. இதன் மூலம் நோர்தன் அணி 72 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பந்துவீச்சில் ரிம் சௌதி 3 இலக்குகளையும், ரென்ற் போல்ற், இஸ் சொதி தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.ஆட்டநாயகனாக ரிம்சௌதி தெரிவுசெய்யப்பட்டார். (ரி)

# கண்ணீர் அஞ்சலிகள்




## அமரர் கனகராஜா தர்சன்

மு/ வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும் **கனகராஜா நிஷாத்** அவர்களின் அன்புச் சகோதரர் அமரர் கனகராஜா தர்சன் கடந்த 05.09.2014 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு நாம் பெரும் துயரடைகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரி சங்கம்**
மு/ வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்.
புதுக்குடியிருப்பு
(52286)

# பிளட்சரை நீக்கி ரவிசாஸ்திரியை பயிற்சியாளராக்கவும் - பரூக்



பிளட்சரை நீக்கிவிட்டு ரவிசாஸ்திரியை பயிற்சியாளராக நியமிக்க வேண்டும் என்று இந்திய அணியின் முன்னாள் இலக்குக் காப்பாளர் பரூக் என்ஜினியர் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் சுற்றுப்பயணத்தில் டெஸ்ட் தொடரை 1-3 என்ற கணக்கில் மோசமாக தோற்றதன் எதிரொலியாக இந்திய அணியின் இயக்குநராக முன்னாள் வீரர் ரவிசாஸ்திரி நியமிக்கப்பட்டார். அதன்பின் இந்திய அணி ஒரு நாள் தொடரை 3-1 என்ற கணக்கில் கைப்பற்றியது. இந்தநிலையில் ரவிசாஸ்திரி இயக்குநராக நியமிக்கப்பட்ட பிறகு இந்திய அணி எழுச்சி பெற்று உள்ளது என்று முன்னாள் வீரர்கள் பாராட்டினர்.


இந்த நிலையில் பிளட்சரை நீக்கிவிட்டு ரவிசாஸ்திரியை பயிற்சியாளராக நியமிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ள பரூக் என்ஜினியர் கூறியதாவது : ரவிசாஸ்திரி தனக்கு வழங்கப்பட்ட பணியை சிறப்பாக செய்து உள்ளார். அவர் வீரர்களை ஊக்கப்படுத்தி திறமையை வெளியே கொண்டு வந்துள்ளார். அவர் ஒருநாள் ஆட்டங்கள் மட்டுமின்றி டெஸ்ட் ஆட்ட நுணுக்கங்களையும் அறிந்தவர். எனவே பிளட்சரை நீக்கிவிட்டு ரவிசாஸ்திரியை பயிற்சியாளராக நியமிக்க வேண்டும். அவருடன் திலிப் வெங்சர்காரை நியமிக்க வேண்டும். இருவரும் ஒன்றாக விளையாடி உள்ளனர். திலிப் வெங்சர்காரை பயிற்சியாளர் அல்லது நிர்வாக பொறுப்பில் இணைக்க வேண்டும். இவர்கள் நியமிக்கப்பட்டால் இந்திய அணிக்கு திருப்புமுனை ஏற்படும். என்னை பொறுத்தவரை வெங்சர்காருக்கு நான் முன்னுரிமை கொடுப்பேன். இப்படி சொல்வதால் நான் பிளட்சருக்கு எதிரானவன் அல்ல. அவருடைய குணாதிசயங்களில் அதிருப்தி அடைந்து உள்ளேன். அவரது செயற்பாடுகள் வீரர்களை ஊக்கப்படுத்துவது போன்று தெரியவில்லை. மேலும் டெஸ்டில் தோற்ற பிறகு அவரது முகத்தில் கவலை தெரியவில்லை. அவர் வீரர்கள் ஆடை மாற்றும் அறையில் அணித்தலைவர் டோனியின் பின்புறம் அமர்ந்து இருப்பார். வெளியே வந்து ஊடகங்களைச் சந்திக்கமாட்டார். பிளட்சரை திறமையானவர் என்று ரவிசாஸ்திரி பாராட்டி இருப்பது எனக்கு வியப்பு அளிக்கிறது. இங்கிலாந்துக்கு எதிராக 20 ஓவர் ஆட்டத்தில் கடைசி ஆட்டத்தில் அம்பதிராயுடு துடுப்பெடுத்தாட டோனி வாய்ப்பு வழங்கி இருக்க வேண்டும். அவர் 11ஆவது வீரராக களம் இறங்கவில்லை. அவர் ஒரு சிறந்த வீரர். அந்த ஆட்டத்தில் தோற்றது வருத்தம் அளிக்கிறது. ஏனென்றால் இங்கிலாந்தை விட நாம் வலுவான அணி என்று அவர் கூறினார். (ரி)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## வைரமுத்து சிவபாலன் J.P

(யாழ்மாவட்ட நீதிமன்ற ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்)

மண்ணகத்தே 22.05.1948 விண்ணகத்தே 16.08.2014



கடந்த 16.08.2014 இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவரும் பாசமிகு தந்தையும் ஆகிய அமரர் வைரமுத்து சிவபாலன் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (15.09.2014) திங்கட்கிழமை மு.ப 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச் செய்திகேட்டு உடனே ஓடோடி வந்தும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தோருக்கும், மலர்வளையம் சாத்தியோருக்கும், தொலைபேசி ஊடாக ஆறுதல் கூறியும், தேவையான உதவிகள் புரிந்தும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தொட்டிலடி,**
**சங்கானை**

**குடும்பத்தினர்.**
T.P NO : 077 691 6137
(52285)

# சஞ்சய் படேல் மீது முறைப்பாடு

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயலர் சஞ்சய் படேல், ஐ.பி.எல். சூதாட்டம் குறித்து தொடர்ந்து தவறான தகவல்கள் வெளியிட்டுவருகிறார் என பீகார் கிரிக்கெட் சங்க செயலர் ஆதித்யவர்மா முறைப்பாடுசெய்துள்ளார். ஆறாவது ஐ.பி.எல். தொடரில் நடந்த சூதாட்டம் குறித்து, உச்ச நீதிமன்றத்தின் பரிந்துரையின் பேரில் ஓய்வு பெற்ற நீதிபதி முகுல் முத்கல் தலைமையிலான குழு விசாரித்து வருகிறது. இந்த வழக்கின் மனுதாரராக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையை எதிர்த்து பீகார் கிரிக்கெட் சங்க செயலர் ஆதித்ய வர்மாவும் உள்ளார். இவர் வெளியிட்ட அறிக்கையில், முத்கல் குழு விசாரணை குறித்து சஞ்சய் படேல் தொடர்ந்து தவறான தகவல்கள் தெரிவித்து வருகிறார். இவர் மீது முறைப்பாடு தெரிவித்துள்ளேன் என்று கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து முத்கல் கூறுகையில், ஆதித்ய வர்மா முறைப்பாடு கொடுத்திருக்கலாம். ஆனால் இதுகுறித்து எவ்வித கருத்துக்களையும் ஊடகங்களுக்குத் தெரிவிக்கப் போவதில்லை என்றார். (ரி)

# கண்ணீர் அஞ்சலி

எமது மாவட்ட செயலக
நலன்புரி சங்க அங்கத்தவரும்
வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித்
திணைக்களத்தில் முகாமையாளராக
(சமுர்த்தி முகாமையாளர்)
கடமையாற்றிய



## நாகராசா அகிலன்

அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஊழியர் நலன்புரி சங்கம்*
**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.**
(52282)(7.6.3)

# தேசிய ஹோமியோபதி அமைப்பு விண்ணப்பம்

10 வருடங்களுக்கு மேல் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் ஹோமியோபதி வைத்தியம் செய்யும் வைத்தியர்கள் இதுவரை பதிவுகள் செய்யப்படாமல் இருந்தால் உடனடியாக சுயவிவரக்கோவையுடன் ரூபா 10 தபால் உறையுடன் B.O.C A/C 9215704 என்ற கணக்கு இலக்கத்துக்கு ரூபா 500 வைப்பு செய்த ரசீதுடன் விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்டு 31 ஆம் திகதி செப்டெம்பர் 2014 இற்கு முன்னதாக அனுப்ப வேண்டிய முகவரி:

**The Chairman, National Homoeopathic Foundation**
**No-160/1, Kandy Road, Ariyalai, Jaffna.**
**Tel : 071 446 2926**
(52281) (4.6.3)

# துயர் பகிர்கின்றோம்



எமது நிறுவனத்தின் சங்கானைப் பிரதேச விற்பனை ஒருங்கிணைப்பாளர்

**திரு. சி.சொருபன்**
அவர்களின் அன்புத் தாயார்

திருமதி
## இந்திராதேவி சிவசோதிலிங்கம்

அவர்கள் 13.09.2014 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார். அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு நாங்களும் அவர்களின் துயரில் பங்கு கொள்கின்றோம். அத்துடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

துயருறும்
L I C (LANKA) Ltd
முகாமையாளர்
(52293)

# மரண அறிவித்தல்



**திருமதி**
**பொன்மணி**
**சுப்பிரமணியம்**

மல்லாகத்தை பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்மணி சுப்பிரமணியம் 14.09 .2014 அன்று இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

புகையிரத வீதி,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொடர்பு : 0777634453
(52294)

Original HP Supplies
Authorized Partner

Awarded to
Nalin Information Technologies (Pvt) Ltd.

This is to certify that
Nalin Information Technologies (Pvt) Ltd.
is an authorized HP Original Cartridge Store

01/09/2014
Issued Date

01/09/2015
Valid Till

Ang Sue San
General Manager
Hewlett-Packard Singapore (Sales) Pte. Ltd
Printing & Personal Systems Group
Asia Emerging Countries




Log in: http://www8.hp.com/lk/si/default.html
facebook/nalin it



மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற வெருகலம்பதி ஆன்மீக எழுச்சி பாதயாத்திரை செம்ரெம்பர் 9ஆம் திகதி ஆரம்பமாகி 13ஆம் திகதி முடிவடைந்தது. இந்தப் பாதயாத்திரையில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி வெருகலம்பதியை அடைந்தது பாதயாத்திரை. (ஒ-10)

# வடிகான் திட்ட நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை

## கல்முனை முதல்வர் நேரில் பார்வையிட்டார்

கல்முனைக்குடி, செப். 15

கல்முனைக்குடி பழைய தபாலக வீதி வடிகான் திட்ட நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையினால் கல்முனைக்குடி பழைய தபாலக வீதியில் மேற்கொள்ளப்படும் வடிகான் நிர்மாணப் பணிகளை மாநகர முதல்வர் எம்.நிசாம் காரியப்பர் நேரடியாகச் சென்று பார்வையிட்டு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.



கல்முனை மாநகர சபையினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது கல்முனைக்குடி பழைய தபாலக வீதி வடிகான் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துமாறு முதல்வர் உத்தரவிட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து குறித்த வேலைத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஆராய்வதற்காக நேற்று மாநகர சபை அதிகாரிகள் சகிதம் முதல்வர் அங்கு பயணம் செய்திருந்தார்.

நெல்சிப் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இவ்வடிகான் நிர்மாணப் பணிகள் முடிவுறும் கட்டத்துக்கு வந்துள்ள போதிலும் சில தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக அதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

இது தொடர்பில் முதல்வர் நிசாம் காரியப்பர், உறுப்பினர் பரக்கத்துல்லா ஆகியோர் மாநகர சபையின் சிரேஷ்ட வேலைகள் அத்தியட் சகர் எம்.ஐ.ஏ.மஜீத். வேலைகள் அத்தியட்சகர் பாலா மற்றும் ஒப்பந்தகாரர் தரப்பினருடன் கலந்துரையாடி அந்தப் பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்கான ஆலோசனைகளை வழங்கியதுடன் வடிகான் நிர்மாணப் பணிகளை உடனடியாக விரைவுபடுத்தி நிறைவுக்குக் கொண்டு வருமாறு உத்தரவிட்டனர். (ஒ-10)

# அஷ்ரப்பின் நினைவேந்தல் நிகழ்வுகள் பாலமுனையில்

## தேசிய காங்கிரஸின் ஏற்பாட்டில்

மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் 14 ஆவது நினைவேந்தல் தினத்தை முன்னிட்டு பாலமுனை கிராமத்தில் 14 கோடி ரூபா நிதிஒதுக்கீட்டில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் அதே சமயம், நிறைவு செய்யப்பட்ட அபிவிருத்திப் பணிகளை மக்களிடம் கையளித்து வைக்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

தேசிய காங்கிரஸின் ஏற்பாட்டில் நாளை செவ்வாய்க் கிழமை இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுகளில் பிரதம அதிதியாக உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாஉல்லா கலந்துகொள்ளவுள்ளார்.

இரு கட்டங்களாக இடம் பெறவுள்ள இந்த நிகழ்வுகளின் முதற்கட்டமாக பாலமுனை கிராமத்தில் நிறைவு செய்யப்பட்ட வீதிகள், மற்றும் ஹிறா நகர் வீடமைப்புத் திட்டம், உதுமாபுற மின்சார திட்டம் மற்றும் ஹிறா நகர் மக்களுக்கான வாழ்வாதார திட்டம் என்பன மக்களிடம் கையளித்து வைக்கப்படவுள்ளன.

இதேவேளை- பனையடி விவசாயப்பாதை, வன்னிப்பத்து விவசாயப் பாதை, படாரக் கல்குளம்புனரமைப்பு, ஹிறா நகர் மின்சார திட்டம், மின் ஹாஜ் வித்தியாலய உள்ளக வீதி, அல்-ஹிதாயா வித்தியாலய உள்ளக வீதி என்பவற்றின் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

இரண்டாம் கட்ட நிகழ்வாக பாலமுனை அல்-ஹிதாயா வித்தியாலய கூட்ட மண்டபத்தில் கலாநிதி எம்.எச்.எம். அஷ்ரப்பின் நினைவு வேந்தல் கூட்டம் இடம் பெறவுள்ளது. (ஒ-10)

# காந்திபுரம் கிராமத்துக்கு கிடைத்தது மின்சாரம்

களுவாஞ்சிக்குடி, செப். 15

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி மின் பாவனையாளர் பிரிவுக்குட்பட்ட காந்திபுரம் கிராமத்துக்கு சனிக்கிழமை மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. காந்திபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இ.கோனேஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கலந்துகொண்டு மின் இணைப்பை வழங்கினார்.

4.5 கிலோ மீற்றர் நீளத்தில் 11.8 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட இந்த மின்சார விநியோகத் திட்டத்தின் கீழ் காந்திபுரத்தைச் சேர்ந்த 225 குடும்பத்தினர் நன்மை அடைவார்கள். (ஒ-10)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

திருமதி **ஜானகி கதிரேசன்**



தோற்றம் 01 . 10 . 1936

மறைவு 16 . 08 . 2014

கடந்த 16.08.2014 சனிக்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் இன்று (15.09.2014) திங்கட்கிழமை மு.ப. 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடை பெறும். அந்நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

67, மண்பிட்டி, நாவாந்துறை
யாழ்ப்பாணம்.
077 168 8509 (52276)(4.6.3)

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்
**ஜெயராஜசிங்கம் கமலேஸ்வரி**



தோற்றம் 05.11.1934

மறைவு 16.08.2014

கடந்த 16.08.2014 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பவிளக்கு ஜெயராஜசிங்கம் கமலேஸ்வரி அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (15.09.2014) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச் செய்திகேட்டு உடனே ஓடோடி வந்தும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியும், தேவையான உதவிகள் புரிந்தும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகள்.

பிள்ளையார் கோயிலடி,
தாவடி. (52265)(4.6.3)

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தில் முகாமையாளராக (சமுர்த்தி முகாமையாளர்) கடமையாற்றிய

**நாகராசா அகிலன்**

அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

அரசாங்க அதிபர்/மேலதிக பணிப்பாளர் நாயகம்
உதவி ஆணையாளர்,மாவட்ட வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்கள்,
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**
(52283)(7.6.3)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் 1982 ஆம் ஆண்டு பிறந்த சிங்கராசி, பூரம் (முதலாம் பாதம்) கிரகபாவம் 23, உயரம் 5' 3" சொந்த தொழில் (கடை, Jaffna town) வைத்திருக்கும் மணமகனுக்கு உள்நாட்டில் மணமகள் தேவை.

தொ.பே: 077 607 3356 (52277) (4.6.3)

## தவறிவிட்டது

சங்குவேலி வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த கனகரத்தினம் ராஜீவ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (851424997V) சாரதி அனுமதிப்பத்திரம், விசாகாட் என்பன அடங்கிய பேர்ஸ் கடந்த 02.09.2014 சங்குவேலிக்கும், மருதனார்மடத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(52278) (4.6.3) தொ.பே: 077 416 1600

## தேவை

எமது [illegible] வைத்தியசாலைக்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

1) தாதியர்-முன்அனுபவமுள்ளவர்
2) வரவேற்பாளர் - பெண்கள்
3) காசாளர் - பெண்கள்
4) கணக்குப் பதிவாளர் - பெண்கள்

சுயவிவரக் கோவையுடன் சமூகம் தரவும்.

காலம் : 16.09.2014
நேரம் : முற்பகல் 10.00 மணி
இடம் : புதிய யாழ்.வைத்தியசாலை

315, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.
222 3533/1011 (C/16230) (7.6.3)

முகாமையாளர்

## வாடகைக்குண்டு

நல்லூர் கோயில் வீதி, கைலாசப் பிள்ளையார் கோயிலடியில் முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்ட கடைகள் வாடகைக்குண்டு. காட்சி அறையாகவும் பாவிக்க உகந்தது.

தொடர்பு : 077 225 9030

(52287)

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை. 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு : 075 203 5424

## தவறிவிட்டது

ஏழாலை கிழக்கைச் சேர்ந்த இராசலிங்கம் கஜந்திரன் என்பவரது I.C இல 872073787V, சாரதி அனுமதிப்பத்திரம், வாகன அனுமதிப் பத்திரம், வங்கிக்கடன் அட்டை அடங்கிய பேஸ் ரத்தோடைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் 09.09.2014 அன்று தவறிவிட்டது.

தொடர்பு : 0770690885 / 021205 9410

(52291)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## சேவை நலன் பாராட்டு

### திருமதி சுசீலா இராமநாதன்



கடந்த 34 வருடங்களாக யாழ்.போதனா வைத்திய சாலையில் தாதிய உத்தியோகத்தராகவும் பொறுப்புத்தாதிய உத்தியோகத்தராகவும் தாதிய சகோதரியாகவும் பணிபுரிந்து எம்மக்களிற்கு சிறந்த சேவையாற்றி 08.09.2014 இல் பணியில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் எமது சங்க மூத்த உறுப்பினர் திருமதி சுசீலா இராமநாதன் அவர்கள் மேலும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல வைத்தியசாலை சாமுண்டாதேவி சமேத ஞான வைரவப் பெருமானை வேண்டுகின்றோம்.


நன்றி,

தாதிய உத்தியோகத்தர் நலன்புரி கூட்டுறவுச்சங்கம்,யாழ்ப்பாணம்.

(52290)

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நம.

## மரண அறிவித்தல்



### கிருஸ்ணபிள்ளை வரராஜசிங்கம் (ஆச்சாரியார்)


யாழ்.மாவிட்டபுரம் மடத்தடி செந்தாவத்தையை பிறப்பிடமாகவும் வவுனியா, தோணிக்கல்லை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை வரராஜசிங்கம் (ஆச்சாரியார்) அவர்கள் (14.09.2014) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை-இளையபிள்ளை தம்பதியினரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் சரஸ்வதி தம்பதியினரின் மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் கௌரிமலர், ஸ்ரீசெல்வநாதன்(ஜேர்மனி), அருணகிரிநாதன், மிருணாளினி, கிருபாகரன் காலஞ்சென்ற வசுதராணி, மற்றும் தயாபரன் (கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்றவர்களான வையாபுரி, தங்கமணி, மற்றும் இராசமணி ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற திசைநாதன், குணேஸ்வரி(ஜேர்மனி), சரோஜினிதேவி, பாலசந்திரன், பத்மாவதி ஆகியோரின் மாமனாரும் மோகன்ராஜ், தர்மினி, வசுதா, கல்பனா, காஞ்சனா, பிரவீனா, சிந்துஜன், பிரதீபன், டிலக்ஸன், லக்ஸிதா, சஜித், கிருசாந், நிரோஜினி, பவிந்தன், ரதுஷா, ரதீஷன், ஆகியோரின் பாசமிகு பேரனும் தக்ஷகன், பவிஸ்னா, ஆகியோரின் பூட்டனாருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

T.P-024 222 5595
077 936 4248

தகவல்:
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தில் (திவிநெகும சமுர்த்தி) முகாமையாளராகக் கடமையாற்றிய

### நாகராசா அகிலன்


(திவிநெகும முகாமையாளர், மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்.)

அவர்களின் மறைவிற்காக எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குவதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வாழ்வின் எழுச்சி (சமுர்த்தி) முகாமையாளர்கள் சங்கம் யாழ் மாவட்டம்.**

(52284)(4 3 8)

## மரண அறிவித்தல்



### நாகராசா அகிலன்

இணுவில் கிழக்கு மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும், மித்திரை வீதி, குப்பிளான் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட நாகராசா அகிலன் (முகாமையாளர் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), 14.09.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகராசா மற்றும் மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும் யௌவனரூபியின் (பிரதம இலிகிதர், தெல்லிப்பழை ஆதார வைத்திசாலை) அன்புக் கணவரும், ஆரதியின் அன்புத் தந்தையும், முத்துக்குமாரு பார்வதி தம்பதியினரின் பாசமிகு மருமகனும், நிரஞ்சன், பிரியதர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்- கிராம அபிவிருத்தித் திணைக்களம் - பிரதேச செயலகம், உடுவில்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், முரளிதரன் (கனடா), கெங்காதரன் (ஆசிரியர் - யா/பண்ணாகம், மெய்கண்டான் ம.வி.), கிஷ்ண ரூபி (ஆசிரியை - யா/ குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலயம்), தேவிகபாலன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்- கிராம அபிவிருத்தித் திணைக்களம் - பிரதேச செயலகம் தெல்லிப்பழை), சத்தியதேவி, கௌரி (ஆசிரியை - கொ/ வெள்ளவத்தை சைவமங்கையர் கழகம்), சேயோன்(பிரான்ஸ்), பாலமுரளி (இலங்கைப் போக்குவரத்து சபை - காரைநகர்), முகுந்தன் (பிரான்ஸ்), முரளீதரன் (கொலண்ட்), செந்தில்ராஜா, கபிலன் (கனடா), தீபிகா, தவமணிதேவி, றஞ்சிதமலர் திருவருட்செல்வம் (ஆசிரியர் - போகவந்தலாவ), ஜெயக்குமாரி (ஆசிரியர் - போகவந்தலாவ) ஆகியோரின் மைத்துனரும், வைத்தீஸ்வரன், காலஞ்சென்ற கேசவன், வாமதேவன் மற்றும் கிருபாகரன் ஆகியோரின் மருமகனும் காலஞ் சென்ற அருளம்பலம் மற்றும் நாகலிங்கம் ஆகியோரின் பெறாமகனும், இராகவன் சுவர்ணாங்கி, மாதுரி, நிதுர்ணன், கீர்த்தனா ஆகியோரின் மாமனாரும், நிரூபினி, றக்சனா ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (15.09.2014) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இணுவில் கிழக்கு மஞ்சத்தடியில் உள்ள அன்னாரின் பிறந்த இல்லத்தில் இடம் பெற்று தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொ.பே:**
**077 899 5431**


(52288)

தகவல்:
**குடும்பத்தினர்**

## விழிநீர் காணிக்கை

மண்ணில்
18
05
1977

விண்ணில்
14
09
2014



### அமரர் நாகராசா அகிலன்

(வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் நிதி முகாமையாளர் மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்).

**அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

மஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிரமணிய ஆலய பரிபாலன சபையினர், கோண்டாவில் வடமேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம், விவேகானந்த முன்பள்ளி, விவேகானந்தா சனசமூகநிலையம் மற்றும் நண்பர்கள்.

(52289)

# தமிழக மீனவர் பிரச்சினையில் பா.ஜ.கவினர் இரட்டை வேடம்

## ஜெயலலிதா கடுமையாகச் சாடல்



சென்னை, செப் 15
தமிழக மீனவர் பிரச்சினை விடயத்தில் பாரதீய ஜனதாக் கட்சி அரசாங்கம் இரட்டை வேடமிடுவதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் தெரிவித்துள்ளார்.
இந்தநிலையில் தேசியக் கட்சிக்கு வாக்களிப்பதால், தமிழக மக்களுக்கு எவ்வித நன்மைகளும் ஏற்படப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
செப்ரெம்பர் 18 ஆம் திகதி நடைபெறவுள்ள தூத்துக்குடி மேயர் தேர்தலுக்கான பிரசாரத்தின் போதே ஜெயலலிதா இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.
பாரதீய ஜனதாக் கட்சியின் சார்பில் மத்திய அரசிலும் மாநில அரசிலும் வேறுபட்ட கொள்கைகளை கொண்டவர்கள் இருக்கும்போது அந்தத் தேசிய கட்சி ஒன்றுக்கு ஆதரவு வழங்குவதால் எவ்வித நன்மைகளும் ஏற்படப்போவதில்லை.
தூத்துக்குடி, அதிகளவில் மீனவர்களை கொண்ட பிரதேசமாகும். மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.
இந்தநிலையில், பிரதமர் நரேந்திர மோடி மீனவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும் என்று ஜெயலலிதா கோரியுள்ளார்.
பாரதீய ஜனதாக் கட்சியின் மாநில தலைவர்கள், மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று கோருகின்றனர். எனினும் தேசிய ரீதியில் அந்தக் கட்சியின் தலைவர் ஒருவர் தமிழக மீனவர்களுக்கு எதிராக செயற்படுவதாக ஜெயலலிதா சுட்டிக் காட்டினார்.
ஜனதாக் கட்சியின் தலைவர் சுப்பிரமணிய சுவாமியை கோடிட்டே அவர் இந்தக்குற்றச்சாட்டை சுமத்தினார்.
இவ்வாறான நிலையில் தமிழக மக்கள் எவ்வாறு பாரதீய ஜனதாக்கட்சி என்ற தேசியக் கட்சிக்கு வாக்களிக்க முடியும்? என்று ஜெயலலிதா கேள்வி எழுப்பினார். (த)

# வெளிநாடுகளில் தொடர்ந்தும் புலிகள் உயிருடன்

## அவதானமாக இருக்கவேண்டும் என்கிறார் அமைச்சர் கெஹலிய



கொழும்பு, செப். 15
இறுதிப்போரில் முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டாலும் விடுதலைப்புலிகளின் இரண்டாம் நிலை தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் மறைந்து வாழ்கின்றனர் என்பது உண்மைதான்.
இவ்வாறு தெரிவித்துள்ளார் தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.
இந்தியாவில் கைதுசெய்யப்பட்ட இலங்கையரான அருண் செல்வராஜன் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகள் குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-
புலிகளுக்கு ஆயுதப்பயிற்சி வழங்கி அவர்களை வளர்த்ததும் இந்தியாதான். பிரபா கரனைத் தோற்கடிப்பதற்கு இலங்கை அரசுக்கு ஆயுத உதவி வழங்கியதும் இந்தியா தான். அதே புலிகளின் ஒரு சிலர் இன்று பாகிஸ்தானுடன் சேர்ந்து இந்தியாவுக்கு எதிராகச் செயற்படுகின்றனர். இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கையரான அருண் செல்வராஜன் குறித்து இந்திய புலனாய்வு அதிகாரிகள் இலங்கைக்கு வந்து விசாரணை நடத்துவதற்கு நாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவோம். விடுதலைப்புலி உறுப்பினர்கள் தீவிரவாத அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுவதற்கு முயற்சிக்கின்றனர். இவர்களால் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் ஆபத்துள்ளது. நாம் புலிகளை மீள அணிதிரள ஒருபோதும் இடமளிக்க மாட்டோம், அத்துடன் இந்தியாவும் கவனத்துடன் இருக்கவேண்டும். - என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (த)

## தொடர்ச்சிகள்

### இந்தியாவின்

கையிடம் தகவல்களை கோரியுள்ளதா என்றும், விசாரணைக் குழுவை அனுப்புவது சம்பந்தமாக ஏதேனும் அறிவிப்பு விடுத்துள்ளதா என்றும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹணவிடம் நேற்று வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
" சென்னையில் இலங்கை நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்ற விவரம் எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
விசாரணை குறித்த தகவல் அறிவிக்கப்படவில்லை. எனினும், இந்திய அதிகாரிகள் விசாரணைக்கு ஒத்துழைப்பு கோரும் பட்சத்தில் அனைத்து வசதிகளும் செய்துகொடுக்கப்படும்" என்றும் அவர் கூறினார்.
அதேவேளை, சென்னையில் கைதுசெய்யப்பட்ட பாகிஸ்தான் உளவாளிக்கும் புலிகள் அமைப்புக்குமிடையில் தொடர்புகள் இருக்கின்றனவா என்பது பற்றியும் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, இது தொடர்பில் இந்திய துணைத் தூதரகத்துக்கு நேற்று அறிவிக்கப் பட்டதாக தெரிய வருகின்றது.
(த-109-108-173)

### ஓட்டோக்களில்

யாழ்.நகர் மாத்திரமன்றிச் சகல இடங்களிலும் உள்ள அதிகமான ஓட்டோக்களில் இத்தகைய கண்ணாடிகள் பொருத்தப்பட்டுள்ளன. அது ஏன் பொருத்தப்பட்டுள்ளது என்பது தெரியாமலேயே பலர் அதில் பயணிக்கின்றனர். ஆனால் ஓட்டோக்களில் பயணிக்கும் பெண்களையும், அவர்கள் அணிந்திருக்கும் உள்ளாடைகளையும் பார்ப்பதற்காகவே அவ்வாறு கண்ணாடி பொருத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.
ஓட்டோக்களில் பின்னால் வரும் வாகனத்தைப் பார்ப்பதற்காகப் பூட்டப்பட்டிருக்கும் பக்கக் கண்ணாடிகளின் கீழாக இந்தக் கண்ணாடி ஒரு பக்கம் மாத்திரம் அல்லது இரண்டு பக்கமும் பொருத்தப்பட்டிருக்கும்.
இந்தக் கண்ணாடிகள் சாரதிகள் பின்னால் வரும் வாகனங்களைப் பார்ப்பதற்காகவே என்று அதில் பயணிக்கும் பயணிகள் கருதக்கூடும். ஆனால் அது ஏன் என்பது பலருக்கும் தெரியாது.
அவசர தேவை கருதிச் செல்பவர்கள், திடீரென வைத்திய சாலைகளுக்குச் செல்பவர்கள் உட்பட பலர் அவர்கள் அணிந்திருக்கும் உடையுடன் அல்லது சாதாரண உடையுடன் உடனே ஓட்டோவில் புறப்பட்டு விடுவர். அவ்வாறான வேளைகளில் அவர்களின் அந்தரங்க உறுப்புகள், உள்ளாடைகள் உள்ளிட்ட பகுதிகளை ஓட்டோ செலுத்துபவர்கள் பார்வையிடுகின்றனர் என்றும், இனிமேல் அவ்வாறான கண்ணாடிகள் பொருத்தப்பட்ட ஓட்டோக்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் பொலிஸார் மேலும் கூறுகின்றனர். (த-4)

### யாழ்ப்பாணம்

யினர் சோதனை நடத்தினர். ஒவ்வொரு பஸ்ஸாக அனைத்து பஸ்களையும் மறித்துச் சோதனை நடத்தியபோதே குறித்த பஸ்ஸிலிருந்து 13 கிலோகிராம் 380 கிராம் கஞ்சாவை மீட்டனர். பெட்டி ஒன்றில் வைத்து உரைப்பையினுள் சுற்றப்பட்டு மேலதிகமாக வைக்கப்படும் ரயரின் நடுவே அந்தப் பார்சல் வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டது.
அந்தப் பார்சல் யாழ்ப்பாணத்திலுள்ள பஸ் பதியும் அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. அது கொழும்பில் யாருக்குச் சேர்க்கப்படவேண்டும் என்ற விடயம் அதில் குறிப்பிடப்படவில்லை. அதனால் ஏனைய பொதிகளைப் போன்றே அந்தப் பொதியையும் அவர்கள் பெற்று பஸ்ஸில் அனுப்பியுள்ளனர். அவ்வாறு பஸ் புறப்பட்டதன் பின்னரே விசேட அதிரடிப்படையினருக்குத் தகவல் கிடைத்து அவர்கள் சோதனை செய்து அவற்றைக் கைப்பற்றினர்.
இதனையடுத்து யாழ்ப்பாண அலுவலகத்தில் அந்தப் பொதியை வாங்கியவரும் பஸ்ஸின் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சாரதியும், கொழும்பைச் சேர்ந்த சாரதியும் அந்த இடத்திலேயே வைத்துக் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நேற்று நீதிவானிடம் முற்படுத்தப்பட்டபோது எதிர்வரும் திங்கட்கிழமை வரை விளக்க மறியல் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
எனினும் பொதியை யார் யாழ்ப்பாணத்திலுள்ள பஸ் ரிக்கெட் பதியும் அலுவலகத்துக்கு அனுப்பி வைத்தனர் என்பது உள்ளிட்ட விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4)

### துப்பாக்கி

மடைந்துள்ளான்.
ரவை சிறுவனது காலில் துளைத்துள்ளது எனவும், உடனடியாகவே சிறுவன் கிளிநொச்சி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. (த-426-18-55)

### பருத்தித்துறை

கடற்கரைக்குச் சென்ற மீனவர்களே சடலத்தைக் கண்டு பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலம் தொடர்பில் விசாரணைகளை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.
சடலத்தின் முகம் சிதைவடைந்த நிலையிலும், நெஞ்சுப் பகுதி உருக்குலைந்த நிலையிலும் ஊதிப்பெருத்துச் சடலம் காணப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
இது தொடர்பில் சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி அன்ரலா விசாரணைகளை நடத்தியதோடு சடலத்தை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியாசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.
இவர் இந்திய மீனவராக இருக்கலாம் என்ற கோணத்திலும்

### குடு பேபி

பனையைத் தொடர்ந்து கொண்டிருந்துள்ளார் எனவும் கூறப்படுகின்றது.
இந்த நிலையில் நேற்று அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதோடு அவரிடமிருந்து 270 கிராம் குடு எனப்படும் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது. அவருக்கு எதிராக நீதிமன்றில் ஏற்கனவே பல வழக்குகள் உள்ளன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4)

### இலங்கையுடன்

விஜயத்தின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுகளை மேற்கொள்ளவுள்ளார். பின்னர் இருவரும் இணைந்து நுரைச்சோலையின் லக் விஜய மின்திட்டத்தின் இரண்டாவது பகுதியை ஆரம்பித்துவைக்கவுள்ள னர். ஜனாதிபதி செயலகத்திலிருந்தே இதனை அவர்கள் ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.
மறுநாள் இந்தியாவிற்கான தனது விஜயத்திற்கு முன்னதாக சீனா ஜனாதிபதி கொழும்புத் துறைமுகத்திற்க்கு செல்லவுள்ளார்.
இதேவேளை, அவரது இந்த விஜயத்தின்போது கொழும்பு போர்ட் சிட்டி திட்டம் தொடர்பான ஒப்பந்தமும் கைச்சாத்தாகவுள்ளது. சீன துறைமுக நிறுவனம் இந்தத் திட்டத்தில் முதற்பகுதிக்கு 1.3 பில்லியன் டொலர்களை முதலீடு செய்யவுள்ளது.
இதேவேளை, இரு நாட்டு தலைவர்கள் மத்தியிலான சந்திப்பின்போது சீனாவின் சில்க் பாதை திட்டத்துக்கு மஹிந்த ராஜபக்ஷ தனது ஆதரவை வெளியிடுவார். சர்வதேச அரங்கில் சீனா அளித்துவரும் ஆதரவிற்கும் அவர் தனது நன்றியைத் தெரிவிப்பார்.

### சர்வதேச

கள் என்றும், இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெறுவதாகவும் தெரியவருகிறது.
அதேவேளை, எதிர்வரும் 27ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை கிளிநொச்சியில் நடைபெறவுள்ள அமர்வில் சர்வதேச நிபுணர்கள் கண்காணிப் பாளராக பங்கேற்பார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
அத்துடன், உள்ளகப் போர்க் குற்ற விசாரணைக் குழுவின் இடைக்கால விசாரணை அறிக்கை 2015ஆம் ஆண்டிலேயே வெளியிடப்படவுள்ளது.
குறிப்பாக கிளிநொச்சி பயணத்துக்குப் பின்னர்தான் அறிக்கை தயார்ப்படுத்தல் நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.
இதற்கிடையில், இது விடயம் சம் பந்தமாக மீள் விசாரணைக் குழு வொன்றை அமைப்பது பற்றியும் ஆராயப்பட்டுவருகிறது.

### வவுனியாவில்

குளம் பகுதியில் அமைந்துள்ள சிவில் பாதுகாப்பு படை அலுவலகத்தை சூழ்ந்துள்ள காட்டுப் பகுதியே நேற்று ஞாயிறுக்கிழமை மாலை தீப் பற்றி எரிந்துள்ளது. சம்பவம் குறித்து 119 பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து ஈரப்பெரிய குளம் மற்றும் வவுனியா பொலிஸார் தண்ணீர் பவுசர்களின் உதவியுடன், தீயைக்கட்டுப்படுத்த முனைந்தனர். எனினும் அது வேகமாக பரவியமையால் விமானப்படையின் தீயணைப்புப் படையினரும் சம்பவ இடத்திற்கு அழைக்கப்பட்டு தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்வாறு தீ விபத்து ஏற்பட்ட போதும் சிவில் பாதுகாப்பு படை அலுவலகத்திற்கு சேதம் ஏற்படவில்லை. அருகில் இருந்த வயல் நிலங்களுக்கு வைக்கப்பட்ட தீயே இவ்வாறு பரவியிருக்கக் கூடும் எனக் கருதப்படுகிறது. இது தொடர்பான விசாரணைகளை ஈரப் பெரியகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த)

### மனித உரிமை

அவர் அங்கு மேலும் தெரி வித்ததாவது:-
கடந்த 5 வருடங்களாக என்னுடைய பதவிக்காலத்தில் மனித உரிமைகள் இல்லத்துக்கும் மனித உரிமை ஆணைக் குழுவுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ளது. அத்துடன் தற்போது யாழ்.மாவட்டத்தில் மனித உரிமை மீறல் குற்றங்களே அதிகமாக இடம் பெற்று வருகின்றன.
நாளாந்தம் முறைப்பாடு பதிவு செய்பவர்களில் அடிப்படை உரிமை மீறல்களை விட மனித உரிமை மீறல்கள் குறித்தே அதிக முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுவதை அவதானிக்க முடிந்துள்ளது.
ஆற்றுப்படுத்தும் நிலையமாக மனித உரிமைகள் இல்லம் செயற்பட்டுவரும் நிலையில் இந்தப் பட்டச் சான்றிதழ் ஊடாக நீதித்துறையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. இந்தச் சான்றிதழைப் பெற்றவர்களுக்கு இதன் பின்னரே அதிகளவான சமூகப் பொறுப்புக்கள் உள்ளன. இவர்கள் கல்வியோடு மட்டும் நின்றுவிடாது 50 வீதமான பயனை சமூகத்துக்காக வழங்கவேண்டும்.
இதேவேளை, மனித உரிமைகள் இல்லம் சிவில் சமூகத்தை ஒன்றிணைக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. எதிர்காலத்திலும் இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் - என்றார்.
மனித உரிமைகள் இல்லத்தின் இணைப்பாளர் சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 6 மாதக் கற்கைநெறியைப் பூர்த்தி செய்த 24 மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகச் சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட தொழில் திணைக்களத்தின் உதவிப் ணிப்பாளர் ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (த-14)

### 4 வயதுச்

தெரிவித்தனர்.
பிரதான சந்தேகநபர், பொதுமக்களின் உதவியுடன் குருநாகல் வெல்லவ திகம என்னுமிடத்தில் வைத்துச் சனிக்கிழமை, பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
சுற்றிவளைத்துப் பிடித்த பொதுமக்கள் அவரை நிர்வாணமாக்கியதுடன் பாதங்களில் பலத்த காயங்கள் ஏற்படும் வகையில் தாக்கியுள்ளனர்.
சந்தேகநபர் குழந்தையைக் கடத்துவதற்கு முன்னர், குழந்தையுடைய தாயின் உடைகளை வெட்டியெறிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.
குருநாகல், கனேவத்தை, அம்பகொலவெள பிரதேசத்தில் உள்ள வீட்டில் தூங்கிகொண்டிருந்த போது இச் சிறுமி கடந்த 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை கடத்தப்பட்டதுடன் வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டார்.
கடத்தல் விவகாரத்தை கேள்வியுற்று அங்கு சென்ற ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த அக்குழந்தையின் தாய், மகள் கிடைத்ததும் சகலதையும் தெரிவிப்பேன். அதுவரையிலும் எங்களை தொந்தரவு செய்யவேண்டாம் என்று கூறியிருந்தமை தெரிந்ததே. (த)

### போர்க்

சட்டத்தை மறு ஆய்விற்குட்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ள இந்த குழுவினர், சர்வதேச மனிதாபிமான சட்டம் அதன் தற்போதைய வடிவில் இலங்கையின் உள்நாட்டு போரின் இறுதித் தருணங்களில் நிலவிய அசாதாரண சூழலை கருத்தில்கொள்ள வில்லை என குறிப்பிட்டுள்ளனர்.

### ஐ.நாவின்

தொடர்ந்தும் தாம் இணைந்து செயற்படத் தயார் என்று இலங்கையின் பிரதிநிதி மனித உரிமைகள் சபையில் தெரிவித்துள்ளார். (த)

# உயர், மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் தமிழ் மொழிபெயர்ப்பாளரை நியமியுங்கள்

## கிழக்கு மாகாண உறுப்பினர் சம்சுடீன் அமைச்சர் வாசுதேவவிடம் கோரிக்கை

கொழும்பு, செப். 15

உயர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் தமிழ் மொழிபெயர்பாளர்களை நியமிக்குமாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி ஆரிப் சம்சுடீன் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவை அவரின் அமைச்சில் நேரில் சந்தித்து இந்த வேண்டுகோள் அடங்கிய மனுவை சம்சுடீன் கையளித்துள்ளார்.

அந்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது:-

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திலிருந்து கொழும்பிலுள்ள உயர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களுக்கு முறைப்பாட்டாளர்களினால் தமிழ் மொழியில் முன்வைக்கப்படுகின்ற மேன்முறையீடுகளை மொழிபெயர்ப்புச் செய்வதற்கு அதிக பணச் செலவு முறைப்பாட்டாளர்களுக்கு ஏற்படுகின்றது.

முறைப்பாட்டாளர்களின் வழக்கை இவ்விரு நீதிமன்றங்களிலும் முன்னெடுப்பதில் காலதாமதம் ஏற்படுகின்றது. இதனால் பல அசௌகரியங்களை முறைப்பாட்டாளர்கள் எதிர்நோக்குகின்றனர். இவற்றைக் கருத்திற் கொண்டு இவ்விரு நீதி மன்றங்களிலும் தமிழ் மொழி பெயர்ப்பாளர்களை நியமிக்க வேண்டியது அவசியமானது.

சிங்கள மொழிமூலம் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் மேன் முறை யீடுகளை விசாரிப்பதற்கு மொழி பெயர்ப்பு அவசியமில்லை.

ஏனென்றால் அதிகமான உயர்நீதிமன்ற நீதிபதிகள் அந்த மொழியில் பரீட்சயமுடையவர்களாக இருப்பதனாலாகும். இருப்பினும் சிங்கள மொழிமூலம் வழக்கு தொடுநபர்கள் மீது சுமத்தப் படாத ஒரு செலவு விரையம் தமிழ் மொழிமூலம் வழக்குத் தொடுநபர்களுக்கு ஏற்படுகிறது.

ஏறக்குறைய 40 ஆயிரம் ரூபா முதல் 60 ஆயிரம் ரூபா வரையான தொகையை தமிழ் மொழி மூலம் வழக்கு தொடுநபர்கள் மீது சுமத்துவது பெரும் அநீதியாகும்.

இந்தச் செயற்பாடானது சட்டத்தின் முன் அனைவரும் சமன் என்ற அடிப்படைக் கோட்பாட்டை மீறுவதாகவும் உள்ளது.

எனவே இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-10)

## முஸ்லிம் கவுன்சிலின் வருடாந்த கூட்டம்



கொழும்பு, செப். 15

முஸ்லிம் கவுன்சிலின் வருடாந்த கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

முஸ்லிம் கவுன்சிலின் தலைவர் என்.எம். அமீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் களனி பல்கலைக் கழகத்தின் பட்டமேற்படிப்பு மற்றும் பௌத்த பாலி கற்கைகளின் பேராசிரியர் கொட்டிபிட்டிய ராகுல தேரர் பிரதான உரை நிகழ்த்தினார்.

நிகழ்வில் முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா தலைவர் அஷ்ஷேக் றிஸ்விமுப்தி, ஜாமி ஆநளீமியா பணிப்பாளர் கலாநிதி எம்.ஏ.எம். சுக்றி ஆகியோரும் உரையாற்றினர். (த-10)

## 46 அபிவிருத்தித் திட்டங்கள் இரண்டு நாள்களில் ஆரம்பம்



மட்டக்களப்பு, செப். 15

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 46 இடங்களில் இரண்டு நாள்களில் கிராமத்துக்கு ஒரு வேலைத்திட்டம் மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளீதரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கடந்த வெள்ளி, சனி ஆகிய இரு தினங்களில் பிரதேச செயலாளர் எம். கோபாலரெத்தினம் தலைமையில் நடந்த இந்த நிகழ்வை அந்தப் பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் அபிவிருத்திச் சங்கம் விளையாட்டுக் கழகங்கள் ஒன்றிணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

இந்த நிகழ்வில் அமைச்சரின் செயலாளர் பொன். ரவீந்திரன், பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர்களான திருமதி என்.பாக்கியராசா மற்றும் எஸ். சசிதரன், திவிநெகும உத்தியோத்தர்கள், பொருளாதார அமைச்சின் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

ஒரு கிராமத்துக்கு ஒரு வேலைத்திட்டம் என்னும் திட்டத்தின் கீழ் ஒரு கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுக்கு ஒவ்வொரு திட்டம் வழக்கப்பட்டு ஒரு அபிவிருத்தித் திட்டத்துக்குத் தலா 10 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு இரண்டு நாள்களிலும் ஆரம்பித்து வைக்கப் பட்ட 46 அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கும் 460 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டதாக மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் எம். கோபாலரெத்தினம் தெரிவித்தார்.

இதன்போது துறைநீலவணை, பெரியகல்லாறு, கோட்டைக்கல்லாறு, ஒந்தாச்சிமடம், மகிழூர், மகிழூர் முனை, பட்டிருப்பு, களுதாவளை, தேற்றாத்தீவு, செட்டிபாளையம், குருக்கள்மடம், போன்ற கிராமங்களில் உள்ள 46 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலேயே இந்தத் திட்டங்கள் ஆரம்பிக்க வைக்கப்பட்டன. (த-32)

## குவைத் பல்கலைக்கழகத்துக்கு இலங்கை மாணவர்கள் தெரிவு

கொழும்பு, செப். 15

குவைத் கல்வி அமைச்சினால் இந்த வருட பல்கலைக் கழக அனுமதிக்காக நடத்தப்பட்ட உயர்தரப் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்று நான்கு இலங்கை மாணவர்கள் குவைத் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குவைத் குர்துபா இஸ்லாமிய கல்லூரியில் கல்வி பயின்ற மாணவர்களான பஸால் முஹம்மத் முளப்பர், பயாஸ் முஹம்மத் மஹ்ரூப், அஷ்ரப் முஹம்மத் அக்ரம், ஷஸான் முஹம்மத் பியாஸ் ஆகியோரே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஒரே தடவையில் இலங்கை மாணவர்கள் நால்வருக்குக் குவைத் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது இதுவே முதற் தடவையாகும்.

குவைத் உயர் கல்வி அமைச்சின் கீழ் கடந்த பல தசாப்தமாக இயங்கி வரும் இந்தப் புலமைப் பரிசில் திட்டத்தின் ஊடாக இதுவரை ஐம்பதுக்கும் மேற்பட்ட இலங்கை மாணவர்கள் சிறப்பான முறையில் சித்தி எய்தி தமது கலைமாணி, முதுமாணிப் பட்டங்களை முடித்துவிட்டு குவைத்திலும் வெளிநாடுகளிலும் உயர் பதவிகளை வகித்து வருவது குறிப்பிடத்தக்கது. (த-10)

## ஜனவரி 8ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் ?

கொழும்பு, செப். 15

ஜனாதிபதித் தேர்தலை 2015ஆம் ஆண்டு முதல் இரண்டு வாரங்களுக்குள் நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனடிப்படையில் ஜனவரி மாதம் 7ஆம் திகதிக்கும் 11ஆம் திகதிக்கும் இடைப்பட்ட நாளொன்றில் தேர்தல் நடைபெறும் என்றும்- பெரும்பாலும் 8ஆம் திகதி தேர்தல் நடத்தப்படலாம் என்றும் அந்தத் தகவல்கள் கூறுகின்றன.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நவம்பர் 20ஆம் திகதி அறிவிப்பார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக் காலத்தின் முதல் நான்கு வருடங்கள் நவம்பர் 19ஆம் திகதியுடன் நிறைவடைகின்றன.

ஜனாதிபதித் தேர்தலை 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இறுதிப் பகுதியில் நடத்துவதற்கு அரசு கலந்தாலோசித்திருந்த நிலையில், பாப்பரசர் பிரான்சிஸ், ஜனவரி மாதம் 13 ஆம் திகதி இலங்கைக்கு பயணம் செய்ய விருப்பதனால் அவருடைய வருகைக்கு முன்னரே தேர்தலை நடத்தி முடிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளதாகவும் ஊவா மாகாண சபைத் தேர்தலுக்குப் பின்னர் ஜனாதிபதி தேர்தலுக்கான ஆரம்பக் கட்ட வேலைகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்னெடுக்கவுள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (த)

## சர்வதேச மாநாட்டில் கலந்துகொள்வதற்கு இலங்கை அதிகாரிகளுக்கு விஸா மறுப்பு

### இராணுவத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்பதால்

கொழும்பு, செப். 15

கனடாவில் நடைபெற்று வரும் சர்வதேச சிறைச்சாலைகள் தொடர்பான மாநாட்டில் பங்கேற்கச் சென்ற இலங்கை அதிகாரிகள் இருவருக்கு விஸா வழங்கக் கனடா அரசு மறுத்துள்ளது.

இலங்கையின் இரு அதிகாரிகள் இராணுவத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பர் என்ற சந்தேகத்திலேயே அவர்களுக்கு விஸா வழங்க கனேடிய அரசு மறுத்துவிட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சிறைச்சாலைகள் தொடர்பான மாநாடு கனடாவில் கடந்த 7ஆம் திகதி தொடங்கி நேற்று வரை நடைபெற்றது. இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக கைத்தொழில் அபிவிருத்தி ஆணையாளர் திஸ்ஸ ஜயசிங்க, வெலிக்கடை சிறைச்சாலை அத்தியட்சகர் எமில் ரஞ்சன் ஆகியோர் பங்கேற்கவிருந்தனர். எனினும் இவர்கள் இலங்கை ஆயுதப் படையைச் சேர்ந்தவர்களாக இருப்பர் எனச் சந்தேகம் தெரிவித்த கனேடியத் தூதரகம், அவர்களுக்கு விஸா வழங்க மறுப்புத் தெரிவித்துவிட்டது.

இதனால் இலங்கை சார்பில் எவரும் இந்த மாநாட்டில் பங்கேற்கவில்லை என சிறைச்சாலைச் செய்தி தொடர்பாளர் தெரிவித்தார்.

மேலும் இலங்கை அதிகாரிகளுக்கு விஸா வழங்க மறுப்புத் தெரிவித்ததன் மூலம் அவர்களின் உரிமையை கனடா மீறிவிட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

18 நாடுகள் கலந்துகொண்டுள்ள இந்த மாநாடு கடந்த ஆண்டு இந்தியாவில் நடைபெற்றது. அப்போது இலங்கை சார்பில் ஒரு அதிகாரியே பங்கேற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த)

## அருண் செல்வராஜனின் காதலியிடம் விசாரணை

சென்னை, செப். 15

தமிழகத்தில் மிகப்பெரிய நாசவேலையை நடத்தும் சதித் திட்டத்துடன் உளவு பார்த்ததாகத் தேசிய புலனாய்வுக் குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த பாகிஸ்தான் உளவாளியான, அருண் செல்வராஜனின் காதலி என்று சந்தேகிக்கப்படும் பெண்ணிடம் தேசிய புலனாய்வுக் குழுவினர் விசாரணை நடத்தியுள்ளனர்.

அருண் செல்வராஜன் தங்கியிருந்த சென்னை சாலிகிராமத்தில் உள்ள வீட்டுக்கும், நுங்கம்பாக்கத்தில் உள்ள அலுவலகத்துக்கும் [illegible] அடிக்கடி வந்து சென்றுள்ளார். தேசிய புலனாய்வுக் குழுவினர் நடத்திய விசாரணையில், சென்னையைச் சேர்ந்த அந்தப் பெண்ணை அருண் செல்வராஜன் காதலித்து வந்ததும், கடந்த சில மாதங்களுக்கு முன்பு அந்த பெண்ணோடு திருமணம் நிச்சயிக்கப்பட்டிருப்பதும் தெரிய வந்தது.

இதையடுத்து அருண் செல்வராஜனின் காதலியிடம் பொலிஸார் இரகசிய விசாரணை நடத்தி, அவரிடம் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

இதேபோன்று அருண் செல்வராஜனுக்கு வீட்டை வாடகைக்கு அளித்த வீட்டு உரிமையாளர், அலுவலகத்தை வாடகைக்கு அளித்தவர் மற்றும் அக்கம்பக்கத்தினரிடமும் தனித்தனியாக விசாரணை [illegible]ப்பட்டு வருகிறது என்று இந்திய [illegible] தெரிவிக்கின்றன. (த)

## ரிஷாத் தலைமையில் குழு கட்டார் நாட்டுக்கு பயணம்

கொழும்பு, செப். 15

அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமையிலான இலங்கைக் குழு உத்தியோகபூர்வ பயணமாக நேற்றுமுன்தினம் கட்டார் நாட்டுக்குப் பயணமாகியது.

மூன்று நாள் பயணத்தை மேற்கொண்டுள்ள இந்தக் குழுவினர் இரு நாடுகளுக்கிடையிலான பொருளாதார மேம்படுத்தலுக்கும், முதலீடுகளை அதிகரிப்பதற்குமான உடன்படிக்கையை மேற்கொள்ளவுள்ளனர்.

கட்டார் நாட்டின் பொருளாதார வியாபார அமைச்சர் ஷேக் அகமட் பின் யாசின் பின் முகம்மட் அல்தானி மற்றும் கைத்தொழில் வர்த்தகத் துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் முக்கியத்துவம் மிக்க இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைத்தொழில் மற்றும் வர்த்தகம், நிதி, நீதி, வெளிநாட்டு விவகாரம், மீன்பிடி மற்றும் நீரியல் வளம், கலாசார மற்றும் கலை அலுவல்கள் ஆகிய அமைச்சுக்களின் உயர் அதிகாரிகள் இலங்கை சார்பாக இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர். (த-10)

# கடவுச் சீட்டுக்கு ஒக்ரோபர் முதல் கைவிரல் அடையாளம் அவசியம்

கொழும்பு, செப். 15
புதிதாக கடவுச்சீட்டுகளை பெற விண்ணப்பம் செய்யும் இலங்கையர்கள் தமது உயிரியல் தகவல்கள் அல்லது கைவிரல் அடையாளங்களை வழங்கும் முறையை நடைமுறைப் படுத்த குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அமைச்சரவைக்கு ஜனாதிபதி தாக்கல் செய்த யோசனை ஒன்றுக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கைவிரல் அடையாளங்களைப் பெற்று கடவுச்சீட்டுகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாகக் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் எம்.என். ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கடவுச்சீட்டுகளைப் பெற விண்ணப்பித்தவர்களின் கைவிரல் அடையாளங்களை பெற அவர்கள் குடிவரவு திணைக்கள அலுவலகத்திற்கு அழைக்கப்பட உள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார். (த)



சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் இந்திய மத்திய அரசுக்கு எதிராக நாம் தமிழர் கட்சி ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளது. நேற்று முற்பகல் 10.00 மணிக்கு சென்னை, சேப்பாக்கத்திலுள்ள தமிழக அரசு விருந்தினர் மாளிகை அருகே இந்தப் போராட்டம் நடைபெற்றது. ஐ.நா. விசாரணைக் குழு இந்தியா வர அனுமதிக்க வேண்டும் என்று தமிழக சட்டப் பேரவையில் தமிழக அரசே முன்மொழிந்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிப் பிரதமர் மோடிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என இதில் கோரப்பட்டது. (த)

# சீனாவைப் பாராட்டும் மஹிந்த

கொழும்பு, செப். 15
சீன ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் 21 ஆம் நூற்றாண்டின் புதிய கடலோர 'சில்க்' பாதைத் திட்டத்தை தான் வரவேற்கிறார் என்று தெரிவித்துள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தத் திட்டம் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு முக்கியமானது என்றும் குறிப்பிட்டுள்ளார். சீனாவின் சின்குவா செய்தி நிறுவனத்துக்கு அளித்துள்ள பேட்டியில் இதனை தெரிவித்துள்ள ஜனாதிபதி, இலங்கை சீனாவின் இந்தத் திட்டத்தில் இணைந்து கொள்ளும் என குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-
கடந்த 28 வருட காலப்பகுதியில் சீன ஜனாதிபதி ஒருவர் முதற்தடவையாக இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இரு தரப்பு உறவுகளுக்கும் இவரது வருகை முக்கியமானது. வரலாற்று ரீதியாகவே இரு நாடுகளுக்குமிடையில் நல்லுறவு காணப்படுகின்றது. கடந்த மே மாதத்தில் இரு நாடுகளும் தங்களுடைய உறவுகளை மேலும் தரமுயர்த்தியதை தொடர்ந்து நட்புறவு புதிய சகாப்தத்திற்குள் நுழைந்துள்ளது. ஜனாதிபதியாக நான் பதவியேற்ற பின்னர் ஏழு தடவைகள் சீனாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளேன். இதன் போது பல தடவைகள் சீனா ஜனாதிப[illegible] நான் சந்தித்துள்ளேன் சீனாவுடன் வ[illegible]கத்தையும் முதலீட்டையும் அதிகரிக்க இலங்கை விரும்புகின்றது. 2009 இல் உள்நாட்டு போர் முடிவடைந்த பின்னர், இரு நாடுகளும் புனர்நிர்மாணம் மற்றும் ஏனைய துறைகளில் ஒத்துழைத்துள்ளன. - என்றார். (த)


## வங்கிக்கடன் உதவி

உங்களின் உயர்கல்விக் கனவை நனவாக்கிக் கொள்வதற்கு

WISDOM BUSINESS ACADEMY

**Wisdom** கல்வி நிறுவனம் கல்விக் கடன் வசதியை வங்கிகளிடமிருந்து பெற்றுத் தருவதற்குத் தயாராக உள்ளது.

இதற்கான ஒழுங்குகளை ஏற்பாடு செய்து தருவதற்கு வங்கிகளின் நேரடிப் பிரசன்னத்துடனான சேவை ஒன்றை நாம் ஏற்பாடு செய்துள்ளோம்.

இடம் : Wisdom Business Academy
154 A/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
காலம் : 16.09.2014
நேரம் : முற்பகல் 10.00 மணி

(C/16225)(7.6.3)

அனைவரும் வாரீர்!
அதிபயன் அடைவீர்!

மேலதிக தகவல்களுக்கு :
021 222 0727, 021 720 0777

## வீடுதேவை

நடுத்தரக் குடும்பம் ஒன்றுக்கு இலுப்பையடிச் சந்திக்கும் திருநெல்வேலிச் சந்திக்கும் இடையில் பலாலிவீதியை அண்மித்த பகுதியில் வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு விலைக்குத் தேவை.
தொடர்பு : 077 542 7426

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


## மரண அறிவித்தல்

திருமதி அன்னபூரணம் திருநாவுக்கரசு



நயினாதீவைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி அன்னபூரணம் திருநாவுக்கரசு** நேற்று (14.09.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.113, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
021 222 5528, 077 394 6198 (52279)(45.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமணத்தின் ஓராண்டு நிறைவுநாள் வாழ்த்துக்கள்



இன்று (15.09.2014) லண்டனில் தமது திருமண ஓராண்டு நிறைவினை மிகவும் எளிமையான முறையில் கொண்டாடும் புத்தூர் நவக்கிரியைச் சேர்ந்த
**சிற்சபேசன் (சபேஸ்)**
**பிறேமவதனி (பிறேமா)**
தம்பதியினரை இன்றுபோல் என்றென்றும் சீரும் சிறப்புமாக வாழ்கவென மனநிறைவோடு வாழ்த்துவோர்.

அம்மா, அப்பா, அண்ணா குடும்பம்,
தம்பி மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.
"நவசைலம்"
இராஜ வீதி, நவக்கிரி, புத்தூர்.


நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும் யாழ். நகரிலும் வன்னியிலும் வெளிவருகிறது சட்டத்தரணி Ikram Jeseen

அடிப்படை ஆங்கிலம்
FUNDAMENTAL ENGLISH (83)
(பூரண தமிழ் மொழிமூல விளக்கங்களுடனும் விளக்கப்பட உதாரணங்கள் மூலமும்)

கிடைக்குமிடங்கள் யாழ்.நகரில்
POOBALASINGHAM BOOK DEPOT 021 222 6693
ANNAI BOOK DEPOT 021 222 9881
AMBIKAI BOOK CENTRE 077 887 5357

கிளிநொச்சியில்
S.B.BOOK SHOP 077 625 8120
PAARKAVI BOOK CENTRE 021 228 5635

வவுனியாவில்
KAVITHA BOOK STORE 024 222 2012 (52257)(4.6.3)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.